கிராம நலம்

செப்டெம்பர் '61   13 ந.பை







விவசாய உற்பத்தியை பெருக்க, ஒவ்வொரு கிராமமும் அனுபவ சாத்தியமான உற்பத்தித்திட்டத்தை உருவாக்கி நடத்த, பஞ்சாயத்து ஆட்சியின் கீழ் பொறுப்பேற்பட்டிருக்கிறது. (இதுபற்றி நடைபெற்ற ஆராய்ச்சி மாநாட்டின் விவரம் 3-ம் பக்கம் பார்க்கவும்)

கூட்டுப் பொறுப்பு வேண்டும்

“தனி மனிதர்கள், சொந்த வாழ்வில், இந்தியாவில் சுத்தமாயிருப்பது போல் வேறெந்த நாட்டிலும் இல்லை என்று அயல் நாட்டு அறிஞர்களே கூறியுள்ளனர். ஆனால், பொது சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால், இந்தப் பெருமை நம்மைச் சேராது என்றே அஞ்சுகிறேன். தனிப்பட்டவர்கள் சுத்தமாயிருக்கின்றனர் ; ஆனால் ஊர்களும் கிராமங்களும் சுத்தமாயிருப்பதில்லை. நம் குடும்பம் வரை நாம் கவனித்துக்கொள்ளுகிறோமே ஒழிய, பொது நலனைப் பறறி நமக்கு அக்கறையில்லை. ஊர் முரண்பாடு ஏற்பட்டால், குடும்ப நலனுக்காக எதையும் பலி கொடுத்து விடுவோம்.

ஒரு குடும்பத்தினர், தம் வீட்டைச் சுத்தமாய் வைத்துக் கொள்வார்கள். ஆனால் பக்கத்து வீட்டைப் பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை. தங்கள் வாசலில் குப்பை, பூச்சி புழு ஒன்றும் இல்லாமல் பார்த்துக்கொள்வார்கள். ஆனால் அவற்றையெல்லாம் பக்கத்து வீட்டு வாசலில் வீசத் தயங்கமாட்டார்கள். இது மாதிரி, கூட்டுப் பொறுப்பு இல்லாததால் தான், நம் கிராமங்கள் குப்பைக் கிடங்குகளாகி விட்டன.”

—மகாத்மாவின் மணி மொழி

கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 6 | செப்டம்பர் 1961 | படி 12

சென்னை நகரில்

மாநில பஞ்சாயத்து மாநாடு

அக்டோபர் 8-ந்தேதி, நேருஜி ஆரம்பித்து வைக்கிறார்

நமது பஞ்சாயத்து ஆட்சியின் சரித்திரத்தில், அக்டோபர் மாதம், விசேஷ இடம் பெற்றுவிட்டது. இம்மாதம் 2-ந்தேதி, மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் என்பது எல்லோருக்கும் தெரியும். 1960-ம் ஆண்டு, காந்தி ஜெயந்தி நன்னாளில் தமிழ் நாட்டிலே, புதிய பஞ்சாயத்து ஆட்சி ஆரம்பமாயிற்று. அன்று முதல், ஒரு வருஷ காலத்திற்குள், மூன்று தொகுதிகளாக, 373 பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்டுவிடும். இதன் மூலம், காந்தியடிகள் உருவாக்க எண்ணிய கிராம ராஜ்யத்துக்கு—பொறுப்பு வாய்ந்த ஊராட்சி மன்ற வளர்ச்சிக்கு—வலுவான அஸ்திவாரம் போடப்பட்டு விட்டது என்று கூறலாம்.

அத்துடன், 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், மற்றொரு முக்கிய நிகழ்ச்சி நடைபெறும் என்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். தமிழ் நாட்டில் உள்ள சுமார் 17,000 ரெவின்யூ கிராமங்கள் எல்லாம் சேர்ந்து, இன்றைய தினம், ஏறக்குறைய 12,000 கிராமப் பஞ்சாயத்துக்கள் அமைந்துள்ளன. இந்தப் பஞ்சாயத்துக்களின் தலைவர்கள் எல்லோரும் கலந்து கொள்கின்ற மிகப் பெரிய மாநில மாநாடு ஒன்றை, முதன் முதலாக, தமிழ்நாட்டின் தலைநகரில், நடத்த ஏற்பாடாகியுள்ளது. சுமார், 12,000 கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் கலந்துகொள்கின்ற இம்மாநாட்டை, நமது பிரதமர் நேருஜி அவர்கள் ஆரம்பித்து வைக்க ஒப்புக் கொண்டுள்ளார். அக்டோபர் 8-ந்தேதி முற்பகல் ஆரம்பமாகும், இம்மாநாடு, 9-ந்தேதி மாலையில் முடிவடையும்.

இரண்டு நாள் நடைபெறும் இம்மாநாடு, ஜனநாயக வரலாற்றில், தனியிடம் பெறத் தக்க சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாகும். ஏனெனில், "குடிமக்கள் சொன்னபடி, குடிவாழ்வு" என்று பாரதியார் கூறிய ஜனநாயகக் கொள்கையை நிறைவேற்றுகின்ற பொதுஜன அரசாங்கம் ஏற்பாடு செய்யும் மிகப் பெரிய மாநாடாக இது விளங்கும். எனவே, மாநில பஞ்சாயத்து மாநாடு, சகல வகைகளிலும் சிறப்பாக இனிது நடைபெற, எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

மாவட்டங்களிலிருந்து, பஞ்சாயத்துத் தலைவர்களை, இந்த மாநாட்டுக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பு, அந்தந்த மாவட்ட அதிகாரிகளை—சிறப்பாக, கலெக்டர்

களைச்சாரும். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும், பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிகளும் (Ext ns cn Officers f r Panchayats) பிரதிநிதிகளுக்குத் தேவையான பிரயாண வசதி, உணவு ஏற்பாடுகள் முதலியவற்றை, தக்க முறையில் கவனித்து ஏற்பாடு செய்வார்கள். சென்னை நகரில், அக்டோபர் 7-ந்தேதி இரவு முதல், 9-ந்தேதி இரவு வரை (ஒவ்வொரு நாளும், காலையில், சிற்றுண்டி, பகல்உணவு, இரவுச் சாப்பாடு ஆகியவை மாத்திரம்) உணவளிக்கும் பொறுப்பை, மாநாட்டு அமைப்பாளர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

மாநாட்டிற்கு வரும் எல்லாப் பிரதிநிதிகளும், விசேஷ பஸ்கள் மூலம், சென்னைக்கு வந்து போக ஏற்பாடாகி வருகிறது. பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்கியிருக்கும் இடங்களிலும், உணவருந்தும் பல்வேறு முகாம்களிலும், மாநாட்டுக் கொட்டகையிலும் தக்க வசதிகள் செய்ய, முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ஆயினும், எதிர்பாராத வகையில் ஏற்படும் அசௌகரியங்களை, மாநாட்டுப் பிரதிநிதிகள் பொறுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

மாநில பஞ்சாயத்து மாநாடு, பொறுப்புணர்ச்சிக்கு, ஒரு சிறந்த உதாரணமாக விளங்க வேண்டுமென்று எதிர்ப்பார்க்கிறோம். ஒழுங்கு, அமைதி, பொறுமை, உறுதி, முதலிய நற்குணங்கள், கிராமப் பண்பாட்டுக்குச் சிறப்பளிக்கும் ஆபரணங்களாகும். எனவே, எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களும், முதன் முதலாகக் கலந்து கொள்கின்ற இம்மாநில மாநாடு, ஒழுங்கின் அடையாளமாகவும், கட்டுப்பாட்டின் சின்னமாகவும், பொறுப்புணர்ச்சியின் சிகரமாகவும், உறுதியின் கவசமாகவும், விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

கிராம மக்களைப் பெருவாரியாகக் கொண்ட நம்நாடு, எல்லாத்துறைகளிலும் வளர்ச்சி பெறவேண்டுமென்றால், கிராம சமுதாயம், சீரும் சிறப்பும் பெற்று வாழவேண்டும். அதற்கு வழிகாட்டுவதே, புதிய பஞ்சாயத்து ஆட்சி. காந்தியடிகள் விரும்பிய ஒன்றுபட்ட சமுதாயம் உருவாவதற்கு "பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லோரும், ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள்" என்ற எண்ணம் வேரூன்ற வேண்டும். தம்முடைய அறிவு, அனுபவங்களை, மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டு, அதன் மூலம் கூட்டுறவின் ஆற்றலை உணர்ந்து கொள்ள வேண்டும். சுயநலம், தற்பெருமை, அவசரம், ஆத்திரம் முதலிய தீய குணங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டும். நூற்றுக் கணக்கான பிரதிநிதிகள் ஒன்று கூடி வாழ நேரும்போது, இதற்கேற்ற பயிற்சி பெறும் நல்ல சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

சுமார் 12000 கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் ஒன்று கூடும்போது, உணவு, படுக்கை வசதி முதலிய ஏற்பாடுகளில் பல்வேறு சிக்கல்கள் உண்டாவது இயற்கையே. பொறுமையோடு அந்தச் சிக்கல்களைத் தீர்க்க, அனைவரும் ஈடுபட வேண்டும். மாநாட்டுப் பிரதிநிதிகள் எல்லோரும், ஒரே குடும்பமாகத் தங்களைக் கருதிக்கொண்டால், எல்லாப் பிரச்சினைகளையும் சுலபமாகத் தீர்த்துவிடலாம். தேச பிதா மகாத்மா காந்தியின் ஆணையை நிறைவேற்றும், பொறுப்பு வாய்ந்த ஆக்கத் தொண்டர்களின் திருக்கூட்டமாகத் தங்களைப் பாவித்துக்கொண்டால், ஒற்றுமையின் அடிப்படையில் அமைந்த சகிப்புத் தன்மை, எல்லாப் பிரதிநிதிகளுக்கும் எளிதில் வந்துவிடும்.

சுருங்கச் சொன்னால், ஒற்றுமை, கூட்டுறவு, ஓயாத உழைப்பு, உறுதி வாய்ந்த கொள்கை, பொது நல ஆர்வம் முதலிய ஆற்றல் மிக்க நற்குணங்களை அற்புத ஆயுதங்களாகக் கொண்ட செயல் வீரர்களின் அகிம்சைப் பாசறையாக—சத்திய வழியில் தளராத நம்பிக்கைகொண்ட ஊராட்சித் தலைவர்களின் பயிற்சி நிலையமாக—வளம் கொழிக்கும் இராம ராஜ்யத்தை சிருஷ்டிக்கத் துடிக்கும் சிந்தனைச் சிற்பிகள் சேர்ந்த ஆராய்ச்சிக் கூடமாக—மாநில பஞ்சாயத்து மாநாடு விளங்கும் என்று நம்புகிறோம்.

பஞ்சாயத்து ஆட்சியின் இதயநாதம், ஒவ்வொரு கிராமத்திலும் எதிரொலி செய்து எண்ணற்ற ஆக்கப்பணிகள், நாடெங்கும் நடைபெறுவதற்கு, இம்மாநாடு வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை. 'கிராமநல, தலநிர்வாகத்துறை'யினர் ஏற்பாடு செய்யும் இம் மாபெரும் மாநாட்டை, எல்லா வகையிலும் சிறப்புறச் செய்யுமாறு, எல்லோரையும் வேண்டுகிறோம்.

— ஆசிரியர்,

விவசாய அபிவிருத்திக் கருத்தரங்கு

[பஞ்சாயத்து ஆட்சி வரலாற்றிலேயே முக்கியமாகக் குறிப்பிடத்தக்க மகாநாடு ஒன்று, சென்னையிலே, 1961-ம் ஆண்டு, ஆகஸ்டு 21, 22, 23 தேதிகளில் நடைபெற்றது. பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் தலைவர்களும், சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளும் அங்கே ஒன்றுகூடி, விவசாயத் திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தும் வேலை முறை பற்றி, ஆலோசனை நடத்தினார்கள்.

உணவு உற்பத்தித் திட்டம், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவைகளின் கூட்டுப் பொறுப்பில் இப்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணியை, பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் ஏற்று நடத்தும்பொழுது, நடைமுறையில் உண்டாகின்ற பல்வேறு பிரச்சினைகளை எப்படிச் சமாளிக்கலாம் என்பதைப் பற்றி ஆராய, இந்தக் கருத்தரங்கு நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது.

பொறுக்கு விதைகளைக் கிராம சகாயகர் மூலம் விநியோகித்தல், கால்நடைகளைப் பராமரித்தல், மீன் வளத்தைப் பெருக்குதல், மண் வளப் பாதுகாப்பு, ரசாயன உர விநியோகம், குடி மராமத்து வேலைகள், கிராமக் கணக்குகளைத் திருத்திச் செம்மைப்படுத்துதல் முதலான முக்கிய விஷயங்கள், கருத்தரங்கில் ஆராயப்பட்டன. இந்தக் கருத்தரங்கில் நடைபெற்ற விவாதங்களைத் தக்கவாறு ஆராய்ந்து பார்த்து, அரசாங்க உத்தரவுகள் விரைவில் வெளியாகும். இந்த விவசாயக் கருத்தரங்கின் முக்கிய நிகழ்ச்சிக் குறிப்பை, இங்கே சுருக்கமாக வெளியிட்டிருக்கிறோம்.

ஆசிரியர்.]

திரு. வி. கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ்.
(விவசாயத்துறை இயக்குநர்)

வரவேற்புரை

"நம் நாடு செழிக்க வேண்டுமென்றால், விவசாயம் சிறந்தோங்கவேண்டும். அதற்கு, ஒவ்வொரு கிராமமும் விரிவாகத் திட்டமிட்டு வேலை செய்யவேண்டுமென்று, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தீர்மானமாகியிருக்கிறது. முக்கியமாக, பஞ்சாயத்துக்கள், இந்தப் புதிய பொறுப்பை, ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று முடிவாகி, அதற்காக, நிதி வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கருத்தரங்கில் கலந்தாலோசிக்க வேண்டியவை

அடுத்த ஐந்தாண்டுக் காலத்துக்குள், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், சுமார் $2\frac{1}{2}$ லட்சம் ரூபாய் விவசாய அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், நேரடியாக பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு லட்சமும், பஞ்சாயத்துக்கள் வசூலித்துக்கொள்ளவேண்டிய $\frac{1}{2}$ லட்சம் நன்கொடையை ஒட்டி, $1\frac{1}{2}$ லட்சமும் கிடைக்கும். இந்தத் தொகையை, எவ்வாறு பயன்படுத்தினால், விவசாய அபிவிருத்தி மிகவும் சிறந்த முறையில் நடைபெற வழி பிறக்கும் என்பதைக் குறித்து, கலந்தாலோசிக்க, இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்பாக, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இங்கே வரவழைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் அனுபவ உரைகளையும் ஆலோசனைகளையும் கேட்டறிந்து, ஆவன செய்ய வேண்டுமென்பதே அரசாங்கத்தின் நோக்கம். விவசாய இலாகா வகுத்துள்ள திட்டக் குறிப்புகளையும், செலவினங்களின் விவரங்களையும், ஒரு சில அதிகாரிகள், பொது ஜனங்கள் ஆகியோர் எழுதியனுப்பிய ஆலோசனைகளையும், உங்களிடம் சமர்ப்பித்திருக்கிறேன். அவற்றையெல்லாம் ஆழ்ந்து சிந்தித்து அனுபவ பூர்வமான உங்கள் கருத்துக்களை அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ரெவினியூ போர்டு அங்கத்தினர், மாவட்டக் கலெக்டர்கள், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், கால்நடை, மீன் வளர்ச்சி, புள்ளி விவரம் முதலிய இலாகாத் தலைவர்களும், கிராம நல இலாகா அதிகாரிகளும் இங்கே வந்துள்ளனர். இந்தக் கருத்தரங்கு மாநாட்டை, நமது விவசாய அமைச்சர் ஆரம்பித்து வைக்கிறார். மூன்று நாட்கள் நடைபெறும் இந்தக் கூட்டங்களுக்கு, நமது பிரதமச் செயலாளர் தலைமை வகிப்பார். விவசாய முன்னேற்றத்துக்கும், பஞ்சாயத்து நிர்வாகத்துக்கும் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தி, காரிய சாத்தியமான திட்டங்களை உருவாக்க இங்கே கூடியுள்ள அனைவரையும் நான் உள்ளன்போடு வரவேற்கிறேன்."

அமைச்சரின் அறிவுரை

விவசாய அபிவிருத்திக் கருத்தரங்கைஆரம்பித்து வைத்த, அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் அவர்கள் பேசிய பேச்சின் சாரம் வருமாறு :

விவசாய அபிவிருத்திக்காக, கிராமப் பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் என்ன செய்ய

'விவசாய அபிவிருத்திக் கருத்தரங்குக் கூட்டம்.'

வேண்டும் என்பதைப் பற்றி, விரிவாக ஆராய்ந்து, தக்க நடவடிக்கை எடுப்பதற்காக, இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எல்லாப் பிரச்னைகளையும் ஆற அமர நீங்கள் யோசித்து உங்கள் கருத்துக்களையும் பரிமாறிக் கொள்வீர்களென்று நம்புகிறேன்.

விவசாயத்துறையில் நடந்துள்ளது என்ன?

சமுதாய நலத் திட்டத்தின் முக்கிய நோக்கம், விவசாய வளர்ச்சி என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால், இது வரையில் என்ன நடந்துள்ளது ?

தனிப்பட்ட விவசாயிகளின் முயற்சியால், ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது வாஸ்தவமே. அரசாங்கத்தின் விவசாய இலாகா, எத்தனையோ திட்டங்களை வகுத்து, நல்ல முறையில் நிறைவேற்றி வருகிறது. அத்துடன், சமுதாய நலத் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் மூலம், அவற்றை மேலும் சிறந்த முறையில் நிறைவேற்ற முயன்று வருகிறோம்.

சமுதாயத்திட்டமும் பஞ்சாயத்து ஆட்சிமுறையும்

ஆனால், ஒரு சிலர், "சமுதாய நலத் திட்டம் இப்போது இல்லையே! எதற்கெடுத்தாலும், "பஞ்சாயத்து" என்று சொல்கிறார்களே" என்று, தெரிந்தும் தெரியாமலும், குறை சொல்கிறார்கள். சமுதாய நலத் திட்டம், எங்கும் போய்விடவில்லை. அந்தத் திட்டத்தை, இன்னும் உற்சாகமாகவும் உறுதியாகவும் நிறைவேற்றுவதற்காக, பஞ்சாயத்து ஆட்சி அமைக்கப்படுகிறது. நிரந்தரமான வகையில், பொது மக்கள் கூட்டுறவோடு, கிராம நல வேலைகளை நிறைவேற்றவே, புதிய பஞ்சாயத்துச் சட்டம் வந்திருக்கிறது. இந்த உண்மையை உணர்ந்து கொண்டால், யாரும் குறை சொல்லமாட்டார்கள்.

ஜனநாயக ஆட்சி நடைபெறும் இந் நாளில், எந்தக் காரியமும், மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றால்தான், நிறைவேற முடியும். அப்படியானால், " மக்கள் ஒத்துழைப்பைப் பெறுவது எப்படி " என்ற பிரச்னை எழுகிறது. முதலாவதாக, நிறைவேற்ற எடுத்துக்கொள்ளும் திட்டத்தைப்பற்றி, பொது மக்கள் நன்றாக உணரச் செய்ய வேண்டியது, மிகவும் அவசியம். " எதற்காக இந்தப் புதிய திட்டம் ? இதனால் ஏற்படும் பலா பலன்கள் என்ன ? நன்மை ஏற்படுவது நிச்சயம்தானா ? இதற்காகச் செய்ய வேண்டிய முயற்சிகள் என்னென்ன ? அந்த முயற்சியில் யார் யார் ஈடுபட வேண்டும் ? " என்ற பல்வேறு கேள்விகளுக்கு, சரியான பதில்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். சந்தேகங்கள் ஏற்பட்டால், அவற்றைத் தக்க முறையில் கலந்தாலோசித்து, தீர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான், தெளிவு பிறக்கும். இது போன்ற கருத்தரங்குகள், மகா நாடுகள், கூட்டங்கள் முதலியவற்றில், அவ்வப்போது ஏற்படும் பிரச்னைகளை ஆராய்ந்து பார்த்து, அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொண்டால், சந்தேகங்கள் நீங்கி, உண்மைகள் விளங்கும் அதன் பயனாக, தெளிவு ஏற்படும். தெளிவு உண்டான பிறகு, செயலில் இறங்கும் துணிவு ஏற்படுவது இயற்கை

செயலாற்றும் துணிவோடு, மன உறுதியும், சலியாத உழைப்பும், கூட்டு முயற்சியும் ஒன்று சேர்ந்தால், எந்தக் காரியமும் எளிதில் கை கூடும்.

திட்டத்தைச் செயல்படுத்தும்பொழுது ஏற்படுகின்ற சிக்கல்கள்

நம்முடைய விவசாய அபிவிருத்தித் திட்டங்கள், ஏட்டளவில் மிகவும் கவர்ச்சிகரமாக உள்ளன. ஆனால், அவற்றை நிறைவேற்றும்போது, எத்தனையோ சங்கடங்கள் ஏற்படுவதைக் காண்கிறோம். உதாரணமாக, "கிராம சேவக் என்கின்ற சமுதாய நல இலாகா ஊழியரின் முக்கியப் பொறுப்பு, விவசாயமே" என்று, திட்ட வட்டமாகக் கூறப்பட்டுள்ளது. 100-க்கு 80 பங்கு விவசாய வேலையையே அவர்கள் கவனிக்க வேண்டும் என்று உத்திரவிடப்பட்டுள்ளது. அதைப் போலவே, அவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டு, அறிக்கைகளும் தயாரிக்கப்படுகின்றன. ஆனால், நடைமுறையில் காண்பதென்ன? அவர்கள் பல்வேறு வேலைகளையும், (Multi-purpose works) செய்தாக வேண்டியிருக்கிறது. இன்றுள்ள நிலையில், விவசாயத்துக்காக மட்டும் அவர்கள் எந்த அளவுக்கு உண்மையில் வேலை செய்ய முடிகிறது என்பதை, நேரில் ஆராய்ந்து பார்த்து அறிபவர்களே கூற முடியும். எனவே, நீங்கள் உருவாக்கும் விவசாயத் திட்டங்களில், கிராம சேவக்கை, எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை, ஆராய வேண்டியது மிகவும் அவசியம்.

அடுத்தபடியாக, கிராமங்களில் உள்ள கூட்டுறவுசங்கங்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும், சரியான முறையில் இணைப்பு ஏற்பட வேண்டும். கிராம நலனுக்கு—சிறப்பாக, விவசாய முன்னேற்றத்துக்கு—இந்த இரண்டு ஸ்தாபனங்களும் நல்ல முறையில் செயலாற்ற வேண்டும். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று அனுசரணையாக நடந்துகொள்ள வேண்டுமே தவிர, போட்டி ஸ்தாபனங்களாகவோ, எதிரிடையான காரியங்கள் செய்பவையாகவோ இருக்கக் கூடாது. விவசாயத்துக்கு வேண்டிய கடன் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது. கூட்டுறவு சங்கங்களின் முக்கியப் பொறுப்பாகும். கிராமங்களின் பொதுநல வேலைகளைக் கவனிப்பதோடு, விவசாய உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிகளில் ஜனங்களை ஈடுபடுத்த வேண்டியது பஞ்சாயத்துக்களின் கடமையாகும்.

விவசாய அபிவிருத்திக்குத் தேவையானவை என்னென்ன என்பது, உங்களுக்கே தெரியும். பொறுக்கு விதைகளால், மகசூல் அதிகமாவதை, அனுபவத்தில் கண்டிருக்கிறீர்கள். ஆனால், பொறுக்கு விதைகள் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அதற்காகவே விவசாய இலாகா, விதைப் பண்ணைத் திட்டம் (Seed farm Scheme) ஏற்படுத்தி, எல்லாப் பஞ்சாயத்துக்களிலும், நல்ல ரக பொறுக்கு விதைகள் கிடைக்கச் செய்ய, ஏற்பாடாகி வருகிறது.

கிராமசஹாயகரின் பணி

ஒவ்வொரு கிராமத்திலும், பொறுக்கு விதைகளை விநியோகிக்கும் பொறுப்பை, பொதுநல ஆர்வமுள்ள ஒரு சில விவசாயிகளிடம் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கிராமத்தின் விவசாய வளர்ச்சியில் அக்கரையும், பரோபகார சிந்தனையும் உள்ள, தகுதி வாய்ந்த கிராமவாசிகள் இந்தப் புதிய கடமையை, உள்ளன்போடு செய்ய முன் வருவார்களென்று நம்புகிறேன். இத்தகைய விவசாயிகள், "கிராம சஹாயகர்" என்ற புதுப் பெயரால் அழைக்கப்படுவர். கிராமப் பஞ்சாயத்தின் அபிப்பிராயத்தை அனுசரித்து, பொறுக்கு விதைகளை ஒவ்வொரு கிராமத்திலும் தக்க முறையில் விநியோகிக்க, "கிராம சஹாயகர்" தொண்டாற்றுவார்களென்று எதிர்பார்க்கிறேன்.

வயலுக்கு உரம்-வாழ்வுக்கு நலம்

வயலுக்குத் தேவையான உரம் போடவேண்டியது மிகவும் அவசியம். ஆனால், சமீப காலத்தில் இரசாயன உரத்தையே பெரும்பாலான விவசாயிகள் எதிர்பார்த்து ஏங்கி வருகின்றனர். இந்த நிலைமை நீடிக்கக் கூடாது. ஒவ்வொரு கிராமத்திலும் பசுந்தாள் உரம், குப்பை உரம், முதலியவற்றைத் தக்க முறையில் அதிகமான அளவுக்குத் தயார் செய்யத் திட்டமிட வேண்டும். பஞ்சாயத்து யூனியன்களும், கிராமப் பஞ்சாயத்துக்களும், இந்த வகையில் கவனம் செலுத்த வேண்டும். சமுதாயக் குப்பை உரக் குழிகள் (Community Compost pits) போடுவதில், கிராமப் பஞ்சாயத்துக்கள் பொறுப்பேற்றுக் கொள்ளலாம். அதற்கு வேண்டிய ஆலோசனையை விவசாய இலாகா நிச்சயம் அளித்து உதவும். பஞ்சாயத்து யூனியன் இத்துறையில் அக்கறை காட்டினால், எல்லா ஊர்களிலும் அதிகப்படியான உரம் தயாராகி தானிய உணவு அதிகமாக வழி பிறக்கும். குப்பை உரத்தோடு,,பசுந்தாள் உரத் தயாரிப்புக்கான திட்டங்கள் வகுக்க, காட்டிலாக்காவும் (Forest Department(முன் வந்துள்ளது.

மரங்கள் நாட்டின்செல்வம்

மரங்களை நடுவதில், பஞ்சாயத்துக்கள், உடனடியாக பொறுப்பேற்க வேண்டும். மரம் செடிகள் வளர்ப்பதினால், கிராமத்தின் அழகும் செழிப்பும் அதிகமாகின்றன. அத்துடன், விறகு, மாட்டுத் தீவனம், முதலியவற்றிற்கு வேண்டிய மரம், செடிகளையும் அவசியம் வளர்க்கவேண்டியிருக்கிறது. சவுக்கு மரங்களை ஏராளமாகப் பயிரிடலாம். நெய்வேலி நிலக்கரி வந்தாலும், நம் மாநில மக்களின் விறகுப் பஞ்சம் தீராது. ஒவ்வொரு கிராமத்திலேயும் விறகுக்கு வேண்டிய மரங்களைத் தக்க இடத்தில் வைத்து வளர்த்தால்தான், நம் தேவை பூர்த்தியாகும்.

இதை உணர்ந்தே, சமீபத்தில் உருவாகியுள்ள நில உச்சவரம்பு மசோதாவிலும், ஒரு முக்கியமான விதிவிலக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதாவது, மக்களுக்குத் தேவையான விறகை உற்பத்தி செய்யும் முயற்சிக்குப் பாதகம் விளைவிக்கக் கூடாது என்ற நோக்கத்

தின் பேரில், விறகுக்குப் பயன்படும் மரங்களை வளர்க்கின்ற நிலப் பகுதிகள், உச்ச வரம்பு மசோதாவில் இருந்து விலக்கப்பட்டுள்ளன.

காட்டு வளத்தைக் கண்ணேபோலப் போற்றுவோம்

உலகத்திலுள்ள அனேக நாடுகளில், காடுகளைப் பயிரிட்டு வளர்த்து வருகிறார்கள். நாம், இயற்கையின் இஷ்டத்திற்கு விட்டுவிடுகிறோம். அது மட்டுமல்ல, நன்றாக வளரும் காடுகளை, கண்டபடியெல்லாம் அழித்துவிடுகிறோம். ஆனால், மற்ற நாடுகளில் இந்த விஷயத்தில் விசேஷக் கவனம் செலுத்தி, விவசாயம் செய்வது போலவே, காடுகளையும்பாது காத்துப்பயிரிட்டு வளர்க்கிறார்கள். நம் மாநிலத்தில் சேலம் மாவட்டப்பகுதியில் இத்தகைய காடு வளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்த, உத்தேசித்து இருக்கிறோம் இதுதவிர, நம்முடைய மலைப் பகுதிகள் பல வற்றில், மரங்கள் அழிக்கப்பட்டு, செழுமை குறைந்து வருவதைக் காண்கிறோம். உதாரணமாக திருக்கழுக்குன்றம், பழனி, முதலிய குன்றுகளைக் கூறலாம். இந்தக் குன்றுகளை வலம் வந்தால் பலவித நோய்கள் தீர்ந்துவிடும் என்பது மக்களிடையே பல காலமாக உள்ள நம்பிக்கை பழங் காலத்தில் அடர்த்தியான மரங்கள் அங்கு இருந்து வந்தன. ஆனால், இப்பொழுதோ, மரங்கள் அவ்வளவு அதிகமாக இல்லாமல், குறைந்து விட்டன. காட்டிலாகாவும், விவசாய இலாகாவும், இந்தக் குன்றுகளில் என்னென்ன மரங்களை மறுபடியும் நட்டு வளர்க்கலாம் என்று திட்டமிட வேண்டும். இதற்குத் தேவையான ஓரளவு நிதி வசதிகளை, அந்தந்த தேவஸ்தானங்களைக் கொண்டு, செய்து கொள்ளலாம் .

பயிர்ப் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் விவசாய இலாகா, இப்பொழுது தீவிர கவனம் செலுத்தி வருகிறது. ஏராளமான விவசாயிகள் பயிர்களை, நோய்களினின்று தடுப்பதற்காக, பூச்சி மருந்துகளை பலவற்றை உபயோகிக்கின்றனர். இது மிகவும் வரவேற்கத் தக்கதே, இந்த மருந்து வகைகளெல்லாம், எல்லோருக்கும் கிடைக்கும்படிர் செய்யும் வழிவகைகளை ஆராய்ந்து, முடிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். சமீபத்தில் ஆகாய விமானத்திலிருந்து பயிர்ப் பாதுக்காப்புக்கான பூச்சி மருந்துகளைத் தெளித்த செய்திகள், நீங்கள் அறிந்ததே. இதைக் குறை கூறுகின்றவர்கள் கூட, இதனால் ஓரளவு நன்மை ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்க முடிவதில்லை.

சத்துள்ள உணவு-காய்கறிகள் வளர்ப்பு

மக்கள் சத்துள்ள உணவை உட்கொள்ள வேண்டும். அரிசி, தானிய வகைகள் மட்டுமில்லாமல் பழங்களையும் காய் கறிகளையும் மக்கள் உட்கொள்ள வேண்டும். பழங்களும் காய்கறி வகைகளும், சத்துள்ள உணவுக்கு மிகவும் அவசியமானவை. இவற்றை, கிராமங்களில் சுலபமாகப் பயிரிட்டுக் கொள்ளலாம். ஆனால், இதில் போதிய கவனம் செலுத்தப்படுவதில்லை. முக்கியமாக, பழச் செடிகள் வைப்பதற்கான எல்லாவித உதவிகளையும் விவசாய இலாகா உற்சாகத்தோடு செய்யும்; பஞ்சாயத்துக்களும், இந்த ஆலோசனைகளைப் பெற்று, ஆவன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

காய் கறிகள் பயிரிடுவதைப்பற்றி, ஒரு முக்கியமான செய்தியைக் கூற விரும்புகிறேன். இதைக் குறித்து, நமது முதலமைச்சர் **ஸ்ரீ காமராஜ்** அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது, அவர் இதை மிகவும் வற்புறுத்திக் கூறினார். அதாவது, ‘ஒவ்வொரு கிராமத்திலும், காய்கறி உற்பத்திப் பெருக்க வேண்டும் என்பதை, எல்லோரும் நன்கு உணரச் செய்ய வேண்டும். கிராம ஜனங்கள் நேரில் பார்த்துப் பயன் அடைவதற்காக, காய் கறிப் பண்ணைகளை (Demosntration farms for Vegetable Cultivation) நடத்த, விவசாய இலாகா, முன் வரலாம். கிராமவாசிகள் இதனால் ஏற்படும் இலாபங்களைப் புரிந்து கொண்டால், மக்கள் சத்துள்ள உணவு பெற வழி பிறக்கும்.’ முதலமைச்சர் சொன்ன இந்தக் கருத்தை, உங்களிடம் சமர்ப்பிக்கிறேன். பஞ்சாயத்துக்கள், இந்த வகையில் வேலை செய்து, நல்ல பலனைக் காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய வளர்ச்சியில் உடனடியாக பலன்களை ஆராய்வதோடு நில்லாமல், எதிர்கால சமுதாயம் வளம் பெற்று வாழ்வதற்கான நடவடிக்கைகளையும், முன் ஜாக்கிரதையோடு நாம் செய்தாக வேண்டும். மண் அரிப்பைத் (Soil erosion) தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது, மிகவும் அவசியம். மகாராஷ்டிரா போன்ற பிரதேசங்களில், இதற்கான விசேஷத் திட்டங்கள் நிறைவேறி வருகின்றன. நமது பிரதம காரியதரிசி ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி அவர்கள், இதை வற்புறுத்திக் கூறி இருப்பது நீங்கள் அறிந்ததே. அதைப்பற்றியும் நீங்கள் ஆராய்வீர்கள்.”

விவசாய அமைச்சர் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்ததும், கூட்டத்திற்குத் தலைமை வகித்த, தமிழ்நாடு அரசாங்கப் பிரதம காரியதரிசி ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ்., அவர்கள். தமது முன்னுரையில், பின்வரும் முக்கிய கருத்துக்களை வெளியிட்டார் :—

பஞ்சாயத்து, பஞ்சாயத்துயூனியன், ஆகியவற்றின் நிதி நிலைப்பட்டியலில், விவசாய அபிவிருத்திக்கென்று இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், ஐந்து வருடத்திற்கு இந்த இரண்டரை லட்ச ரூபாயை, விவசாய வளர்ச்சிக்காகச் செலவிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில், ஒரு லட்சம் ரூபாய், பஞ்சாயத்து யூனியன்களுக்கு நேரிடையாகவும், பஞ்சாயத்துக்கள் வசூலிக்கும் அரை லட்சம் நன்கொடையுடன், சர்க்கார் மானியம், 1½ லட்சமாக, பஞ்சாயத்துக்களுக்குக் கிடைக்கும். இந்தத் தொகையை, சுமார் 23 தலைப்புக்களில் உள்ள பல் வேறுபட்ட திட்டங்களுக்காக, எந்தக் கணக்குப்படி செலவிடலாம் என்பதைப்பற்றிய, ஒரு குறிப்பு உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. விவசாய இலாகா தலைவர், கால்நடை இலாகா தலைவர், மீன் வளர்ச்சி இலாகா தலைவர் ஆகியவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். மூன்று நாட்கள், இதைப்பற்றி யெல்லாம் விரிவாக ஆராய்ந்து பார்த்து, உங்கள் அநுபவங்களையெல்லாம் சாவகாசமாகக் கேட்டறிந்து, காரியசாத்தியமான ஒரு திட்டத்தை உருவாக்க எண்ணியிருக்கிறோம். இங்கே வெளியிடப்படும் கருத்துக்களின் அடிப்படையில், அரசாங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்படும். பொது ஜனத் தலைவர்களும், அதிகாரிகளும் சொல்கின்ற எல்லாவற்றையும் நேரில் கேட்டறிய வேண்டும் என்பதற்காகவே, நான் இந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

விவசாய மகசூல் கணக்கில் உள்ள சிக்கல்கள்

நமது விவசாய அமைச்சர் அவர்கள், இந்தக் கருத்தரங்கத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில், எல்லா விஷயங்களையும் விளக்கமாகத் தெளிவாக்கினார்கள். ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் அமைச்சர் குறிப்பிடவில்லை. அதாவது, கிராமத்தில் இன்றுள்ள விவசாய மகசூல் கணக்குகள் பற்றிய சீர்திருத்தம் குறித்து, அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்காக, ஒரு விசேஷக்

[தொடர்ச்சி 20-ம் பக்கம் பார்க்க]

கிராம அபிவிருத்திக் கமிஷனரின் கடிதம் :

"ஊருக்கு நல்லது சொல்வேன்"
(பாரதியார்)

பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு

அன்புள்ள பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு,

வணக்கம். சென்ற ஜூலை மாதம் உங்களுக்குக் கடிதம் எழுதிய பிறகு ஒரு முக்கியமான சம்பவம் நிகழ்ந்தது. மத்திய சர்க்காரில் அமைச்சராகவிருக்கும் ஸ்ரீ எஸ். கே. டே அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்திருந்தார்கள். அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டில் நான்கு தினங்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், வடார்க்காடு முதலிய ஜில்லாக்களுக்குச் சென்று ஜில்லா அபி விருத்திக் கவுன்சில் அங்கத்தினர்களைக் கண்டு பேசினார்கள். பஞ்சாயத்து இராஜ்ய இயக்கத்தைப்பற்றிய அவருடைய கருத்துக்களை அந்தக் கூட்டங்களில் எடுத்துச் சொன்னதுடன், பஞ்சாயத்துத் தலைவர் களுக்கும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கும் தங்களுடைய வேலைகளைச் செய்வதில் ஏதேனும் கஷ்டங்கள் இருக்கின்றனவா என்பதைப்பற்றியும் விசாரித்து, அறிந்து கொண்டார்கள். இந்த ஜில்லாக்களையெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு ஜூலை மாதம் 28உ சென்னையில் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்கள். சமுதாய அபிவிருத்தி, பஞ்சாயத்து இந்த வேலைகளைப்பற்றித் தமிழ்நாடு சர்க்காருக்கு ஆலோசனை சொல்வதற்காகப் பார்லிமெண்ட் அங்கத் தினர்களையும், சட்டசபை அங்கத்தினர்களையும் கொண்ட 25 பேர்கள் அடங்கிய ஒரு கமிட்டி இருக்கிறது. இந்தக் கமிட்டியினர் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை முத லமைச்சர் அவர்களின் தலைமையில் கூடி இந்த இலாகா சம்பந்தமாகச் சொல்ல வேண்டிய யோசனைகளைச் சொல் கிறார்கள். (மேற்குறித்துள்ள அங்கத்தினர்களைத் தவிர இக் கமிட்டியில் அமைச்சர் ஸ்ரீ இராமையா அவர்களும், அமைச்சர் ஸ்ரீமதி லூர்தம்மாள் அவர்களும், தலைமைக் காரியதரிசி அவர்களும், கிராம அபிவிருத்திக் கமிஷனர் அவர்களும் அங்கத்தினர்களாக இருந்து வருகிறார்கள்.)

கிராம சபைக் கூட்டம் கூட்ட யோசனை

ஸ்ரீ எஸ். கே. டே அவர்கள் தாம் சுற்றுப் பிரயாணம் செய்த ஜில்லாக்களில் நல்ல முறையில் பஞ்சாயத்து யூனியன்கள் இயங்கி வருவதாகவும், முக்கியமாக விவசாய வளர்ச்சி வேலைகளில் சர்க்காரும், பஞ்சாயத்து யூனியன் களும் அதிகக் கவனம் செலுத்தி வருவதாகவும் குறிப் பிட்டார்கள். மேற்கொண்டு செய்ய வேண்டிய வேலை களைப்பற்றி அவர் குறிப்பிடும்போது, பஞ்சாயத்துத் தலை வர்கள், உப தலைவர்கள்—இவர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி கொடுக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அத்துடன், கிராமத்தில் வயது வந்த ஆண் பெண் எல்லோரையும் கொண்ட **கிராம சபைக் கூட்டம்** ஒன்று கூட வேண்டுமென்றும், கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் களும், உப தலைவர்களும், அங்கத்தினர்களும் தாங்கள் செய்யவிருக்கும் வேலைகளை அந்த கிராம சபையிடம் கூறி அவர்களுடைய அங்கீகாரம் பெறுவது அவசியம் என்றும், மற்ற இராஜ்யங்களில் இம்முறை அமுலில் இருந்து வருவதாகவும் கூறினார்கள்.

நம்முடைய பஞ்சாயத்துச் சட்டத்தில் கிராம சபை சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படவில்லை. என்றபோதிலும், வருஷம் இரண்டு முறையாவது கிராமப் பஞ்சாயத்துக்கள் அந்தச் சபையைக் கூட்டி, தாங்கள் செய்து வரும் வேலைகள், செய்யவிருக்கும் வேலைகள், பஞ்சாயத்தின் வரவு செலவுத் திட்டங்கள்—இவற்றை அந்தக் கிராம சபைக்கு அறிவிப்பது நல்லது என்று அக் கமிட்டியினர் அபிப்பிராயப்பட்டார்கள்.

கிராம சபை என்றால் என்ன ?

கிராம சபை என்ற ஒரு ஸ்தாபனம் ஏற்பட வேண்டுமா, அதற்கு என்ன அதிகாரம், அதற்கும் இன்று தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள கிராமப் பஞ்சாயத்து சபைகளுக்கும் என்ன சம்பந்தம் என்பவற்றைப்பற்றிய நுணுக்கமான விஷயங்களை எடுத்துச் சொல்லுவது அவசியம் என்ற போதிலும், சுருக்கமாக ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். அதாவது, நம்முடைய இராஜ் யத்தில், கிராம சபைகள் சட்டபூர்வமாக இல்லாவிட்டாலும் கூட, கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களும், அங்கத்தினர் களும், இடையிடையே ஊர்ப் பொதுக் கூட்டம் கூடும்படிச் செய்து, கிராமத்தின் வரவு செலவுத் திட்டம் என்ன என்பதைக் கிராமத்தார்களுக்குத் தெரியும்படிச் செய் தால், அது பஞ்சாயத்து வேலைகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. உதாரணமாக, இப் போது இருந்து வரும் பஞ்சாயத்து வருமானத்தை, வரிகளின் மூலம், இன்னும் அதிகமாக்குவதற்கு, பஞ்சாயத்து தீர்மானம் செய்த போதிலும், அந்தத்

தீர்மானத்தை விளக்கி, அதன் அவசியத்தை கிராம ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி, அதை அவர்கள் ஒப்புக்கொள்ளும்படிச் செய்தால், கிராம வரி வசூலில், அதிகச் சிரமம் இராது. மேலும், நம்முடைய கிராமத்தினுடைய வருமானம் என்ன, செலவுகள் என்ன என்ற விவரங்களைக் கிராமத்தில் உள்ளவர்கள் அத்தனை பேரும் அறிந்திருப்பார்களானால், அது பஞ்சாயத்து நிர்வாகத்திற்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்தின் புதிய வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தவுடன், அந்தத் திட்டத்தைப்பற்றிக் கிராம மக்கள் அறிந்துகொள்வதற்காக ஒரு மகா சபைக் கூட்டமும், ஆண்டு பூராவும் நடைபெற்ற வேலை விவரங்களைப்பற்றிய அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஒரு கிராம சபை கூட்டமும் கூட்டி, கடந்த ஆண்டில் பஞ்சாயத்து செய்து வந்த வேலைகள் என்னென்ன, அவற்றில் ஏற்பட்ட கஷ்டங்கள் என்னென்ன, இந்த வேலைகளை இன்னும் திறமையாகச் செய்வதற்கு கிராமத்தார்களுடைய ஒத்துழைப்பு எந்தெந்த விஷயங்களில் அவசியம் என்ற விபரங்களையெல்லாம் கிராம சபைக் கூட்டத்தில், அதாவது ஊர்ப்பொதுக் கூட்டத்தில் பஞ்சாயத்துத் தலைவர்கள் விளக்கிச் சொல்வார்களானால் அது மிகவும் உசிதமாகவிருக்கும்.

நம்முடைய கிராமங்களில் திருவிழா நடத்துதல் போன்ற ஊர்ப் பொதுக் காரியங்களுக்காகக் கிராமம் முழுவதும் கூடிப் பேசுவது என்பது பல கிராமங்களில் இன்றும் சகஜமாக இருந்து வருகிறது. அப்படிப்பட்ட பொதுக் கூட்டங்களில் பஞ்சாயத்துக்களின் வரவு செலவு விவரங்களைப்பற்றியும், நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களைப்பற்றியும் பேசுவதற்குச் சந்தர்ப்பம் இருந்தால் அது கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுக்கு மட்டுமல்ல, ஊரிலுள்ள வயது வந்த ஆண் பெண் அனைவருமே ஊரினுடைய நிர்வாகத்திற்கும், அபிவிருத்தி திட்டங்களுக்கும் தாமும் பொறுப்புள்ளவர்கள் என்று எண்ணி வேலை செய்வதற்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

பஞ்சாயத்துத் தலைவர்களே முன்வந்து கூட்டத்தைக் கூட்டுவது உசிதம்....

கிராம சபைக் கூட்டம் கூட வேண்டும், அதில் இன்னின்ன காரியங்கள் கவனிக்கப்படவேண்டுமென்று சர்க்கார் கிராமப் பஞ்சாயத்துக்களுக்குக் கட்டளையிட வேண்டுமென்று எண்ணுமல், பஞ்சாயத்துத் தலைவர்களே இப்படிப்பட்ட கிராம சபைகளை—அதாவது ஊர்ப் பொதுக் கூட்டங்களைக் கூட்டி கிராம மக்களுடன் கிராம சம்பந்தமான வேலைகளைப்பற்றி கலந்து பேசுவதற்கு ஏற்பாடு செய்வது, உசிதமாக இருக்கும்.

சட்டத்தைத் திருத்த வேண்டிய தேவையில்லை

ஸ்ரீ எஸ். கே. டே அவர்கள் சொன்ன இந்த நல்ல யோசனையைச் செய்வதற்காக, இப்போது சட்டத்தைத் திருத்த வேண்டுமென்ற அவசியம் எதுவுமில்லை. ஊர்ப் பொதுக் கூட்டம் கூடி பஞ்சாயத்துக் காரியங்களை அக் கூட்டங்களில் பேசக் கூடாது என்று தடுக்கும் ஷரத்து எதுவும், புதிய பஞ்சாயத்துச் சட்டத்தில் இல்லை. பஞ்சாயத்துச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களைப்பற்றி மட்டுமல்லாமல், கிராம அபிவிருத்திக்காக என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டுமோ, அவற்றைப்பற்றி, பஞ்சாயத்தும், ஊராரும் சேர்ந்து கலந்து பேசுவது, மிகவும் அவசியம்.

எனது முன்னைய கடிதங்களில் பஞ்சாயத்துத் தலைவர்கள், அந்தந்த ஊரை, ஒரு குடும்பம் போல் நினைத்துக் காரியங்கள் செய்ய வேண்டுமென்று சொல்லியிருந்தேன். ஊரெல்லாம் ஒரு குடும்பம் என்றால், எந்தக் காரியத்தையும், குடும்பத் தலைவன், குடும்பத்தாருடன் கலந்து ஆலோசித்து செய்வது நல்லதுதானே ?

"கிராம நல"த்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்

இந்தக் கிராம சபைகள் சம்பந்தமாகத் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள், இந்தக் கிராம சபைகள் பஞ்சாயத்துக்களுக்கு உதவியாக இருந்து வர வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் போன்ற விஷயங்களை, பஞ்சாயத்துத் தலைவர்கள் நன்கு யோசித்து, அவற்றை அமுல்படுத்துவதற்கு முயல்வீர்களானால், அது மிகவும் நலமாயிருக்கும். பஞ்சாயத்துத் தலைவர்கள், தங்கள் தங்கள் கிராமங்களில், இந்தக் கிராம சபைகள் சம்பந்தமாக எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை, மற்ற தலைவர்களும் அறிந்துகொள்ளும்படிச் செய்ய "கிராமநல" த்தை ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொள்வீர்கள் என்றே நம்புகிறேன்.

தங்கள் அன்புள்ள,

கோ. வேங்கடாசலபதி.

"பஞ்சாயத்துக்களும் குடிமராமத்தும்"

தஞ்சை மாவட்டம், கீழவேளூர் பஞ்சாயத்து யூனியனின் பாராட்டத்தக்க சாதனை

[தமிழ் நாட்டைப்பொறுத்தவரையில், புதிய பஞ்சாயத்துச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, நல்லதொரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. கிராம மக்கள் தம் பொறுப்புக்களை உணர்ந்து செயலாற்றத் தொடங்கியுள்ளனர். பல்வேறு துறைகளிலும் கிராம மக்கள் நேரடிப் பங்கு கொண்டு செயலாற்ற வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமும் ஆகும். காந்தியடிகள் கண்ட கிராம ராஜ்யக் கனவு மெல்ல மெல்ல நனவாகி வருவதைக் காண்கிறோம். தஞ்சை மாவட்டம் பாபநாசம், கீழவேளூர் பஞ்சாயத்து யூனியன்களில் இப்போழுது நடைபெற்று வரும் குடி மராமத்து வேலைகள் கிராமங்களில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சிக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும். சென்ற ஜூன்இதழில் பாபநாசம் யூனியனில் நடைபெற்று வரும் குடிமராமத்து வேலைகளைப்பற்றி எழுதியிருந்தோம். இந்த இதழில் கீழவேளூர் யூனியனில் நடைபெற்றுவரும் "குடிமராமத்து" வேலைகளைப்பற்றியவிவரங்களைத் தந்துள்ளோம். (இது பற்றிய படங்களை 23-ம் பக்கம் பார்க்க.)

—ஆசிரியர்.

தோற்றம்

தமிழ்நாடு அரசாங்கப் பிரதமச் செயலாளர் ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ். சென்ற 1961–ம் வருஷம் மார்ச் மாதம் 9–ந் தேதியில் தஞ்சை ஜில்லாவுக்கு விஜயம் செய்த பொழுது, மாவட்டக் கலெக்டர், இதர மாவட்ட அதிகாரிகள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ஆகியவர்களுடன் குடிமராமத்து வேலைகளைச் செய்வதன் அவசியத்தை வலியுறுத்தினர். அதையொட்டி பஞ்சாயத்து யூனியன் மூலம் மறைந்துபோன பணியாகிய குடி மராமத்து வேலையை எங்ஙனம் நன்முறையில் செயல் படுத்த முடியும் என்பதைப்பற்றி புனராலோசனை செய்து, கீழ்த்தஞ்சையில் கீழவேளூர் பஞ்சாயத்து யூனியனிலும், மேலத் தஞ்சையில் பாபநாசம் பஞ்சாயத்து யூனியனிலும் இந்த வேலையை எடுத்துச் செயலாற்றுவது என்று முடிவு செய்யப்பட்டது. இந்தத் திட்டமானது பஞ்சாயத்து யூனியனில் மக்களின் புதிய பொறுப்புணர்ச்சிக்கு தூண்டு கோலாக அமைவதுடன் ஒரு பெரிய வரப்பிரசாதமாகவும் கருதப்பட்டது.

பூர்வாங்க ஆய்வுவேலை

சம்பந்தப்பட்டஅ திகாரிகள், அதிகாரப் பற்றற்றவர்கள் கலந்து பேசி, கீழவேளூர் பஞ்சாயத்து யூனியனில் குடி மராமத்து வேலையைச் செய்ய வேண்டிய வழி முறை களைக் கீழே கண்ட மூன்று பிரிவுகளில் விரிவாக ஆராய்ந் தார்கள் :—

1. ஏற்படும் செலவை விவசாயிகளுக்குள் எப்படிப் பங்கிட்டுக்கொள்வது.

2. செய்யவேண்டிய வேலைக்கு என்ன தரத்தை நிர்ணயிப்பது.

3. வழித்துறைகள்.

முதற்பகுதிக்காக கீழ்க்கண்ட முடிவு எடுக்கப்பட்டது. "ஏ" பிரிவு வாய்க்கால் ஒன்று வெட்டுவதற்கு ஏற்படும் செலவுத் தொகையை அந்த குறிப்பிட்ட வாய்க்கால் பாயக்கூடிய அத்தனை ஆயக்கட்டுதாரர்களிடம் பங்கிட்டுக் கொள்ளவேண்டியது என தீர்மானிக்கப்பட்டது. "பி" "சி" பிரிவு வாய்க்கால்களுக்கும் இதே முறையை அனுசரித்து ஏற்படும் செலவை, அந்தந்த பஞ்சாயத்துப் பகுதியில் உள்ள ஆயக்கட்டுதாரர்களுக்குள் பங்கிடு செய்வது என முடிவு செய்யப்பட்டது.

இரண்டாவது பகுதியான தரம் நிர்ணயிப்பது சம்பந்தமாக, எல்லா "ஏ" "பி" பிரிவு வாய்க்கால் நீண்ட காலமாககுடிமராமத்து வேலைசெய்யாமல் புறக்கணிக்கப் பட்டு இருப்பதால், தேவையான, படிப்படியான தாழ்வு (Gradiation) கொடுத்து, நல்ல முறையில் வெட்ட வேண்டியது அவசியமாகக் கருதப்பட்டது.

மூன்றும் பகுதியான வழித்துறைகளை ஆராய்ந்து பார்த்தால் சராசரியாக ஏக்கருக்கு ரூ. $2\frac{1}{2}$ வீதம் செலவாகும் என்று கணக்கிடப்பட்டது. அதன்படி மக்களின் பங்கு ரூ. $1\frac{1}{2}$-ம் சர்க்கார் பங்கு ரூ. 1-ம் ஆகும். சற்றேறக் குறைய ஆயக்கட்டுகளின் பரப்பு 26,000 ஏக்கர் ஆகையால் சர்க்கார் பங்கு ரூ. 26,000, மக்கள் பங்கு ரூ. 39,000 ஆகும் என்று கணக்கிடப்பட்டது. இந்தத் தொகையை முன் பணமாகக் கொடுக்குமளவுக்கு அரசாங்கம் முன் வந்தது பாராட்டுக்குரியது. பிறகு சரியாக புள்ளி விபரம் தயாரித்ததில் மொத்தம் 30,000 ஏக்கர், பரப்பென்று கண்டு பிடிக்கப்பட்டது. மக்களிடமிருந்து வசூலான ரூ. 35,000 அந்தந்தப் பஞ்சாயத்து தலைவர்களுக்கு வாய்க்கால் வெட்டு வேலைக்காக ஒதுக்கப்பட்டது. அரசாங்கப் பங்கிலிருந்து ரூ. 20,000-க்கு மேலும் பஞ்சாயத்து தலைவர்களுக்கு பங்கிடு செய்யப்பட்டது. மக்கள் பங்கை வசூல் செய்வதில் எவ்வித கஷ்டமும் இல்லை. இது குறிப்பிடத் தக்கது.

புத்தாண்டுத் தினத்தன்று புனித பணி துவங்கியது

வாய்க்கால் வெட்டும் வேலையானது 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதி தமிழ் வருடப் பிறப்பன்று கீவளூர் கிராமத்தில் துவக்கி வைக்கப்பட்டது. மே மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து ஜூன் மாதம் மூன்ருவது வாரம் வரை எல்லாக் கிராமங்களிலும் வாய்க்கால் வெட்டு வேலை முழு மூச்சுடன் நடந்தது. எல்லாக் கிராமங்களிலும் ஒருமிக்க வேலை ஆரம்பித்து விட்டதால், வேலை செய்வதற்கு ஆள் தட்டு ஏற்பட்டது. மேலும் விவசாயிகள் ஜூன் முதல் வாரத்தில் வயல்களுக்கு எரு அடிக்க ஆரம்பித்தவுடன் வேலையாள் கிடைப்பது மிகவும் கஷ்டமாகி வாய்க்கால் வெட்டு வேலை ஜூன் முதல் வாரத்திலிருந்தே மிகவும் மெதுவாக நடைபெற்றது. இதனுல் சில இடங்களில் கொஞ்சம்தி அகக் கூலி கொடுத்து கூலி ஆட்களை நியமித்து வேலை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவ்வட்டாரத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் குடிமராமத்து வேலைக்காக ஏக்கர் ஒன்று ரூ. 1½ வீதம் வரியாக வசூலிப்பதென தீர்மானித்து ரூ. 35,000 வரை வசூல் செய்து பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்கப்பட்டது, எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் ஆரம்பத்தில் வேலையைச் செய்ய மிகவும் உபயோகமாக இருந்தது. இதுவும் குறிப்பிடத்தக்கது. சர்க்கார் பங்காகிய ரூ. 26,000 அந்தந்த பஞ்சாயத்துக்களுக்கு பங்கிடு செய்ய பஞ்சாயத்து யூனியன் வசம் இருந்தது. எல்லா வாய்க்கால் வெட்டுகளும் அள வெடுப்புகளும் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் தேதிக்குள் பூர்த்தியாகி ஒரு சில 'சி' பிரிவு வாய்க்கால்கள் மட்டும் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 27ம் தேதிக்குள் முடிக்கும் நிலையில் இருந்தன.

இத்தனை காலமாக அங்குமிங்குமாக மூன்றில் ஒரு பகுதி "ஏ" "பி" பிரிவு வாய்க்கால்கள் மட்டும் குடி மராமத்து வேலையாகச் செய்த நிலைமாறி இன்று எல்லா வாய்க்கால்களையும் ஒருமிக்க வெட்டக்கூடிய நிலை இத்திட்டத்தினுல் ஏற்பட்ட நன்மைகளில் ஒன்று.

இதுவரை தங்கள் நலம் கருதி பெரிய மிராசுதார்கள் முயற்சி எடுத்து குடிமராமத்து வேலைகள் செய்து வந்தது போக கிராமங்களில் பெரு அளவில் உள்ள நடுத்தர, றிய விவசாயிகள் உண்மையான ஊக்கமும் எழுச்சியும் கொண்டு குடிமராமத்து செய்யும் வேலை இத்திட்டத்தினுல் ஏற்பட்டது இரண்டாவது நன்மையாகும். பஞ்சாயத்துத் தலைவர்கள் கிராம விவசாயிகள் இவர்களின் தீவிரமான ஒத்துழைப்பினுல் குறிப்பிட்ட காலத்திற்குள் வாய்க்கால் வெட்டுக்கள் குறைந்த செலவில் நல்ல, திருப்தியான முறையில் வெட்டப்பட்டன.

சில குறைபாடுகள்

பல நல்ல அம்சங்களுடன், ஒரு சில சிறிய குறைகளும் ஏற்பட்டு விட்டன. எட்டு பஞ்சாயத்துக்களின் வழியாகவும் இரண்டு பஞ்சாயத்து யூனியன்களின் வழியாகவும் செல்லும் "தெற்கோடையார்" என்ற பெரிய கால்வாயை கால அளவு இல்லாததினுல் வேலை செய்து முடிக்க முடியவில்லை. இது சம்மந்தமான பஞ்சாயத்துக்கள் தங்கள் பஞ்சாயத்து எல்லைகளில் உள்ள வாய்க்கால்கள் வெட்டுவதில் முழு முயற்சி எடுத்துக்கொண்டதால், பொது வாய்க்காலான தெற்கோடையார் வெட்ட முடியாமல் போய் விட்டது. மொத்தம் இந்த யூனியனில் 144 மைல் நீளமுள்ள "ஏ" வாய்க்கால்களும் 213 மைல் நீளமுள்ள "பி" வாய்க்கால்களும் 65 மைல் நீளமுள்ள "ஸி" வாய்க்கால்களும் (ஆக மொத்தம் 422 மைல்கள்) சற்றேறக்குறைய ரூ. 75,000 செலவில் வெட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமாக 20 வருஷங்களுக்கு மேலாக வெட்டாமல் இருந்த திருக்கண்ணன்குடி வாய்க்கால், புத்தமங்கலம் வாய்க்கால் போன்ற வாய்க்கால்கள் 5 அடி ஆழம் வரையிலும் வெட்டப்பட்டு நல்ல முறையில் பாசனத்துக்குத் தண்ணீர் கிடைக்கப் பெற்றது. பஞ்சாயத்து யூனியனின் செயலாற்றும் தன்மையிலேயே ஒரு பெரிய நம்பிக்கையை மக்கள் மத்தியிலே ஏற்படுத்தியது சிறப்பாக குறிப்பிடத்தக்கது.

முக்கிய அறிவிப்பு

"கிராம நலம்" தொடங்கி, இந்த மாதத்தோடு ஆறு ஆண்டுகள் முடிவடைகின்றன. அடுத்த அக்டோபர் முதல் வாரத்தில் பிரதமர் நேரு தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்கிருர். அதே சமயத்தில், சென்னையில் தமிழ் நாடு பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாடு நடக்க இருக்கிறது. ஆகவே, "கிராம நலம்" அடுத்த இதழ் விசேஷ இதழாக வெளிவரும். அத்துடன், தமிழ் நாட்டில் உள்ள எல்லாப் பஞ்சாயத்துகள் பற்றிய விவரங்கள் அடங்கிய பட்டியல் அந்த இதழின் அனுபந்தமாக வெளிவரும்.

ஆசிரியர், "கிராம நலம்"

'கிராம நலம்' பத்திரிகை வெளியிடுபவர் :

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்., (பிரதம செயலாளர்),

செயலாளர், கிராம அபிவிருத்தி–தல நிர்வாகத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்.

ஆசிரியர் :

ஸ்ரீ எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.,

பொதுஜனத் தொடர்பு அதிகாரி, கிராம அபிவிருத்தி-தல நிர்வாகத் துறை.

கட்டுரைப்போட்டி—செப்டம்பர்மாத முதற் பரிசுபெற்ற கட்டுரை :

பூவேந்தி பஞ்சாயத்து புரிந்துள்ள சாதனைகள் :

சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்

[திரு. கரு. சீமைச்சாமி, தலைவர், பூவேந்தி பஞ்சாயத்து, இராமநாதபுரம் மாவட்டம்]

உணவு உற்பத்தி விஷயத்தில், பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மேற்கொள்ளவேண்டிய பொறுப்புக்கள்

அடிமை ஆட்சி ஒழிந்துபோய் குடியரசு ஆட்சி நடக்கும் உன்னத சகாப்தத்தில் வாழ்கிறோம். புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டுக்கொண்டே வருகிற ஒரு புது யுகத்தில் நாம் வாழ்ந்துகொண்டு வருகிறோம். உலகமே ஒரு பெரிய மாறுதலை அடைந்து வருகிறது. எல்லாத் துறைகளிலும் பொருளாதாரம்—கல்வி—சமூகம்—அரசியல்—விஞ்ஞானம் முதலியவைகளிலெல்லாம் புதிய கருத்துக்கள்—மாறுதல்கள்—முன்னேற்றங்கள், புதிய செயல்கள் செயல்படத் தொடங்கி இருக்கும் மகோன்னத காலத்தில் நாம் வாழ்கிறோம்.

வேளாண்மை—நாட்டின் தலையாய தொழில்

வேளாண்மைத் தொழில், இந்நாட்டின் மிக முக்கியமான தொழில். விவசாயத்தைப்பற்றி போற்றிப் புகழாத ஏடுமில்லை—போற்றாத நாடுமில்லை. விவசாயத்தில் வளர்ச்சி காணாமல் மற்ற எந்த விதமான வளர்ச்சியினாலும்—முன்னேற்றத்தாலும் நம் நாடு உணவு பிரச்னையில் தன்னிறைவு பெற்றதாக கருதப்படமாட்டாது. உணவு உற்பத்தி விஷயத்தில் சென்னை மாநில அரசு முழு மூச்சுடன் வேலை செய்து வருவது குறித்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம். உணவு உற்பத்தி பெருக வேண்டுமென்பது தான் எங்கள் பஞ்சாயத்தின் குறிக்கோளும் இலட்சியமுமாகும்.

உணவு உற்பத்தி பிரச்சினையை விரிவான விவசாயத்தால் மட்டும் சமாளிக்க முடியாது. விவசாயத்தை தீவிர திட்டத்திற்கு முயற்சி செய்வதன் மூலம் தான் சமாளிக்க முடியும். அதாவது நல்ல விதைகள்—நவீன விவசாய சாதனங்கள்—நல்ல கலப்பைகள்—ரசாயன உரம்—சிறந்த கால்நடைகள் முதலியன. உணவு உற்பத்தியைப் பெருக்க நான்கு வழிகள்தான் உண்டு. அதாவது தண்ணீர், எரு, சிறந்த விதைகள், உழைப்புச் சக்தி முதலியன. விவசாய நிபுணர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களெல்லாம் இந்த நான்கு வழிகளைத்தான் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். இதுதான் நமது பாரத நாட்டின் வழி.

நீர்ப்பாசனம்.—உணவு உற்பத்தியைப் பெருக்க தண்ணீர் முக்கிய பங்கு வகிக்கிறது. தண்ணீர் இல்லாமல் விவசாயம் செய்ய இயலாது. நம் நாட்டிலுள்ள நிலங்கள் பெரும்பாலும் நஞ்சை நிலமாக இருப்பதால், உணவு உற்பத்தியைத் தண்ணீர் இல்லாமல் பெருக்க முடியாது. நம் நாட்டில் பெரும் பகுதி இயற்கையை எதிர் பார்த்தே விவசாயம் செய்யப்படுவதை நாம் அறிவோம். இயற்கை தான் விவசாயத்தைச் செய்கிறது. மனிதன் விவசாயத் தொழில் சம்பந்தமாக மட்டில் ஒரு மேலாளாகத்தான் இருக்கிறானே ஒழிய, உண்மையில் இயற்கைதான் விவசாயத்தைச் செய்கிறது. கண்மாய்கள் மூலமாகவும், கால்வாய்களின் மூலமாகவும் கிணறுகள் மூலமாகவும் தண்ணீர் விடப்பட்டு விவசாயம் நடந்து வருகிறது. பருவ மழை சரியாக இல்லாவிட்டால், நல்ல மகசூலை நாம் எதிர்பார்க்க முடியாது. சிலபகுதிகளில் தண்ணீர் இல்லாமல் விவசாயமே செய்ய இயலாத நிலையில் இருக்கிறது. இப்படி உள்ள பகுதிகளுக்கு அரசாங்கம் குழாய்க் கிணறுகள் போடும் திட்டத்தை அமுல் செய்தால் உற்பத்தி பெருகும் என்பதில் ஐயமில்லை.

பஞ்சாயத்து ஆற்றிய பணிகள்

இராமநாதபுர மாவட்டத்தில் பூவேந்தி எங்கள் பஞ்சாயத்தாகும். மதுரை மாநகருக்கு கிழக்கே 15 மைல் தொலைவில் உள்ளது. மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்கள் பிரியும் எல்லையில் அமைந்து இருக்கிறது. எங்கள் கிராமத்தில் நஞ்சை நிலங்களின் எண்ணிக்கை 904 (தொளாயிரத்து நாலு) ஏக்கர்களும், புஞ்சை நிலங்கள் 206 ஏக்கர்களும் உள்ளன. எங்கள் கிராமத்தின் மொத்த ஜனத் தொகை 1056 பேர். வைகை அணையினால் பயன் பெற்று இப்பொழுது எங்கள் பகுதி இருபோகம் விளைகிறது. விவசாய உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் எங்கள் பஞ்சாயத்து முக்கிய பங்கு வகிக்கிறது. விவசாயத்தைபற்றிப் பிரசாரம் செய்து, உற்பத்தியைப் பெருக்குவதுதான் நமது இலட்சியமும், கடமையுமாகுமென்று கூறி வருகிறோம். வைகை அணைக்கட்டிலிருந்து தண்ணீர் திறந்துவிடும் காலங்களிலெல்லாம், பஞ்சாயத்தின் மூலம் கிராமத்தில் தண்டோரா (டாம்—டாம்) போட்டு விளம்பரம் செய்து, தண்ணீர் கட்டுச்

கட்ட காலுக்கு செல்வோம். தண்ணீர் கட்ட காலுக்கு வாராதவர்களுக்கு நபர் 1-க்கு ரூபாய் இரண்டு வீதம் அபராதம் வாங்கி விடுவோம். அபராதம் செலுத்தா விட்டால், அவர் விவசாயம் செய்ய முடியாது. விவசாயத்திற்குத் தண்ணீர் பாய்ச்சவிட மாட்டோம். தண்ணீர் கண்மாயில் குறைந்த காலங்களில் காவல் போட்டு தண்ணீர் பாய்ச்சவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகிறோம்.

எங்கள் கிராமத்தில் "உரக் குழிகளை" தோண்டச் செய்து மாட்டுச்சாணம், இலை தழைகளை அந்த குழியில் போட்டு அதில் மண் அடித்து கம்போஸ்ட் உரம் நாங்களே தயார் செய்து வருகிறோம். எங்கள் பஞ்சாயத்திலுள்ள நிலங்கள் அத்தனைக்கும் இந்த கம்போஸ்ட் உரம் காணுது. நிலங்களில், வேஞ்சா, தக்கைப் பூண்டு, செஸ்பேனியா போன்ற உர விதைகளை விதைத்து பசுந்தாள் உரச் செடிகளை வளர்த்து, உழவடை நடக்கும் பொழுது, அதை மடக்கி உழுது, நாற்றை நடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகிறோம். இதனால், மகசூல் அதிகரிப்பதுடன் வயலின் தரம் குறையாமல் இருப்பதுடன் உரச் செலவும் லேசாக போய் விடுகிறது. இந்த முறையில் விவசாயம் செய்தால் ரசாயன உரம் அதிகம் தேவைப்படாது. 1960–61-ம் வருஷத்தில் எங்கள் கிராமத்திலிருந்து ஏறத்தாழ 6000 (ஆறு ஆயிரம்) மூட்டை நெல் விலைக்கு விற்று இருக்கிறோம். மொத்த மகசூல் சுமார் 18,000 மூட்டை நெல். விதைக்கு, சாப்பாட்டிற்கு, விவசாய கூலிக்கு போக, விற்றது சுமார் 6,000 மூடை நெல், விவசாயத் துறையில் எங்கள் கிராமம் தன்னிறைவு அடைந்து விட்டது எனலாம். தன்னிறைவு அடைந்ததற்கு காரணம், விவசாயம் செய்ய வேண்டிய அளவுக்கு தண்ணீர் கிடைப்பதால். புஞ்சை நிலங்களில் கடலை, துவரை, எள்ளு, கொள்ளு, மொச்சை பயறு, தட்டப்பயறு முதலியன பயிரிடுகிறோம். புஞ்சை விவசாயத்தில் கணிசமான அளவுக்குத்தான் வருமானம் கிடைக்கிறது. பருவ மழையை நம்பி புஞ்சை விவசாயம் செய்வதால் நல்ல மகசூல் கிடைப்பதில்லை. வீட்டிற்கு வேண்டிய அளவுக்கு நவதான்ய பயிர்களை புஞ்சை விவசாயத்தின் மூலம் உற்பத்தி செய்து விடுகிறோம். நஞ்சை நிலங்களில் கோடை விவசாயமாக நிலக்கடலையை விதைத்து நல்ல மகசூலை அடைகிறோம். இதனால் வயலின் தரம் குறையாமல் கடலைச் செடியை பிடுங்கியவுடன் அந்த செடியை வயலில் போடுவதன் மூலம் நல்ல உரம் கிடைத்து, கால விவசாயத்தில் (நெல்) நல்ல மகசூல் கிடைக்கிறது. நிலத்தில் ஒரே விவசாயத்தைச் செய்வதைக் காட்டிலும் பல மாறுதலுள்ள உணவு பொருள்களை உற்பத்தி செய்வதால் நிலத்தின் வளம் கெட்டு விடாமல் நல்ல பலனைக் கொடுக்கிறது. காலத்திற்கேற்ற விவசாயத்தைச் செய்வதால் நமக்கு தேவையான உணவுப் பொருள்களை நாமே உற்பத்தி செய்வதால், பல வழிகளிலும் நமக்கு மிச்சம் ஏற்பட்டு வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.

நாற்றங்கால் கண்காணிப்பு

விதைகள் பாவும் நாற்றங்காலை நல்ல முறையில் உரம் செய்து, ஆட்டுக்கிடை, மாட்டுக்கிடை முதலியவைகளை நிறுத்தி, தயார் செய்து விதைகள் தூவுவோம். நாற்றங்காலில் உரம் ஏறு விட்டால் நாற்று நன்ருக முளைக்காமல் போவதுடன், உற்பத்தியையும் பெருமளவில் பாதிக்குமென்பது நாங்கள் அறிந்த அனுபவமே. ஆகையால் நாற்றங்காலை எப்பொழுதும் சிறந்த கண் காணிப்பிலேயே வைத்து பொறுக்கி எடுக்கப்பட்ட சிறந்த கலப்பில்லாத விதைகளை பாவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகிறோம்.

பயிரை நாசம் செய்யும் பூச்சிகளையும், நோய்களையும் ஒழித்துக் கட்டுவதற்கு திருப்பூவனம் விவசாய இயக்குநர் திரு பி. ராமையா பி. எஸ்சி. (வேளாண்மை) அவர்கள் பெரும் உதவி செய்து வருகிறார்கள். பூச்சுக்களாலும், நோய்களாலும் பயிர்களுக்கு சேதம், நாசம் ஏற்பட்டு விடாமல் பாது காக்க வேண்டிய சாதனங்களையும்,—வழிகளையும், பயிர்களை அழிக்கும் பூச்சிகளைக் கொல்லும் மருந்துகளை முன்கூட்டியே சேகரித்துவைத்துகொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை பஞ்சாயத்து மூலம் செய்து வருகிறோம். இதனால் பயிர்களுக்கு, வளர்ச்சியில் எந்த விதமான குந்தகமும் ஏற்படாமல், விவசாயிக்கு நல்ல மகசூலையும், பலனையும் கொடுக்கிறது. கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு விவசாய சம்பந்தப்பட்ட விஷயங்களில் போதிய பயிர்ச்சி அளிக்க வேணடிய வசதிகளை, அரசு செய்தால் நலமாக இருக்கு மென கருதுகிறேன்.

அழிவுச் சக்திகளை ஒழித்துக் கட்ட....

மனிதனுக்குக் கண்கள் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் விவசாயத்திற்குக் கால்நடைகள். கால் நடைகள் உலகிலே அதிகமாக உள்ள நாடு, நமது பாரத நாடுதான். கால் நடைகள் இல்லாமல் நமது நாட்டைப் பொறுத்த அளவில் விவசாயமே செய்ய இயலாது. கால் நடைகள் இல்லாமல் உணவு உற்பத்தியைபெருக்க இயலாது. விவசாய உற்பத்தியில் பாதி பாகத்தை கால்நடைகள் செய்து முடிக்கின்றன. நல்ல கால் நடைகள் இல்லாவிட்டால் சிறந்த விவசாயத்தை செய்ய முடியாது. ஆகவே, விவசாய உற்பத்தியைப் பற்றி பேசும்போதும் எழுதும் போதும் கால் நடைகளின் வளர்ச்சியைப் பற்றி கூறுமல் இருக்க முடியாது. எங்கள் கிராமத்தில் கால் நடைகளைப் போற்றி வளர்க்கிறோம். தரிசு நிலங்களில் (Waste Lands) கினியாபுல், வேஞ்சா முதலிய புல் செடிகளை உண்டாக்கி, அதில் கால்நடைகளை மேயவிட்டுத் தயார் செய்து வருகிறோம். கால் நடைகளுக்கு கொட்டங்கள் கட்டி அதில் அடைக்கிறோம். பசு மாடுகளை உழுவது கிடையாது. நல்ல பொலி காளை வைத்து, கால் நடைகளின் செல்வத்தைப் பெருக்கி வருகிறோம். எல்லாத் துறைகளிலும் பின் தங்கிய எங்கள் கிராமம், இப்பொழுது சிறந்த விவசாயத்தால் சீருடனும் சிறப்புடனும் காட்சி அளிக்கிறது.

நாட்டை பிடித்திருக்கும் கேட்டைப் போக்க, உணவுப் பிரச்சினையை நல்ல முறையில் தீர்க்க, வருங் காலம் வளமடைய, பாரதநாடு சிறப்புக்காண, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாறுதலை செய்ய வாரீர் என விவசாயப் பெருங்குடி மக்களை அழைக்கிறேன்.

பாமரருக்கு விஞ்ஞானம்!

ஐவகை ஆற்றல்—காற்று

திரு. ஆர். கே. விசுவநாதன், எம்.ஏ., அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

[விஞ்ஞான விந்தைகளை எளிய நடையில், பாமரருக்கும் புரியும் வகையில், "கிராமநலம்" அளிக்க முன்வந்துள்ள செய்தி யாவரும் அறிந்ததே. இந்த விஞ்ஞானக் கட்டுரைத் தொடரில் அறிவியல் துறையில் அனுபவம் மிக்க அறிஞர்களின் எழுத்தோவியங்கள் இடம் பெறும். இந்த வரிசையில் முதல் கட்டுரையான "ஐவகை ஆற்றல்—நீர்" என்ற கட்டுரை சென்ற இதழில் இடம் பெற்றது. "பஞ்ச பூதங்களின் நுட்பங்களைக் கூறும் கட்டுரைத் தொடரில் இரண்டாவது கட்டுரையான "ஐவகை ஆற்றல்—காற்று" என்ற கட்டுரையை, இந்த இதழில் வெளியிட்டுள்ளோம்.

"நொய்ந்த வீடு, நொய்ந்த கதவு, நொய்ந்த கூரை, நொய்ந்த மரம், நொய்ந்த உடல், நொய்ந்த உள்ளம்—இவற்றைக் காற்றுத் தேவன் உடைத்து நொறுக்கிவிடுவான். சொன்னாலும் கேட்கமாட்டான். ஆதலால், மானிடரே வாருங்கள்! வீடுகளைத் திண்மையுறக் கட்டுவோம். கதவுகளை, வலிமையுறச் சேர்ப்போம். உடலை உறுதிகொள்ளப் பழகுவோம்! உயிரை வலிமையுற நிறுத்துவோம்! உள்ளத்தை உறுதி செய்வோம்—இங்ஙனம் செய்தால் காற்று நமக்குத் தோழனாகி விடுவான். காற்று மெலியதீயை அவித்து விடுவான். வலியதீயை வளர்ப்பான். அவன் தோழமை நன்று. அவனை நித்தமும் வாழ்த்துகின்றோம்" என்று கவிதைச் சுவையோடு உரைநடை எழுதினார் பாரதியார்.

அத்தகைய காற்றைப் பற்றிய விஞ்ஞான உண்மைகளை, இக்கட்டுரை கூறுகிறது. இக்கட்டுரையாசிரியர், விஞ்ஞானக் கட்டுரைகளைப் பாமரரருக்கும் புரியும் வகையில் எழுதுவதில் தனக்கென்று ஒரு பாணியை அமைத்துக்கொண்டவர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பௌதிகத் துறைப் போராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

—ஆசிரியர்.]

சூரியனிலிருந்து பிறந்தது பூமி. பிறந்தவுடன் பூமி ஒரு நெருப்புப் பந்தாக இருந்தது. காலப் போக்கில் அது குளிர்ந்தது. அதன் மேற் பகுதி மட்டிலும் குளிர்ந் ததால் அதன் மேலோடு மேடு பள்ளங்களாயிற்று. குளிர ஆரம்பித்தவுடன் அடை மழை ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பெய்தது. மேற்பகுதியில் இருந்த பலவகை உப்புப் படலங்கள் மழை நீரில் கரைந்தன. உப்புகளை கரைத்துச் சென்ற மழை நீர் பள்ளங்களில் நிரம்பிற்று. கடல்கள் தோன்றின. மேடான பகுதிகள் மலைகளா யின. பூமியைச் சூழ்ந்து காற்று மண்டலம் ஏற்பட்டது. இவ்வாருக காற்று மண்டலம் தோன்றியதற்கு விஞ்ஞானி கள் காரணம் கூறுகிறார்கள். இக் காற்று மண்டலம் பூமியின் மேற்பரப்புக்கு ஒரு கூரையைப் போல இருந்து வருகிறது. குளிர் காலத்தில் நமது உடல்வெப்பத்தை கம்பளிப் போர்வை பாதுக்காப்பது போல இக் காற்று மண்டலம் இரவில் பூமியின் வெப்பம் வெளியே செல்லா மல் தடுத்து பூமியைப் பாதுகாக்கின்றது. பகலில் கூட இது நமக்கு மற்றொரு விதத்தில் உதவி புரிகின்றது.

சூரிய வெப்பத்தில் ஒரு பகுதியையே நம் மீது விழும்படி செய்கிறது. அவ்வாறு இது செய்யாவிடில் பூமியின் மேற் பரப்பில் விழும் சூரிய வெப்பத்தை நாம் தாங்க மாட்டாமல் நிச்சயமாக இறந்து விடுவோம். மற்றொரு வழியிலும் இக் காற்று மண்டலம் நமக்கு நன்மையைச் செய்து வருகிறது. இராக் காலங்களில் சில சமயம் வானத் தில் ஒரு ஒளிப் புள்ளி தோன்றி வேகமாக சென்று திடீரென்று மறைந்து விடுவதை அனைவரும் கவனித் திருக்கலாம். காற்று மண்டலத்துக்கு வெளியேயிருந்து அதனுள்ளே நுழைந்த ஒரு பொருளின் விளைவே இத் தோற்றம். இது போன்று கோடிக்கணக்கான கற்கள் ஒவ்வொரு விநாடியும் பூமியின் மீது விழுந்துகொண்டி ருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். காற்று மண்ட லத்தில் அவை நுழைந்தவுடன் அவற்றின் போக்கு தடை படுகின்றது. இவ்வெதிர்ப்பினால் ஏற்படும் உராய்வு சக்தி அக்கற்களைச் சுட்டு எரித்து சாம்பலாக்கி விடுகிறது. இவை எரியும்போது ஏற்படும் ஒளியையே நாம் பார்க்கி றோம். காற்று மண்டலம் இவற்றைத் தடுத்திராவிடில்

G. N.—4

கல்மாரிக்கு இடையே நாம் வாழ்ந்து வர நேரிடும். சந்திரன் மீது இத்தகைய காற்று மண்டலம் இல்லை. இதன் விளைவாக அதன் மேற்பரப்பில் புல், பூண்டு முதலிய தாவரங்கள் கூட இல்லாமல் அது முற்றிலும் எரிமலைப் பிரதேசமாக இருப்பதை விஞ்ஞானிகள் கண்டார்கள்.

பூமியும் காற்றும்

பூமியின் மேற்புறமும் உட்புறமும் கெட்டியான திண்பொருள். அதைச் சூழ்ந்துள்ள கடல்நீர் பூமியைக் காட்டிலும் இலேசான திரவப் பொருள். இவ்விரண்டையும் சூழ்ந்துள்ள காற்று மிகவும் இலேசான வாயுப் பொருள். காற்று இலேசான போதிலும் அதற்கு எடை உண்டு. இதை ஒரு சிறிய சோதனையின் மூலம் உணரலாம். நாம் தண்ணீர் அருந்துவதற்குப் பயன்படுத்தும் குவளையை தலைகீழாக தண்ணீரில் அழுத்தும் போது அதிலுள்ள காற்று தண்ணீரை குவளையினுள்ளே ஏற விடாமல் தடுப்பதைக் கவனிக்கலாம். குவளையை செங்குத்தாக அழுத்தினால் தான் மேற் கூறப்பட்டது நடைபெறும். ஆனால் குவளையை செங்குத்தாக அமிழ்த்தாமல் சற்று சாய்த்து அமிழ்த்தும் போது அதிலுள்ள காற்று தண்ணீர் மூலம் குமிழ் குமிழாக வெளிப்படுவதைப் பார்க்கலாம். காற்று வெளிப்பட வெளிப்பட குவளையினுள்ள தண்ணீர் மட்டம் உயர்ந்துகொண்டு செல்லும். எல்லாக் காற்றும் வெளியேறிய பின்னர் குவளை முழுவதும் தண்ணீர் நிரம்பி விடும் தண்ணீரை முதலில் ஏற ஒட்டாமல் காற்றின் எடையே தடுத்தது. பூமியின் மேற்பரப்பில் பல மைல்கள் உயரம் வரை நிற்கும் காற்று மண்டலம் பூமியின் மீதுள்ள எல்லாப் பொருள்களையும் தன் எடையினால் அமுக்கிக் கொண்டிருக்கிறது. கைகளில் ஒரு பெரிய கல்லைத் தூக்கிக்கொண்டிருக்கும் போது எடை கைகளை அழுத்துவது போல காற்றுமண்டலம் தன் எடையினால் பூமியின் மேற் பரப்பிலுள்ள எல்லாப் பொருள்களையும் அமுக்குகின்றது. இவ்வாறு அமுக்குவதனால் ஏற்படும் சக்தியை "காற்று மண்டலத்தின் அழுத்தம்" என்று விஞ்ஞானிகள் கூறுவார்கள். ஆனால் கல்லின் எடையினால் ஏற்படும் அழுத்தத்திற்கும் காற்று மண்டலத்தின் எடையினால் ஏற்படும் அழுத்தத்திற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. கல்லின் எடைக் கீழ் நோக்கி மட்டும் அழுத்தும். ஆனால் காற்று மண்டலத்தின் எடையினால் ஏற்படும் அழுத்தம் எல்லாத் திசைகளிலும் ஒரே அளவு வலிமையுடன் அமைந்திருக்கும் இவ் வழுத்தத்தை நம் உடல் ஏன் உணரவில்லை என்று நினைக்கலாம். இதற்குக் காரணம் நம் இரத்தக் குழாய்களின் அமைப்பு. அவற்றில் ஓடும் இரத்தம் இதை எப்போதும் எதிர்த்துக்கொண்டிருப்பதால் நாம் காற்று மண்டலத்தின் அழுத்தத்தை அறிவதில்லை. இந்த அழுத்தத்தின் விளைவாக நமது உடலில் ஒவ்வொரு சதுர அங்குலப் பரப்பின் மீதும் பதினைந்து பவுண்டு எடை அளவுள்ள சக்தி தாக்குகின்றது. நாம் ஒரு ஆகாய விமானத்தில் இருக்கும்போது அது திடீரென்று வெகு உயரத்திற்கு மேலே எழும்பிச் சென்றால் நமது நிலையில் தடுமாற்றம் உண்டாகும். காற்று மண்டலத்தில் மேலே செல்ல செல்ல அதன் அழுத்தம் குறைந்துவிடுகிறது. ஆனால் நமது உடலிலுள்ள இரத்த ஓட்டத்தின் அழுத்தம் முன்போலவே இருக்கிறது. இவ்விரண்டினது சம நிலை சீர் கெட்டு விடுவதால் நமக்குத் தடுமாற்றம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க ஆகாய விமானிகள் பிரயாணிகளின் சௌகரியத்தை முன்னிட்டு நிதானமாகவே உயர எழும்புவார்கள். மேலும் இத் தடுமாற்றம் ஏற்படாதவாறு பாதுகாப்பும் விமானத்தில் செல்லுபவர்களுக்கு அளிக்கப்படும். சில விமானங்களில் பிரயாணிகள் உட்காரும் இடங்களில் காற்று மண்டலத்தின் அழுத்தம் குறையாத அளவுக்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதைப்போல நீரின் அழுத்தத்தினாலும் விளைவு ஏற்படக்கூடும். கடலில் மிகுந்த ஆழத்திலும் மீன்கள் வசித்து வருகின்றன. அவற்றின் மீது அழுத்தும் நீர் நிலையின் எடையை தாங்கி நிற்குமாறு அவற்றின் உடல்கள் அமைந்திருக்கின்றன. அந்த மீன்களை நீர் மட்டத்திற்குக் கொண்டு வந்தால் அவற்றின் மீதுள்ள அழுத்தம் குறைந்து அதனால் உள் அழுத்தம் அதிகமாகி விடுவதால் அவை வெடித்து விடுவதைக் கவனித்தார்கள்.

காற்று மண்டலத்தைப் பற்றி . . .

காற்று மண்டலத்தின் அழுத்தத்தை அறிய ஒரு எளிய சோதனை செய்து பார்க்கலாம். விளிம்பு இல்லாத ஒரு கண்ணாடி தம்ளர் முழுவதையும் தண்ணீரால் நிரப்பி அதன் வாயை ஒரு மெல்லிய அட்டையினால் மூடி, சாய்காமல் சட்டென்று தலைகீழாகக் கவிழ்த்தால் அட்டை கீழே விழாமல் நிற்பதைப் பார்க்கலாம். (படம். 1)



தண்ணீர் கனமாயிற்றே! அட்டை அந்தகனத்தைத் தாங்க மாட்டாமல் கீழே விழ வேண்டுமே என்று நீங்கள் நினைக்கலாம். தம்ளரில் உள்ள நீர் அட்டையை கீழே அழுத்துவது உண்மை தான். ஆனால் புறத்திலுள்ள காற்று மண்டலம் தன் அழுத்தத்தின் மூலம் அட்டையை மேல் நோக்கி அழுத்துகின்றது. இந்த அழுத்தம் தம்ளரில் எடுத்துக் கொண்ட நீரின் எடையை காட்டிலும் அதிகமாயிருப்பதனால் அட்டை கீழே விழுவதில்லை. தண்ணீர் சுமார் முப்பத்திரண்டடி உயரத்திற்கு அதிகமாகிவிட்டால் காற்று மண்டலத்தின் அழுத்தம் அதைத் தாங்க முடியாது. இதே

தத்துவத்தைக்கொண்டுதான் ஓரிடத்தில் காற்று மண்டலத்தின் அழுத்தம் அளக்கப்படுகிறது. இக்கருவிக்கு "அழுத்தமானி" என்று பெயர். ஆனால் இக்கருவியில் தண்ணீருக்குப் பதிலாக "பாதரசம்" எடுத்துக்கொள்ளப்படும்.



(படம் 2). கடல் மட்டத்தில் காற்று மண்டலத்தின் இறுக்கம் சுமார் முப்பது அங்குலம் உயரமுள்ள பாதரசத்தின் எடைக்குச் சமமாக இருப்பதைச் சோதனையின் மூலம் விஞ்ஞானிகள் அறிந்தார்கள். ஒவ்வோர் இடத்திலும் பாத ரச அழுத்த மானியை எடுத்துக்கொண்டு போய் அங்குள்ள காற்று மண்டல அழுத்தத்தை அளவிடுவது சற்று கடினம். எனவே ஒரு திரவமும் இல்லாத அழுத்தமானி ஒன்றை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளார்கள். இந்தக் கருவிக்கு "அனிராய்டு அழுத்தமானி" என்று பெயர்.



(படம் 3) இதில் உலோகப்பெட்டி ஒன்று உண்டு அப்பெட்டியிலுள்ள காற்று வெளியேற்றப்பட்டு அது சிறிதும் அதனுள் புகா வண்ணம் வகை செய்யப்பட்டிருக்கும். இப்பெட்டியின் புறங்கள் சமதளமாக இராமல் பல நெளிவுகள் கொண்டிருக்கும். கடிகாரத்தில் உள்ளமுள் போன்று ஒரு முள் இதில் பொருத்தி வைக்கப்பட்டிருக்கும் காற்றின் அழுத்தம் அதிகமாகும்போது பெட்டியின் மேற் புறம் அமுங்கி அதன் பரிமாணம் குறையும். இதன் விளைவாக முன் நகர்ந்து செல்லும் . காற்றின் அழுத்தம் குறையும்போது பெட்டியின் பரிமாணம் அதிகரிக்கும் ; இதன் விளைவாக, முள் முன் நகர்ந்த திசைக்கு எதிராக நகரும் ; கடிகாரம் மணி காட்டுவது போல ஓரிடத்திலுள்ள காற்று மண்டல அழுத்தத்தை இக்கருவியிலுள்ள முள் காட்டும். கைக் கடிகார அளவில் கூட அழுத்தமானியை அமைத்துக் கொள்வது எளிதான காரியம். காற்று மண்டலத்தின் பல் வேறு உயரங்களில் உள்ள காற்று அழுத்தத்தை அளக்க இத்தகைய அனிராய்டு அழுத்தமானியே பயன்பட்டு வருகிறது.

காற்றின் மற்றொரு பண்பு

நிலம், நீர் இவற்றை விட காற்று இலேசானது என்று முன்பு கூறினோம். நிலம் திடப் பொருள் ; நீர் திரவப் பொருள் ; காற்று வாயுப் பொருள் ; இவற்றின் நிறைக் குண்டான வேற்றுமையை விஞ்ஞானிகள் திருத்தமாக அளவிட்டிருக்கிறார்கள். ஒரு பொருளின் திண்மையை அளந்து கூறும் போது அது நீரினது திண்மையை விட இத்தனை மடங்கு அதிகமென்று கூறப்படும். இதற்குக் குறிப்பிட்ட பருமன் கொண்ட அப்பொருளின் நிறைக்கும் அதே பருமன் கொண்ட தண்ணீரின் நிறைக்கும் உள்ள தாராதரத்தை அளந்து பார்ப்பது வழக்கம். உதாரணமாக இரும்பு நீரைக் காட்டிலும் எட்டு மடங்கு அதிக திண்மை கொண்டிருக்கிறது. ஆனால் காற்றோ தண்ணீரின் திண்மையில் ஆயிரத்தில் சுமார் ஒன்றே கால் பங்கே இருக்கிறது. எனவே காற்றின் திண்மை திடப் பொருள்கள், திரவப் பொருள்கள் இவற்றின் திண்மையைக் காட்லும் மிகக் குறைவாக இருப்பதை அறியலாம். இவ்வேறுபாட்டிற்கு உண்டான காரணத்தையும் விஞ்ஞானிகள் விளக்கியுள்ளனர். திட, திரவ, வாயு நிலைகளிலுள்ள எல்லாப் பொருள்களும் அணுக்களின் கூட்டங்களே என்று விஞ்ஞானிகள் கண்டறிந்தார்கள். அணுக்களினிடையே பலதரப்பட்ட கவர்ச்சி சக்திகள் இருந்து வருகின்றன. திட நிலையில் இக் கவர்ச்சி சக்திகளின் வலிமை அதிகமாகவும், வாயு நிலையில் மிகக் குறைவாகவும் இருக்கின்றன. திரவ நிலையில் அணுக்களினிடையே உள்ள கவர்ச்சி சக்திகளின் வலிமை திட நிலையில் இருப்பதை விடக் குறைவாகவும் ஆனால் வாயு நிலையில் இருப்பதை விட அதிகமாகவும் அமைந்திருப்பது தெரிய வந்தது. வாயு நிலையில் அணுக்களிடையே உள்ள கவர்ச்சி சக்திகளின் வலிமை மிகக் குறைந்து இருப்பதினால் அணுக்கள் ஒன்றுக்கொன்று மற்ற நிலைகளில் உள்ளதை விட நெடுந்தூரம் விலகி இருக்கின்றன என்றும் அதன் விளைவாகவே வாயுக்களின் திண்மை குறைந்து விடுகிறது என்றும், கூறுகின்றார்கள். மேலும் இதனால் தான் காற்று போன்ற வாயுக்களை மிக சுருங்கிய இடத்திலும் அடைத்து வைக்கச் சாத்தியமாகின்றது என்று கூறப்படுகின்றது. இம்மூன்று நிலைகளிலும் அணுக்கள் அமைந்துள்ள விதத்தை ஓர் உதாரணத்தைக் கொண்டு உணரலாம். பெரிய கூட்டங்களில் மக்கள் அண்டையில் உள்ள

வர்களின் உபாதை பொறுக்க முடியாமல் கைகளை ஆட்டிக் கொண்டும், உடம்பை அசைத்துக்கொண்டும் அவதிப்படு படுவது போல, திட நிலையில் அணுக்கள் எல்லாம் தம் இருப்பிடங்களில் இருந்துகொண்டே துடித்துக் கொண் ருக்கின்றன. நெருக்கம் அதிகமாக இல்லாத போது கூட்டத்தின் ஒரு பகுதியிலிருந்து சிலர் மற்றவர்களை விலக்கிக் கொண்டு வேறு இடங்களுக்குச் செல்ல முடிவது போல, திரவங்களில் சில அணுக்கள் மற்ற அணுக்களைத் தள்ளிக்கொண்டு இடம் பெயர்ந்து செல்லக்கூடிய நிலையில் இருக்கின்றன. ஒரு பெரிய மைதானத்தில் சிலர் மட்டும் அங்குமிங்கும் உலாவிச் சென்று கொண்டிருப்ப தைப் போல வாயுப் பொருள்களின் அணுக்கள் இயங் கிக் கொண்டிருக்கின்றன. மற்ற அணுக்களின் உபாதை மிகக் குறைவு.

நிலம், நீர், காற்று—பண்புகள்

காற்றுக்கு எடை, அழுத்தம், திண்மை இவற்றைத் தவிர நெகிழ்ச்சி, வன்மை என்று மற்றொரு இயல்பும் உண்டு ரப்பரின் நீண்டு சுருங்கும் தன்மையை அனை வரும் கவனித்திருக்கலாம். இதைப் போல காற்றும் சுருங்கி மீளும் திறமையைப் பெற்றிருக்கிறது. ஒரு பலூன் நிறைய காற்றை அடைத்து அதன் வாயைச் சற்று திறந்தவுடன் "புஸ்" என்று மிகுந்த வேகத்துடன் காற்று வெளிப்படுவதை அனைவரும் கவனித்திருக்கலாம். அதன் நெகிழ்ச்சி வன்மையை எடுத்துக்காட்டுவதற்கு இது ஒரு சான்று. நீங்கள் சைக்கிள் சக்கரத்துக்கு காற்றடிக்கும் பம்பைப் பார்த்திருப்பீர்கள். இதன் குழலினுள் ஒரு பீச்சான் இருக்கும். பம்பின் அடியில் ஒரு சிறு துவாரம் இருக்கும். இதன் வழியாகத் தான் காற்று வெளிப் படும். பீச்சானை மேலிருந்து கீழே அமுத்தும்போதெல் லாம் காற்று இச்சிறு துவாரத்தின் வழியே வெளிப்படும். இத் துவாரத்தை விரலினால் மூடிக்கொண்டு பீச்சானை மேலிருந்து கீழே அழுத்தினால் பீச்சான் கீழே செல்லமுடி யாமல் துள்ளி மேலெழும்புவதைக் கவனிக்கலாம். குழாயி லுள்ள காற்றைச் சுருக்கும் போது அது விரல் சுருளைப் போலத் துள்ளி மீண்டும் தன் நிலையை அடைய முயலு கின்றது. இதுவும் அதன் நெகிழ்ச்சி வண்மையை எடுத் துக் காட்டுகின்றது. இதை அளப்பதற்கும் விஞ்ஞானிகள் வழியை வகுத்திருக்கிறார்கள்.

வாழ வழி சொல்வேன்!

"பூங்குன்றன்"

—:0:—

ஊரெல்லாம் செழித் தோங்கிப் பாரோர் ஏத்த
உண்மையிலே தியாகம் நீர் செய்வதோடு
பாரெல்லாம் போற்றுமுயர் உழைப்பை நாடி
பகை வளர்க்கும் வீண்வாத வம்பை ஓட்டி
சேர்ந்தொன்றாய் மனத்திலுள்ள அழுக்காம் கொடிய
செருக்கோட்டிப் பொறாமை பொசுக்கித் தீய்த்து
நேரியநல் வழியில்நாம் சென்றால் நாடு
நிம்மதியாய் வாழுமினும் சொல்வேன் கேளும் :

"என்னய்யா விவசாயம் நன்றாய்ச் செய்தேன்
ஏனோ நல் விளைவில்லை" என்றே முடிவில்
சொன்னால் நெல் விளைவதிகம் காணாதய்யா !
சோர்வின்றி ஊக்கமுடன் உழைப்பைநல்கிப்
பன்னாளாய்ச் செய்து வரும் முறையை மாற்றி
பல புதிய முறையில் விவ சாயம் செய்யின்,
தன்னிகரில் உழவோங்கும் பஞ்சம் நாட்டில்
தறிகெட்டு ஓடுவது உண்மை கேளீர் :

வெய்யில் மழைப் பனி குளிரோ வருத்த நாளும்
மெய்தன்னைக் கையாலேப் போர்த்திக் கொண்டு
தொய்யமுகம் இடையினிலே கந்தை கட்டித்
தூங்கி சும்மா விழுமெந்தன் நாட்டு மக்காள் !
அய்யா நம் அண்ணல் மகான் காட்டிச் சென்ற
அருமையான நூற்பைக் கைக் கொண்டே நாளும்
நெய்திட்டால் துணிப் பஞ்சம் பறந்தே போகும்
சீர் பெற்று பெருமையில் நாம் திளைக்கலாமே !

தெரு வெல்லாம் கால்வலிக்கச் சுற்றிச் சுற்றி
தினந்தினமும் வேலை தேடி அலைகின்றாரே !
ஒரு வழி நான் சொல்கின்றேன் கோபங் கொள்ளீர் ;
உங்களுக்கும் தெரிந்தது தான் பாய்கள் நெய்தல்,
வருமானம் தரும் கோழி வளர்த்தல் தேனீ
வகையான இத் தொழிலில் எதுவோ ஒன்றை
கருத்தூன்றிச் செய்யமுன் வருவீரானால்
காலமெல்லாம் பசியின்றி வாழலாமே.

குழந்தைகளை ஏராளம் பெற்றுப் பெற்று
குலவிடவெம் பசி வீட்டில் வறுமைத் தீயில்
அழுந்தநிதம் துயரமோ உடலை வாட்டும்
அவல நிலைக்(கு) ஆளாகா முன்னர் விழித்து
செழுமையுடன் வாழநாம் கொழிக்க இன்பம்
சீராக இரண்டொரு குழந்தை பெற்று
ஒழுங்காக கர்ப்பத்தடை செய்து கொண்டால்
உயரும்நம் குடும்பமுடன் நாடுங் கேளீர் !

—

"கடிதக் கருத்தரங்கு"

1

அன்புள்ள ஐயா,

1958 சென்னை பஞ்சாயத்துக்கள் சட்டம் பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பஞ்சாயத்து ஆட்சியின் சிறப்பு, அதிகாரப் பரவல் முறை, பஞ்சாயத்துக்கள் தங்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்து கொள்வதற்கு அளிக்கப்பட்டுள்ளன. அதிக அதிகாரம் இவைகளைப் பற்றி மாநில அரசாங்கம், பத்திரிகைகள், பிரசுரங்கள் வாயிலாகவும் மந்திரிகள், அரசாங்கக் காரியதரிசிகள் தங்கள் மேடைப் பிரசங்கங்கள் மூலமாகவும் பிரசாரம் செய்து வருகிறது. ஆனால் பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்கள் அனுபவத்தில் நேர்மாறான பலனைச் சில சமயங்களில் காண நேரிடுகிறது. பொது மக்கள் முன் ஒரு மாயத் தோற்றத்தை சிருஷ்டித்து பஞ்சாயத்து தலைவர்களை சுட்டிக்காண்பித்து தங்கள் பொறுப்பைக் கைக்கழுவ நிர்வாகத்தினர் திட்டமிட்டிருக்கிறார்களோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது.

நடைமுறை நிர்வாகத்தில் சிறிய கிராமப் பஞ்சாயத்துக்கள் அலட்சியமாக நடத்தப்படக்கூடாது என்பதற்காகவே இதை எழுதுகிறேன்.

எங்கள் பாம்பாட்டி பஞ்சாயத்துக்கு மிகக் குறைந்த வருமான முள்ள படியால் வரி வசூலிக்க நிரந்தர சிப்பந்தி நியமிக்க முடியாது. இது மாதிரி குறைகள் நிறைய இருக்கின்றன. எங்களுடைய நியாயமான குறைகளைப் பற்றி அவ்வப்போது எழுதிக் கொண்டேயிருக்கிறோம். பஞ்சாயத்துக்களின் குறைகளை நிவர்த்திப்பதில் நிர்வாகத் துறையில் காலதாமதம் இல்லாமல் இருந்தால் மேலும் சிறந்த பயனைப் பெறலாம். ஊக்கமும் உற்சாகமும் நிறைந்த பஞ்சாயத்து நிறுவனங்களுக்கு மேன்மேலும் உற்சாகத்தை ஊட்டும் வகையில், அவைகளின் குறைகள் நிர்வாகத்தினரால் உடனுக்குடன்கவனிக்கப்பட்டால் மிகவும் நலமாக இருக்கும். பாம்பாட்டி பஞ்சாயத்துமட்டுமல்ல, எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கு மட்டுமே இது பொருந்தும்.

படித்தவர்களும் ஆர்வமுள்ளவர்களும் சுய உணர்ச்சியோடு பஞ்சாயத்து தலைவர்களாக பணி புரிய வேண்டுமானால், நிர்வாக முறையில் அவைகளுடைய நியாயமான குறைகள் உடனுக்குடன் கவனிக்கப்படவேண்டும். "நன்றே செய்க அதுவும் இன்றே செய்க" என்று கூறிக்கொண்டு இக்கடிதத்தை முடிக்கிறேன். வணக்கம்.

எஸ். வி. துரைராஜ்,
தலைவர், பாம்பாட்டி பஞ்சாயத்து,
இராமநாதபுரம் மாவட்டம்.

2

அன்புள்ள ஐயா,

மாதந்தோறும் தாங்கள் அனுப்பும் "கிராம நலம்" பத்திரிகையிலுள்ள விஷயங்களைப் படித்து அளவில்லா மகிழ்ச்சி அடைகிறேன். காடனேரி கிராமத்தைப்பற்றியும் மற்ற விஷயங்களைப் பற்றியும் படிக்கப் படிக்கத் தைரியத்தையும் ஊக்கத்தையும் உணர்ச்சியையும் தூண்டுகிறது. எங்கள் பஞ்சாயத்து சிறிய கிராமம். புறம் போக்கு நிலங்களும் குறைவாய் இருந்தாலும், மரங்கள் பயிர் செய்யும் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். கிராம மக்கள் ஒத்துழைப்பு வேண்டும். அங்கத்தினர்கள் ஒத்துழைப்பும் மிகவும் அவசியம். பஞ்சாயத்துக்களில் எதற்கெடுத்தாலும் போட்டியாகவே பேசவேண்டும். என்ற மனப்பான்மை இல்லாமல், எல்லோரும் ஒத்துழைத்தால் எவ்வளவோ காரியங்களைச் செய்ய முடியும். அநேகப் பஞ்சாயத்துகளில் பூசல்களினாலும், போட்டிமனப்பான்மையினாலும் நல்ல முறையில் நடத்த இயலாமல் இருக்கிறது. "கிராம நலம்" இந்தத் துறையில் ஒற்றுமை உணர்வை உண்டாக்கி கிராம அபிவிருத்திக்கான காரியங்களைச் செய்ய தூண்ட வைக்கும் என்று நம்பிக்கையோடு முடிக்கிறேன். வணக்கம்.

வி. வடமலை,
பஞ்சாயத்துத் தலைவர்,
கோடிமங்கலம், எஸ். புதூர் போஸ்டு,
குத்தாலம் வட்டாரம்.

3

அன்புள்ள ஐயா,

முன்பு வெள்ளையர் ஆட்சியில் ஆங்கிலேயர் அமர்த்திய எடுபிடி ஆள்தான் கடை நிலை ஊழியன். அது நாளாவட்டத்தில் ஆபீஸ் சிப்பந்தியாகி பொது மக்களெல்லாம் இழிவான தொழில் எனக்கருதி எங்களை மட்டம் தட்டிக் கொண்டே வந்தனர். குடியரசான பின் கடைநிலை

ஊழியர்களும் மனிதர்கள்தான். அவர்களுக்கும் மதிப்பு கொடுக்க வேண்டும் என கொஞ்ச காலமாக ஓர் அளவு மதிப்புக் கொடுத்து வருகிறார்கள். இதிலும் மத்திய சர்க்கார் கடை நிலை ஊழியர்கள் நாலாந்தர சிப்பந்தியாகவும்,ராஜ்ய சர்க்காரில் வேலை செய்யம் கடை நிலை ஊழியர் பத்தாந்தர சிப்பந்தியாகவும் வேறுபட்ட நிலையில் உள்ளது.

இந்தக் கட்டுரை எழுதும் நான் ஒரு ஆதி தமிழன். நான் 17-ம் வயதில் திருமணம் செய்து கொண்டேன். தற்போது எனக்கு 30 வயது. வட்டார அபிவிருத்திப் பணியில் எனக்கேற்பட்ட அநுபவங்களையும், உரைக்கவும். நான் யார் கீழ் பணியாற்றுவேனோ, வட்டார அபிவிருத்தி அதிகாரியின் நல்லியல்புகளை எடுத்துச் சொல்வதின் மூலம், என்மனம் நிறைவு பெறுகிறது. சிறுவயதில் படிக்கும்போது என் தோழர் ஒருவர் காந்தி மகான், கதையை எப்பொழுதும் எடுத்துச் செல்லுவார். காந்தி மகான் பட்ட கஷ்டங்களை யெல்லாம் நான் கேட்கும் போது கண்ணீர் வடிப்பேன். ஏழைக் குடியில் பிறந்த நான் அப்போது என்ன செய்ய முடியும் ? அப்போதுநாமும்என் ஒரு தேசியவாதியாக மாறக்கூடாது என எண்ணுவேன். ஏதும் அறியாத சிறுவன் நான் என்ன செய்ய முடியும் ? எனக்குப் பிற்காலத்தில் சேவை செய்யும் வாய்ப்பு உண்டா என ஏங்குவேன்.

அதிர்ஷ்ட வசமாக எனக்கு 1953-ல் வட்டார அபிவிருத்தி அலுவலகத்தில் கடை நிலை ஊழியன் வேலை குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் கிடைத்தது.

அப்போது வட்டார அதிகாரி (பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை) அவர்கள் தான் என்னைக் கடவுள் போல் ஆதரித்தார். அவர் தயவுடன் இந்த பரம ஏழையை ஏற்றுக் கொண்டார். அவரை நினைத்தாலும், அவர் பெயரைக் கேட்டாலும் ஆனந்தக் கண்ணீர் வடிப்பேன். முதன் முதலில் ஆபீசுக்கு ஜீப் கிடையாது. சிப்பந்திகள் கூட சரியாகப் போடவில்லை. நானும் அவரும் ஆளுக்கொரு சைக்கிளில் போவோம். 72 கிராமத்திற்கும் சைக்கிளிலேயே போவோம். கிராமத்தில் ஏழைக் குடும்பம் எங்கே எனப்பார்ப்பார். ஏழைகள் இவரைக் கண்டு எட்டிப் போய் நிற்பதைக்காணும் போது சிரித்துக் கொண்டே அவர்களின் தோளின் மேல் கையைப் போடுவார். நாங்கள் தீண்டத்தகாதவர்கள் எங்கள் மேல் கை போட வேண்டாம் எனக் கிராமவாசிகள் அஞ்சுவார். அதற்கு அவர் சிரித்துக் கொண்டே நானும் மனிதன் தான் ; நாம் எல்லோரும் பந்துக்கள் என சொல்லுவார்.

கிராமத்தில் மற்றவர்களுடன் சேர்ந்து பெருக்குவார். மண் தூக்குவார். நடந்து போவார். பணக்காரருடன் பழகமாட்டார். எளியவருடன் அன்பாக பழகுவார். விருந்துகளில் எங்களுக்கும் நாற்காலியில் உட்கார்ந்து உண்ண வாய்ப்பு கொடுத்தார். அவர் கொடுத்த போதனையை தான் நான் இன்றும் கடைபிடித்து வருகிறேன்.

ஹரி ஜனங்கள் எந்த நேரத்தில் விண்ணப்பம் கொடுத்தாலும் இரவு பகல் என்று பாராமல் அதை அன்புடன் வாங்கி என்னிடம் சேர் என்று சொல்லுவார். எந்த கிராமத்திற்குப் போனாலும் என்னை அவர் கையோடு அழைத்துச் செல்லுவார். நானும் சந்தோஷத்தோடு போவேன். என்னை அவர் கடை நிலை ஊழியனாக நடத்தவில்லை. பொது நல ஊழியனாகக் கருதினார். சிலருக்கு என் மேல் பொறாமை உண்டாயிற்று. என் மேல் வீண் பழி சுமத்தி மரியாதைக் குறைவாகவும் பேசினார்கள். உழைக்க வந்த நாம் அவற்றைப் பொருட் படுத்தக் கூடாது என்று கருதி வயிற்றுப் பிழைப்புக்காக குனிந்து நடக்க ஆரம்பித்தேன்.

பின்பு பறங்கிப்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு என்னை மாற்றினார்கள். கடலோரப் பகுதியாகையால் மீனவர்கள் இங்கு அதிகம். முன்பு ஏற்றுமதி இறக்குமதி இருந்த போது மக்கள் கவலையின்றி வாழ்ந்தார்களாம். இப்போது இதை ஒரு துறைமுகமாக்க நமது காருண்ய சர்க்கார் முயற்சி எடுத்துவருகிறார்கள். இங்குவந்து இரண்டு ஆண்டு முடிந்து விட்டது. இங்கும் என் வேலையிலே மிகுந்த மன நிம்மதியுடனும், ஊக்கத்துடனும் பணியாற்ற முடிந்தது.

வட்டார வளர்ச்சியில், கிராம மக்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும். ஊழியர்களை ஊக்குவிக்கின்ற முறையில் நடத்துகின்ற அதிகாரிகள் பெருகினால் விளையும் பயன் எவ்வளவு மகத்தான முறையில் இருக்கும் தெரியுமா ? வணக்கம்.

கு. ரெங்கசாமி,
பஞ்சாயத்து யூனியன் அலுவலகம்,
பறங்கிப்பேட்டை.

மாநில பூர்வாங்க ஆலோசனைக் குழுக் கூட்டம்



28—7—61 அன்று அரசாங்கத் தலைமை அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்கு முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ் தலைமை வகித்தார். கூட்டத்தில் மத்திய சமுதாய நல அமைச்சர் ஸ்ரீ. எஸ். கே. டே அவர்களும் கலந்து கொண்டார்.

எழுத்தாளர்களின் கவனத்திற்கு

சொந்த கற்பனை அல்லது அனுபவத்தையொட்டி, எழுதியனுப்பப்படும் சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள். நாட்டுப் பாடல்கள், கிராம நலம் பற்றிய கட்டுரைகள் முதலியவற்றைத் தேர்ந்தெடுத்து **கிராம நலத்தில்** வெளியிடுவதற்காக ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. **கிராம நலத்தில்** பிரசுரிக்கப்பட்ட பிறகு, அவைகளில், சிறந்தவற்றிற்கு ஒவ்வொரு மாதமும் கீழ்க்கண்டவாறு சன்மானம் வழங்கப்படும் :—

சிறு கதை.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், இது 5 பக்கங்களுக்குட்பட்டு இருக்கவேண்டும்)—ரூ. 25,

ஓரங்க நாடகம்.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், 6 பக்கங்களுள் அடங்கவேண்டும்)—ரூ. 25.

பாடல்கள்.—("கிராய நலத்தில்" வெளியிட்டால், இவை ஒரு பக்கத்துக்குள் அடங்கவேண்டும்)—ரூ. 10–லிருந்து 20 வரை (தரத்திற்கேற்றவாறு.)

கிராம வளம், காந்திய நிர்மாணத் திட்டங்கள் பற்றிய கட்டுரைகள்.—(இவை "கிராம நலத்தில்" வெளியிட்டால், இரண்டு பக்கங்களுள் அடங்கவேண்டும்)—ரூ. 10-லிருந்து 20 வரை (தரத்திற்கேற்றவாறு.)

முக்கிய குறிப்பு—சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள், நாட்டுப் பாடல்கள் முதலியவை **பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், காந்திய தத்துவம்** முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுவதுடன், விவசாயம் பற்றியோ சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில் தமக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்களை யொட்டியோ எழுதப்பட்டவையாக இருத்தல் வேண்டும். சிறந்த கதைகளுக்கும், நாடகங்களுக்கும், நாட்டுப் பாடல்களுக்கும், கட்டுரைகளுக்கும் சன்மானமளிப்பது பற்றி ஆசிரியர் செய்யும் முடிவே இறுதியானது. "கிராம நலத்தில்" பிரசுரிக்கப்படாத கதைகள், கட்டுரைகள் முதலியவற்றைத் திருப்பி அனுப்புவது சாத்தியமல்ல. எனவே, தங்கள் எழுத்தோவியங்களின் மூலத்தை அனுப்பாமல், நகல்களை மட்டும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அரசாங்க உத்தியோகச் சார்புள்ளவர்களும், இந்தப்பணியில் நேரடியாகக் கலந்துகொள்ளலாம். அரசாங்கப் பத்திரிகையான "கிராம நலத்திற்கு" எழுத, அவர்களுக்கு எந்த விதத் தடையும் இல்லை. சன்மானம் பெற அவர்களும் உரிமை உள்ளவர் ஆவர்.

ஆசிரியர், 'கிராம நலம்',

கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9.

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. எத்தனையோ வருஷ காலமாக நமது அரசாங்கத்தில், ரெவின்யூ கணக்குகள் வைக்கப்பட்டு வருகின்றன. கிராமக் கர்ணம் தான் இதற்கு அச்சாணியாக இருந்து வருகிறார். நமது கடந்த கால அரசாங்க நிர்வாகத்தில், கிராமக் கணக்குகளுக்கு ஒரு விசேஷ முக்கியத்துவம் இருந்து வந்துள்ளது. எதிர் காலத்தில், இன்னும் அதிகமாகவே இருந்து வரும் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால், பழைய கால ரெவின்யூ கணக்குக்கும் இனிமேல் எடுக்கப் போகும் கணக்கு முறைக்கும், பெரிய வித்தியாசம் இருக்கும். பழையகணக்குகள், ஜனங்களிடமிருந்து வரி வசூலிப்பதில் மட்டும் அக்கறை காட்டும் முறையில் இருந்தன. கிராமக் கர்ணம் சம்பிரதாய முறையில் தனக்குத் தெரிந்த விவரங்களைக் குறிப்பிட்ட சட்ட திட்டங்களுக்குட்பட்டு, பலவகையான கணக்குகளைப் பதிவு செய்து வந்தார்கள். ரெவின்யூ இலாகா அதிகாரிகள், அவற்றை அவ்வப்போது மேற்பார்வைசெய்து வந்தனர். காலப் போக்கில், அரசாங்கத்தின் எல்லா இலாகாக்களும் கிராமக் கர்ணத்தின் கணக்குகளையே அடிப்படையாகக்கொண்டு இயங்கி வந்துள்ளன அரசாங்கத்தின் புள்ளிவிவரச் சேகரிப்பு இலாகா (Statistics Department) இதை ஓரளவு தக்க வகையில் முறைப் படுத்த முயன்று வருகிறது.

சரியான புள்ளிவிவரங்கள் அவசியம்

எதிர்காலத்தில், நம் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம், சரியான அடிப்படைப் புள்ளி விவரங்களை ஆதாரமாகக்கொண்டு உருவாக வேண்டியது மிகவும் அவசியம். அஸ்திவாரம் சரியாக இல்லாவிட்டால் எல்லாம் பயனற்றதாகிவிடும். எனவே, ஒவ்வொரு கிராமத்திலும் கிராமக் கணக்குகளும், புள்ளி விவரங்களும், தவறில்லாமல் ஒழுங்கான முறையில் சேகரிக்கப்பட்டு, செப்பனிடப்பட ஒரு வழி கண்டுபிடித்தாக வேண்டும்.

அரசாங்கம், இதற்காக நியமித்த விசேஷக் கமிட்டி, பல இடங்களைச் சுற்றிப் பார்த்து, பல அதிகாரிகளையும் பொது ஜனத்தலைவர்களையும் சந்தித்துப் பேசி, ஒரு சில ஆலோசனைகளை, தாற்காலிகமாக சமர்ப்பித்துள்ளது. அதன் முடிவான அறிக்கை இன்னும் சிறிது காலத்தில் கிடைத்து விடும். பூர்வாங்க அறிக்கையின் சுருக்கத்தை பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் முன்னிலையில் சமர்ப்பிக்க நான் விரும்புகிறேன். இவற்றைப்பற்றி இந்தக் கூட்டத்தில் ஆராய்ந்து, தக்க முறையில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வோமாக. கிராமக் கணக்குகள் சரியான முறையில் அமைவதற்கு, பஞ்சாயத்துக்கள் என்ன செய்ய முடியும் என்பதை விரிவாக ஆராய்ந்து பார்ப்பது மிகவும் அவசியம்"....

தலைவர் முன்னுரைக்குப் பின், வந்திருந்த பொதுஜனத் தலைவர்களின் கருத்துக்கேற்ப, காலை ஒன்பது மணி முதல் பகல் ஒரு மணி வரையில் கருத்தரங்கு நடைபெற்று முடிந்தது. அங்கே நடைபெற்ற கருத்துக்களை ஒட்டி, அரசாங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்படும். அவை "கிராம நல"த்தில் விரைவில் வெளியிட ஏற்பாடாகியுள்ளது.

1961 ஆகஸ்ட்மாதம் 21-ம் தேதி அன்று தொடங்கிய இந்தக் கருத்தரங்கு 1961 ஆகஸ்ட் மாதம் 23-ம் தேதியோடு முடிவடைந்தது. வந்திருந்தவர்கள் விவரம் கீழே தரப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டம், தொட்டியம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் **திரு. விசுவநாதம்** அவர்கள், பொதுஜனத் தலைவர்கள் சார்பில் சட்டத்தை நல்ல முறையில் அமுல் நடத்துவதற்கான விதி முறைகளையும், நடவடிக்கைகளையும் உருவாக்கித் தருவதில் பொது மக்களின் கருத்துக்களை அறிவதில் விசேஷ ஆர்வம் காட்டி வரும் பிரதம காரியதரிசி அவர்களுக்கும் மற்ற அதிகாரிகள் அனைவர்க்கும் நன்றி செலுத்தினர். பொதுஜனத் தலைவர்கள் அளிக்கின்ற தீவிர ஒத்துழைப்புக்கும் விவசாயத் திட்டத்தை உருவாக்கி நடத்தும் வகையில் பயன் தரத்தக்க யோசனைகளை அவர்கள் அளித்தமைக்காக அவர்களுக்கு கிராமநலத் துறையின் **துணைக்காரியதரிசி ஸ்ரீ டி.என். சேஷன், ஐ.ஏ.எஸ்.,** அவர்கள் நன்றி கூறினர்.

சென்னையில் ஆகஸ்ட் 21,22,23, தேதிகளில் நடைபெற்ற விவசாய அபிவிருத்திக் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள் விவரம் :

பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள்—

1 திரு ஜி. சுந்தர ராஜ வன்னியர், கும்பகோணம்.
2 திரு டி. ஏ. எஸ். தங்கவேலு, திருவரங்குளம்.
3 திரு வி. டி. இளைய பிள்ளை, சின்ன சேலம்.
4 திரு எஸ். சண்முகசுந்தரம், கீழவேளூர்.
5 திரு கே. சுப்பராய முதலியார், கடம்பத்தூர்.
6 திரு ஆர். திருநாவுக்கரசுப் பிள்ளை, மேல்புவனகிரி.
7 திரு கே. பாலசுப்பிரமணியம், ஊத்துக்கோட்டை.
8 திரு இ. ஏ. தங்கசாமி, பரமக்குடி.
9 திரு எஸ். சண்முகசாமி, சங்கரன்கோயில்.
10 திரு எஸ். சி. செங்கோட்டி வேலப்பன், ஈரோடு.
11 திரு கே. எம். சுப்பிரமணியம், கோபி செட்டிப் பாளையம்.
12 திரு எம். கந்தசாமி மேல்வராயர், பாப்பாக்குடி.
13 திரு ஆர். விசுவநாதம், தொட்டியம்.
14 திரு வி. எஸ். மகாலிங்கம், குளித்தலை.
15 திரு ஈ. எம். ராமசாமி, மதுரை மேற்கு.
16 திரு பி. சீனுவாச ரெட்டியார், துறிஞ்சாபுரம்.
17 திரு பி. ராஜமாணிக்கம், ஆரணி.
18 திரு ஏ. கந்தசாமி நாயனர், காவேரிப்பட்டிணம்.
19 திரு வி. வால்மீகி, சிங்கம்புணரி.
20 திரு எஸ். சின்னக்கருப்பதேவர், திருப்பரங்குன்றம்.
21 திரு வி. ஆர். ஜகதீச முதலியார், தர்மபுரி.
22 திரு ஆர். சௌ திரராஜன், பாபநாசம் (தஞ்சை மாவட்டம்).
23 திரு சி. கோவிந்தசாமி, பண்ணுருட்டி.
24 திரு என். எஸ். சண்முக சுந்தரம், தலைவர், சர்வ தேசிய பண்ணைத் திட்டம்.
25 திரு கோவிந்தராஜுலு, "பஞ்சாயத்துச் செய்தி" ஆசிரியர்.

அரசாங்க அதிகாரிகள் —

1 திரு ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்., பிரதமச் செயலாளர்.
2 திரு பி. பி. ஐ. வைத்தியநாதன், ஐ.சி.எஸ்., உணவு உற்பத்திக் கமிஷனர்.
3 திரு ஏ. வெங்கடேசன், ஐ.ஏ.எஸ்., காரியதரிசி, உணவு வேளாண்மைத் துறை.
4 திரு கோ. வேங்கடாசலபதி, கிராம அபிவிருத்திக் கமிஷனர்.

[22-ம் பக்கம் பார்க்க]

உழைப்பைத் தருவதே உயர்ந்த தருமம்

திரு. சி. கிருட்டினன், ஊராட்சி மன்றத் தலைவர், செட்டித் தாங்கல், வாலாசா வட்டாரம்.

தருமம் வளர்த்த தமிழகத்திலே வாரி வழங்கிய வள்ளல்கள் முப்பத்திரண்டு தானங்கள் செய்தனர் என்ற சான்றுகள் ஏராளம். பொருள் படைத்தோர், பெருநிதி படைத்தோர் தரும் தருமம் பெரிதல்ல, ஆனால் அரை வயிற்றுக் கஞ்சிக்கில்லாதோர்—எதிர் காலம் தமக்கென எண்ணிப் பொருள் சேர்க்காதோர், தம் உடலுழைப்பை முதலாக வைத்து வாழ்வோர் கொடுக்கும் தருமம் உள்ளதே அதுதான் தருமங்களுள் எல்லாம் தலையாது எனக் கூறலாம். இன்றைய நிலையில் அவர்கள்தான் நாட்டுக்குத் தேவையானவர்கள் அவர்கள் தான் தமிழகத்தின் மூலக் கடவுளர்கள்.

இதைக் கருதித்தான் இந்தியப் பேரரசும், உழைப்புத் தானத்தை ஊக்குவிக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களை மேலும் மேலும் நடத்துகின்றனர் போலும்.

அன்றிருந்த சீர்கேடான நிலை

வடார்க்காடு மாவட்டத்திலே வாலாஜா வட்டாரத்திலும் இவ்வியக்கம் வேகமாகப் பரவி வருகிறது. வாலாஜா வட்டப் பஞ்சாயத்து யூனியனில் அடங்கியது எங்கள் சிற்றூர் **செட்டித்தாங்கல்** என்ற பெயருடன் இராணிப்பேட்டையை அடுத்து சுமார் இரண்டு மைல் வடக்கிலுள்ள ஊர். 2,200 மக்கள் வாழும் அக்கிராமத்தில் அத்தனைபேரும் விவசாயத்தால் வயிறு வளர்க்க வேண்டும்.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் இவ்வூர் எவ்வித வசதியுமின்றி கேட்பாற்றுக் கிடந்தது. இக்கிராமத்தையும் இராணிப்பேட்டையையும் இணைக்கும் புறம் போக்குப் பாதையும் கூட பாதைக்கருகிலுள்ள நிலச் சொந்தக் காரர்களே ஆக்கிரமித்துக் கொண்டு ஒரு வண்டிகூடப் போவதற்கு வழியின்றிச் செய்து விட்டிருந்தனர். முப்பது ஆண்டுகளாக அந்தப் பாதையைச் சீர் செய்ய முயன்றோம் அரசினரை அணுகி. கவனிப்பதாகச் சொல்லிச் சென்ற அதிகாரிகள் கணக்லடங்கார்.

நல்ல காலம் வருமா? நம் ஊர் சீர் படுமா? என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏமாற்றம் அடையும் நேரம். எதிர் பாராவிதமாக நல்லோர் பலரின் முயற்சியால் எங்கள் வாலாஜா வட்டத்திற்கு வட்டார அபிவிருத்தித் திட்டம் வந்தது. இரண்டு ஆண்டுகள்தாம் ஆயின திட்டம் செயல்பட்டு.

பஞ்சாயத்து உருவாயிற்று

அதற்குள் போட்டியின்றிப் பொது மக்களே ஒரு பஞ்சாயத்தை உருவாக்கினர். பஞ்சாயத்தும் பொது மக்களும் கூட்டாகச் சேர்ந்து உழைக்க முற்பட்டனர்.

அதன் விளைவு? திடீரென ஒரு நாள் கோட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் வட்டார அபிவிருத்தி அதிகாரி அவர்களும் ஊருக்கு வந்தனர். உழைப்பவர்களை எல்லாம் ஒன்று சேர்ந்தனர். "உங்களிடம் தானம் கேட்க வந்துள்ளோம். நீங்கள் கொடுக்கப்போகும் தானம் உள்ளதே அது தானங்களுள் எல்லாம் தலையாயது. அழியாதது ; அழிக்க முடியாதது ; பணம் படைத்தோரிடம் பெற இயலாதது. அப்படிப்பட்ட தானத்தை நீங்கள் கொடுக்க வேண்டும். கொடுக்கிறீர்களா ?" என்றனர்.

"என்ன ?" எனப் பல குரல்கள் ஒலித்தன.

"கொடுக்கிறோம் என்றால் சொல்லுவோம்" என்றனர்.

"கொடுப்போம்" என்றார்கள்.

பிறகு அதிகாரிகள் கூறினார்கள், "நீங்கள் முப்பது ஆண்டுகளாக முயன்றும் முடியாமலிருக்கும் இப்பாதையை வீட்டுக்கோர் ஆள், ஒரு நாள் உழைப்பைத் தானமாகத் தந்தால் இந்த பாதை மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ பாதைகள் உருவாகிவிடும்" என்றனர். மக்கள் யாவரும் அதிகாரிகளின் வார்த்தைகளுக்குக் கட்டுண்டனர்.

மக்கள் கூட்டம் உழைப்பைத் தரத்திரண்டது

அன்று காலை ஐந்து மணி, உழைப்போர் கூட்டம் ஒன்று திரண்டது. கடப்பாறை, மண்வெட்டி, கத்தி கோடரி, முதலிய ஆயுதங்களுடன் குடும்பத்திற்கோர் உழைப்பின் உருவம் வெளிப்பட்டது. அதிகாரிகள் புடை சூழ ஆரம்பமாகியது உழைப்புத் தானம். ஒரு வாரம் ஓயாத உழைப்பால் உருவாகியது விரிந்து நீண்ட பாதை.

அன்றையத் தினம் அந்தத் தலைவர்கள் மக்களைக் கூட்டி அத்தகைய ஊக்குவிக்கும் வார்த்தைகளைக் கூறவில்லையென்றால் இன்று அந்தப் பாதையே உருவாகியிருக்காதல்லவா? இதனை எண்ணும்போது அந்தத் தலைவர்களை மக்கள் பெருமையுடன் போற்றுகின்றனர். புகழ்கின்றனர்.

இதுவன்றி பஞ்சாயத்து—வட்டார அபிவிருத்திக் கூட்டுழைப்பின் மூலம் கிராமத்தில் வானொலி, சமூகக் கல்வி நிலையம் முதலியன அமைக்கப்பட்டு மக்கள் அறிவு

பெறுகின்றனர். நூல் நிலையமும் ஏற்படுத்தப்பட்டுப் பயனுறுகின்றனர். படிக்கத் துடிப்புள்ளோருக்குப் பற்றுக் குறை எதுவுமே இல்லை.

விவசாயிகள் நலம் பெற அவரவர்களுக்கு இலவச உரக் குழிகள் வெட்டித் தரப்பட்டள்ளன. இவற்றைக் கொண்டு சத்துள்ள கலப்பு உரங்களையும், கழிவு உரங்களையும் தயாரிக்க வாய்ப்பிருக்கின்றது.

சுகாதார முறைப்படி தெருக்களின் இரு பக்கங்களிலும் சாக்கடைகள் வெட்டித் தெருக்கள் சுத்தமாக வைக்கப்பட்டுள்ளன. தெருக்கள் பார்வைக்கு மிக அழகாகத் தோற்றம் அளிக்கின்றது.

தனியார் ஆக்கிரமிப்புகளைத் தடுத்துப் பொது இடங்களில் மரங்களைவளர்க்கவும், குறிப்பாக, உரங்களுக்கானமரங்களைப் பயிர் செய்யவும், ஏரிக்கரையில் 140 புங்கன் மரங்களையும் குளக்கரையில் வேப்பஞ் செடிகளையும் வைத்து வளர்த்துக்கொண்டிருக்கிறோம்.

அறியாமை இருளைப் போக்க....

எங்கள் கிராமத்திலே கட்டாயக் கல்வி அமுல் படுத்துவதகு முன், எங்கள் கல்விக் குழுவும் பொது மக்களும் ஒற்றுமையோடு பகல் உணவுக்காக, விவசாயிகளிடம் நெல்லும், பாரி கம்பெனி தொழிலாளர் மூலம் பணமும் வசூல் செய்து பிள்ளைகளுக்கு உணவு அளித்து வருகிறோம். இவ் வசூலை ஆண்டு ஒன்றுக்கு இரண்டு தவணையில் வசூல் செய்ய குழு தீர்மானிக்கின்றது. பிள்ளைகளுக்கு உண்ணும் கலையங்களும், தண்ணீர் குடிக்கப் பாத்திரங்களும் உதவ பலர் முன் வந்திருக்கிறார்கள். 6 வயதிலிருந்து 11 வயதுள்ள பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பப் பெற்றோர்களுக்கு கட்டாயக் கோரிக்கை அனுப்பிய பிறகு மேலும் பிள்ளைகள் வருகின்றார்கள். இன்னும் ஒரு திங்களுக்குள் பிள்ளைகளை அனுப்பாவிடில் முதலில் ஒரு சிலருக்கு அபராதம் அளிக்க கல்விக் குழு முடிவு செய்துள்ளது. ஊராட்சித் தலைவரும், தலைமை ஆசிரியரும், குழுவும் ஒவ்வொரு பெற்றோர் இடத்திலும் நேரில் சென்று கல்வியின் நன்மையும், பிள்ளைகளை அனுப்பத் தவறினால் அதனால் நேரப்போகும் நட்டத்தையும் எடுத்துச் சொல்லி வருவதால் நல்ல பலன் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது.

கிராமம் முன்னேறும், அதனால் நாடும் முன்னேறும் என்ற பெரும் நம்பிக்கையோடு பணி புரிகிறோம். எந்தெந்த விதத்தில் கிராமத்தை முன்னேற்றலாம் என்ற நோக்கோடு பல மாவட்டங்களிலுள்ள கிராமங்களைப் பார்வையிட்டுள்ளேன். மற்றைய மாவட்டங்களைக் காட்டிலும் எங்கள் வட்டாரம் சிறப்பாகத் தோன்றுவதாக நான் கருதுகிறேன். அதிலும் எங்கள் வட்டார அதிகாரிகள் பணி, போற்றுதற்குரிய ஒன்றாகும்.

பத்திரிகாசிரியர்கள் சிலர் எங்கள் கிராமத்தைப் பார்வையிட்டுப் பாராட்டியுள்ளனர். இத்தகைய பெரியார்களின் வாழ்த்தும் எங்கள் வட்ட அதிகாரிகளின் நல்லுரையும் எங்களையும், எங்கள் கிராமத்தையும் முன்னணியில் வைக்கும் என்பதற்கு ஒரு சிறிதும் ஐயமில்லை.

வளர்க விவசாயம் !

வாழ்க வட்டார அபிவிருத்தித் திட்டம் !

ஓங்குக உழைப்புத் தானம் !

[20-ம் பக்கத் தொடர்ச்சி]

5 திரு எஸ். கிருஷ்ணசாமிப் பிள்ளை, துணைக்காரியதரிசி, ஸ்தல ஸ்தாபன மேற்பார்வையாளர், கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத்துறை.

6 திரு கே. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., பஞ்சாயத்து நிதி இயக்குநர்.

7 திரு டி. என். சேஷன், ஐ.ஏ.எஸ்., துணைக் காரியதரிசி, கிராம நல—தல நிர்வாகத்துறை (வேலை முறை.)

8 திரு எஸ். வேங்கட ரமணன், ஐ.ஏ.எஸ்., துணைக் காரியதரிசி, நிதித் துறை (திட்டம்).

9 திரு டி. வி. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ்., உதவி காரியதரிசி, கிராம நல, தல நிர்வாகத்துறை.

10 திரு வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., விவசாயத்துறை இயக்குநர்.

11 திரு எச். கே. காஜி, ஐ.ஏ.எஸ்., மீன் வளர்ச்சித் துறை இயக்குநர்.

12 திரு டி. பட்டாபிராமன், ஜி.எம்.வி.சி., கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநர்.

13 திரு எஸ். பி. அம்புரோஸ், ஐ.ஏ.எஸ்., செட்டில்மெண்ட் இயக்குநர்.

14 திரு டி. எஸ். ராஜபூஷணம், எம்.ஏ., புள்ளி விவரத் துறை இயக்குநர்.

15 திரு ஜி. ராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ்., கோவை மாவட்டக் கலெக்டர்.

16 திரு கே. வி. ராமநாதன், ஐ.ஏ.எஸ்., சேலம் மாவட்டக் கலெக்டர்.

17 திரு குலாம் அஹமது பாட்சா, ஐ.ஏ.எஸ்., திருச்சிராப்பள்ளி மாவட்டக் கலெக்டர்.

18 திரு எம். சந்திரசேகரன், ஐ.ஏ.எஸ்., தஞ்சாவூர் மாவட்டக் கலெக்டர்.

19 திரு பி. ஆர். ராஜகோபாலன், கிராம கணக்குகளை சுலபப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேஷ அதிகாரி.

20 திரு அப்பண்டராஜ், கூட்டுப் பதிவாளர், கூட்டுறவு இலாகா.

மேலும் விவசாயத் துறைக் கூட்டு இயக்குநர்கள், மாவட்ட நிலையில் பணியாற்றும் பல்வேறு அதிகாரிகள், சிறப்பாக மாவட்டக் கால் நடைத்துறை அதிகாரிகள், மாவட்ட விவசாயத்துறை அதிகாரிகள் ஆகியோரும் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

மக்கள் கூடிச் செயலாற்றும்

குடிமராமத்து

தஞ்சை மாவட்டம், கீழவேளூர் பஞ்சாயத்து யூனியன் வழிகாட்டுகிறது...



மறந்து விட்டிருந்த பணி மறுபடியும் மலர்ச்சி பெற்றுத் திகழ்கிறது..

கிராமப் புறங்களில் மக்களே முன் வந்து செயலாற்றும் பலதிட்டங்களுள் குடிமராமத்து வேலை முதலிடம் பெறுகிறது.....

தஞ்சை மாவட்டம் கீழ வேளூர் பஞ்சாயத்து யூனியனைச்சேர்ந்த மக்கள் மேற்கொண்டுள்ள குடிமராமத்து வேலைகள்.

1, 2. தாத்தையங்கார் பேட்டை பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா 1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 13-ந் தேதியில் நடபெற்றது.

3, 4. விழாவில் கலை நிகழ்ச்சிகள்.



5. திருச்சி மாவட்டம் கரம்பகுடி பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா 1961 எப்ரல் மாதம் 13-ந் தேதி அன்று நடைபெற்றது.

6, 7. கடம்பத்தூர் வட்டாரத்தில் நடைபெறும் தேனீவளர்ப்பு.



4. 1961-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி அன்று கீழ்ப்பாக்கத்தில் அமைச்சர் ஸ்ரீ ஆர். வெங்கடராமன் கூட்டுறவு வீட்டுக் கடன பாங்குகளின் இரண்டாவது மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

5, 6. தமிழ்நாடு அரசாங்கப் பிரதம காரியதரிசி ஸ்ரீ. ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ். தஞ்சை மாவட்டச் சுற்றுப்பயணத்தின் போது கலந்து கொண்ட ஒரு கூட்டம்.

1. இந்திய உப ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் 1961-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2 ம் தேதி அன்று, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

2. நூற்றாண்டு விழாக் கட்டடத்தின் ஒரு தோற்றம்.

3. இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதர் டாக்டர் ஜே. கென்னத் கெல் பிராய்த் அமெரிக்க நன்கொடையானபால் பவுடருக்கு அடையாளப் பால் பவுடர் பொட்டலத்தை 1961-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ம் தேதி அன்று, சென்னைத் துறைமுகத்தில் நடந்த விழாவில் முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்களிடம் அளிக்கிறார்.

வைகை அணைக் காட்சிகள் . . . .

1. அணையிலிருந்து புறப்படும் கால்வாய்.
2. அணையும் அதன் சுற்றுப்புறமும்.
3. வைகை அணைக் கண்கள்.











4, 5. அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம், 31—7—61 அன்று வைகை அணையில் காட்டிலாகா பயிற்சிப் பள்ளியைத் திறந்து வைத்தார்.

6. முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ் 31—7—61 அன்று மதுரை, பயணர் ஓய்வு மனையைத் திறந்து வைத்துப் பார்வையிடுகிறார்.

6. மதுரை, பயணர் ஓய்வு மனையின் ஒரு தோற்றம்.

வளர்ச்சிப்பணி ஊழியரும் வளர்ச்சிப்பணி முறைகளும்

[திரு ரகுராம்சிங் எம்.ஏ., பி.டி., இராமகிருஷ்ண வித்தியாலயா, பெரியநாயக்கன்பாளையம்]

[சமுதாய நலத் திட்டத்தில் தலையாய ஊழியர் கிராம சேவக். பஞ்சாயத்து ஆட்சி அமுலுக்கு வந்த பிறகு அவருடைய சேவையின் முக்கியத்துவம் இன்னும் அதிகமாகிவிட்டது. கிராம மக்களுக்கும், நிர்வாகத்தை இயக்குபவருக்குமிடையே, தொடர்புச் சங்கிலியாக இருக்கும் கிராம சேவக்கின் பணிகள் பற்றி விளக்குகிறது இக் கட்டுரை.

—ஆசிரியர்]

1952-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி தேசிய விரிவுப் பணித் திட்டம் செயலாற்றத் தொடங்கியது. இந்திய சமூகத்தில் மாபெரும் புரட்சியை சாத்வீக முறையில் தூண்டுவதே இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் சிறப்பான இலட்சியம். கடந்த ஒன்பது ஆண்டுகளாக, இந்த இயக்கம் நாட்டில் மேன்மேலும் பரவி பலம் பெற்றுவருகிறது. 1963-ம் ஆண்டிற்குள் நாட்டின் எல்லா பாகங்களும் இத் திட்டத்தில் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இந்த தேசிய வளர்ச்சிப்பணித் திட்டத்தில் பணியாற்றி வருகிறார்கள். வளர்ச்சிப்பணியின் நிர்வாக அமைப்பின் பல நிலைகளில் இந்த ஊழியர்கள் வேலை செய்கின்றனர். இருப்பினும் கிராம சேவக் என்பவரையே வளர்ச்சிப்பணி ஊழியர் என்று சிறப்பான பொருத்தத்துடன் அழைக்கலாம்.

மக்களாட்சி வலுவடைந்து வரும் இந் நாட்களில், அரசாங்க உத்யோகஸ்தர்களாகிய வளர்ச்சிப்பணி ஊழியர்கள் பொதுமக்களிடையே நல்ல பரஸ்பர தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டால்தான் நமது நல்ல பல திட்டங்கள் நிறைவேறக்கூடும். இதற்காக விரிவுப்பணி ஊழியர்கள் வளர்ச்சிப் பணி முறைகளை நன்றாகக் கையாள வேண்டி இருப்பதால் அதில் அவர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருப்பது அவசியம். இந்த கட்டுரையில் மேலான வளர்ச்சிப்பணி முறைகளைக் கிராம சேவக்குகள் எப்படிப் பயன்படுத்த முடியும் என்பதை ஆராய்வோம்.

(1) நேர்முகத்தொடர்பு முறை (Direct Contact method).
(2) குழுச் சர்ச்சை முறை (Group Discussion method).
(3) செய்முறை காட்டல் (Method Demonstration).
(4) பயன் காட்டல் முறை (Result Demonstration).
(5) கிராமக் குழுக்களின் மூலம் பணி செய்தல் (Village group action).
(6) *கிராமத் தலைவர்களின் மூலம் பணி செய்தல். (Working with village Leaders)

1. நேர்முகத் தொடர்பு முறை

கிராமத்தில் பலரை அவர்களுடைய வீடுகளில் சென்று சந்திக்க சேவக் முயல வேண்டும். ஆனால் ஒருவரால் கிராமத்திலுள்ள எல்லா வீடுகளுக்கும் செல்வது சாத்தியமாகாது. எனவே, அவர் சில வீடுகளுக்குச்சென்று சிலரைத்தான் கண்டு பேசமுடியும் என்று தெரிகிறது. அதனால் இந்தச் சிலர் பலரகமான குடும்பங்களை சார்ந்தவர்களாக இருப்பது அவசியம். இவ்விதமாக ஒருவரின் ஜாதி, தொழில், அந்தஸ்து, போன்றவைகளைப் பாராமல் கிராமத் தொண்டர், இல்லங்களில் சென்று சந்திப்பதால், இவரைப் பிறர் நன்றாகத்தெரிந்துகொண்டு நெருங்கிப் பழக முடியும். சில சமயங்களில் வட்டார அதிகாரிகள் கிராமத்தில் நடைபெறும் சமுதாய அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பார்க்க வரும்போதும் கிராம ஊழியரானவர் அவர்களை இவ்விதமாக கிராம மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கு அழைத்துச் செல்வதினாலும் கிராமத்தாரிடையே ஒரு விழிப்பு உணர்ச்சி ஏற்பட சாதகமாகிறது.

நேர்முகத் தொடர்பினால் ஏற்படக்கூடிய சில நன்மைகள்.—

(1) நேரடியாகச் சென்று பார்ப்பதால், கிராமப் பிரச்சினைகளைப் பற்றி நேரடியாகத் தெளிவாக, விவரமாக, கிராம ஊழியர் தெரிந்துகொள்ள முடிகிறது.

(2) நேர்முகத் தொடர்பினால், நல்லெண்ணம் வளர்கிறது.

(3) நேர்முகத் தொடர்பினால், மக்களுக்கு கிராம சேவக் இடம் நம்பிக்கை ஏற்படுகிறது.

(4) நேர்முகத் தொடர்பினால், கிராமத்தில் நல்ல தலைவர்களை தேர்ந்தெடுக்க முடிகிறது.

(5) நேர்முகத் தொடர்புகளினால், சமுதாய அபிவிருத்தி திட்டத்தில் ஆர்வம் அதிகரிக்கிறது.

(6) எந்த ஒரு நல்ல காரியத்தையும் நேர்முகமாகச் சந்தித்துச் சொல்வதினால், புதிய கருத்துக்களின் சிறப்பை மக்கள் புரிந்துகொண்டு தங்கள் மனப்பான்மையையும் பழக்கங்களையும் அதற்கேற்ப மாற்றிக்கொள்ள உதவுகிறது.

நேர்முகத் தொடர்பு முறையிலுள்ள சில குறைபாடுகள்.—

(1) ஒவ்வொரு குடும்பத்தாரையும் நேராகச் சென்று கண்டுபேசுவது என்பது இயலாது. இவ்விதச் சந்திப்புகள் அதிக காலத்தை எடுத்துக்கொள்கின்றன.

(2) பிற வளர்ச்சிப்பணி முறைகளோடு இதை ஒப்பிட்டு பார்க்குமிடத்து, இந்த முறை உபயோகிக்கும்போது கணிசமான மக்கள் தொகையை அணுகமுடிவதில்லை.

(3) மக்களுக்குச் சௌகரியமாக இருக்கின்ற நேரத்தில் சென்று சந்திப்பது என்பது சில சமயங்களில் கிராம சேவகருக்கு சாத்தியமானாலும்கூட, பெரும்பாலான சமயங்களில் அவருடைய இதர வேலையை இது பாதிக்கக்கூடும்.

(4) சிலரை மட்டும் சந்தித்து வந்தால், அக்கம்பக்கத்தில் குடியிருப்பவர்கள், கிராம ஊழியர் தங்களை மதித்து சந்திக்க வர முயலவில்லை என்று அதிருப்தி அடைவார்கள்.

(5) பழக்கத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால், பொதுவாக கிராம ஊழியர்கள் தமக்கு எப்படியோ பழக்கப்பட்டுவிட்ட சில வீடுகளுக்கே தொடர்ந்து செல்கிறார்கள்; இதர குடும்பத்தார்களை கவனிக்காமல் இருந்து விடுகின்ற இயல்பு இருப்பதாகத் தெரியவருகிறது.

அநேக நன்மைகளை உடைய நேர்முகத் தொடர்பு முறையில் மேற் சொல்லப்பட்ட குறைபாடுகள் ஏற்படாமல் இருக்கக் கிராம ஊழியர் கீழ்வரும் சில விதிகளைப் பின்பற்ற வேண்டும் :—

(1) ஒருவரை, அவருடைய வீட்டில் ஒய்வாக சந்திக்கச் செல்லும்போது, திட்டவட்டமான நோக்கத்துடன் கிராம ஊழியர் செல்ல வேண்டும்.

(2) கிராமங்களின் நாட்டுப்புறத்திலும் உள்ள பல ஜாதியைச் சார்ந்த பலவிதமான கிராமத்தொழில் செய்கின்றவர்களை கிராம ஊழியர் சந்திக்க முயற்சிக்க வேண்டும்.

(3) நேர்முகத் தொடர்பு முறையை இதர முறைகளுடன் சேர்த்துப் பயன்படுத்த வேண்டும்.

(4) கிராம ஊழியர் பிறரைக் காணச் செல்கின்ற நேரம் அந்த குடும்பங்களின் சூழ்நிலைக்கும் சௌகரியத்திற்கும் ஒத்திருக்கவேண்டும்.

(5) தான் எந்த நோக்குடன் வந்துள்ளார் என்பதை மக்கள் புரிந்துகொள்ளும்படிச் செய்ய வேண்டும். சில சமயங்களில் கிராமத்தார் எக்காரணத்தை முன்னிட்டு கிராம ஊழியர் சிரமமெடுத்து வந்து சென்றார் என்று புரியாமல் திகைப்பதை நாம் பார்க்கிறோம்.

2. குழுச் சர்ச்சை முறை :

கிராமப்பிரச்சினைகளைப் பற்றி ஒரு சிலர் சிந்திப்பதால் மட்டும், கிராம முன்னேற்றம் ஏற்பட்டுவிட முடியாது. கிராமத்திலுள்ள பொது மக்கள் கூடிப் பேசினால்தான் என்ன பிரச்சனைகள் இருக்கின்றன, அவைகளை எப்படிச் சமாளிப்பது என்று முடிவு செய்ய முடியும். பலர் கூடி சிந்திப்பதால், தம்முடைய கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வதால், அவர்கள் கிராம சமூக பொருளாதார பிரச்சினைகளைத் தீர்க்க வழி தேட முடியும். ஆகவே குழு ஆய்வு முறையைக் கிராம சேவக் நன்றாக உபயோகிக்கப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். அந்த ஆய்வு முறையினால் ஏற்படக்கூடிய நன்மைகள் :

(1) ஒரு பொருளைப்பற்றியோ அல்லது பிரச்சினையைப்பற்றியோ பலர் ஒரு குழுவாகக் கூடிப் பேசுவதனால் அப்பொருளைப்பற்றி அதிக விவரங்களை அறிந்துகொள்ள முடிகிறது.

(2) குழுவில் கலந்து பேசுவதால் ஒவ்வொருவருடைய சிந்தனையும் தெளிவுபடுகிறது.

(3) ஒவ்வொருவருடைய சொந்த அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளிக்கிறது. பிறர் அக்கருத்தை எதிர்க்கும் போது தன்னுடைய மனப்போக்கு சரிதான் என்று எடுத்துச் சொல்லி வாதாடவும் முடிகிறது.

(4) குழுச் சர்ச்சையில் பங்கு கொள்வதன் காரணமாகப் பிறருடைய கருத்துக்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

(5) தவறான கருத்துக்களையும், தவறான மனப்பான்மையையும் போக்க, உண்மையைப் புலப்படுத்த முடிகிறது.

(6) குழுச் சர்ச்சையில் பலர் பங்கு கொள்ளமுடியும்.

(7) பேசப்படுகின்ற பொருளில் நம்முடைய கவனமும் ஈடுபாடும் அதிகரிக்கலாம்.

(8) புதிய கருத்துக்களையும் புதிய சிந்தனைகளையும் பலர் அறியத் தெளிவாக விளக்கம் கூற சந்தர்ப்பம் கிடைக்கிறது.

(9) கிராமத்தார்களிடையே நல்ல பல தலைவர்களை இம்முறையினால் கண்டு, அவர்களுக்குத் தேவையான ஆதரவையும், பாராட்டுதலையும் கிராம ஊழியர் அளித்து அவ்விதத் தலைவர்களைக் கொண்டு சமுதாய அபிவிருத்திப் பணியை மேலும் தீவிரமாக நடத்த உதவலாம்.

(10) குழுச் சர்ச்சையில் கலந்து கொள்கின்றவர்கள் தம்மிடையே ஏற்றத் தாழ்வுகளையும் இதர வேற்றுமைகளையும் பாராட்டாமல் ஜனநாயக முறையில் பழகப் பயிற்சி பெறுகிறார்கள்.

(4) மக்கள் மன மகிழ் மன்றங்களில் இவ்வித கூட்டங்களை, வைத்துக் கொள்வது நல்லது. ஏனெனில் சாதாரணமாக பெரும்பாலான மனமகிழ் மன்றங்கள் கிராமத்திற்கு மையமாக கட்டப்பட்டிருப்பதால், கிராமத்தின் நாற்ப்புறத்தினின்று வருகின்றவர்களுக்கும் வசதியாக இருக்கும்.

(9) இவ்விதமான கூட்டங்களில் கிராம ஊழியர் கிராமத்தலைவர்களுக்கு ஒரு நண்பனாகவும், வழிகாட்டியாகவும் இருக்கவேண்டும். அனைத்தையும் தலைவர்கள் முன் வைத்தே, தான் பின் நின்று சாதிக்கவேண்டும். குழுவினர் தம்முடைய கூட்டத்தை நடத்த தமக்குள்ளேயே ஒருவரை அவைத் தலைவராகவும், மற்றொருவரைச் செயலாளராகவும் தேர்ந்தெடுத்துக் கொள்வர். சர்ச்சையைப் பற்றிய குறிப்புகள் அனைத்தையும் செயலர் தான் கரும்பலகையில் எழுதுவார்.

குழுச் சர்ச்சையை எப்படி நடத்துவது ?

(1) குழுச் சர்ச்சையானது திட்டவட்டமான ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண நடத்தப்படுவதாக இருக்கும். இந்தப் பிரச்சினை என்ன என்பதைக் கரும்பலகையின் தலைப்பில் எழுத வேண்டும்.

(2) ஒவ்வொருவருடைய அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும் போது ஒவ்வொருவரும் எழுந்திருந்துதான் சொல்ல வேண்டும் என்று தேவையில்லை. அமர்ந்த இடத்திலிருந்து அடக்கத்துடன் அவரவர்கள் சிந்தனையை வெளிப்படுத்துவதே மேலாகும்.

(3) குழுச் சர்ச்சையில் அனைவரும் பங்கு கொள்ள வேண்டும். ஒரு சிலரே திரும்பத் திரும்ப பேசுகின்ற நிலை ஏற்படக்கூடாது. எப்படிப்பட்ட குழுவிலும் சிலர் சங்கோசப்பட்டு வாய் திறவாமல் இருப்பது நாம் அறிந்ததே. இருப்பினும் அக்குழுவின் தலைவர் அப்படிப்பட்டவர்களையும் வாய்விட்டுப் பேசும்படி பக்குவமாகத் தூண்டுதல் நலம்.

(4) அவையில் கெடுபிடியான வாதம் நடைபெற வேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படவில்லை. அவையில் நல்ல சூழ்நிலையும் நட்புறவு வளரும் வாய்ப்புகளும் இருக்கும்படி கவனிக்க வேண்டும்.

(5) கருத்துக்கள் வேறுபட நேரிடலாம். நல்ல குழுச் சர்ச்சையில் கருத்து வேறுபாடுகள் இருப்பது இயற்கையே. ஆனால் கருத்துக்கள் மாறுபட்டாலும் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தவர்கள் உணர்ச்சி வசப்படாமல் புற நிலையிலிருந்து பேச வேண்டியது அவசியம். கருத்துக்கள் மோதினால் ஆட்கள் மோத வேண்டுமென்பதில்லை.

(6) குழுத் தலைவரானவர், அடிக்கடி (அதாவது பதினைந்து அல்லது இருபது நிமிடங்களுக்கு ஒரு முறை) பிறரால் சொல்லப்பட்ட பொருள்களைச் சுருக்கமாக கோவைப்படுத்திச் சொல்வார். முடிவில் அவர்முடிவையும் தெரியப்படுத்துவார்.

3. "செய்முறை காட்டுதல்":

நவீன விஞ்ஞான செயல் முறைகளை கிராமத்தார்களிடையே நுழைக்க முயலும் கிராம ஊழியர் இம் முறைகளை எவ்விதம் உபயோகிக்க வேண்டும் என்பதைச் செய்து காட்டித் தெரிவிக்க பயிற்சி பெற்றவராக இருக்கவேண்டும். உதாரணமாக விதைக் கலப்பை (seed drill) என்ற புதிய விவசாயக் கருவியைப் பயன்படுத்தி நல்ல முறையில் விதைகளை விதைக்க முடியும் என்று கிராம ஊழியர் சொன்னால் மட்டும் போதாது. ஒரு கருவியைப் பல விவசாயிகளின் முன்னிலையில் உபயோகித்துக் காட்டினால் அதனுடைய சிறப்பான பயனில் விவசாயிகளுக்கு நம்பிக்கை ஏற்படும். இராட்டை பயன்படுத்தும் கிராமத்தில், நூல் நூற்பையும் அதனால் துணைவருவாயையும் அவர்கள் அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு கிராம ஊழியர் அம்பர் சர்க்காவை அவர்களுக்கு அறிமுகம் செய்யலாம். அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு அம்பர் சர்க்காவை ஒரு அரை மணி ஓட்டி, இதனால் இராட்டையைவிட எத்தனை மடங்கு அதிகமாக நூல் நூற்க முடியும் என்று எடுத்துக்காட்ட வேண்டும்.

"செய் முறை காட்டுதல்" முறையினால் ஏற்படும் நன்மைகள் :

(1) செய்முறை காட்டுவதால் புதிய கைத்திறன்கள் வளர்கின்றன.

(2) செய்முறைகாட்டுவதினால் மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுகிறது. பலவிவசாயிகள் கூடி செய்து காட்டுவதைப் பார்க்கிறார்கள். அதனைப் பற்றி சர்ச்சை செய்கிறார்கள்; மேலும் தமக்குத் திருப்தியாக இருந்தால் தாமும் அம்முறைகளைக் கையாளத் துவங்குகிறார்கள்.

(3) செய்முறை காட்டுதலினால் குடியானவர்களுக்குப் புதிய விவசாய முறைகளில் நம்பிக்கை ஏற்படுகிறது.

(4) செய்முறை காட்டுதலினால் கிராம ஊழியருக்கும், விவசாயிகளுக்கும், கைத் தொழில் செய்பவர்களுக்கும் இடையே நட்புறவு ஏற்படுகிறது.

(5) விஞ்ஞான முறைகளைக் கிராமத்தில் செயல் படுத்திக் காட்டுவதினால் அம்முறைகளுக்கு விளம்பரம் கிடைக்கிறது. பலர், விரைவில் புதிய விஷயங்களைப் பற்றி அறிய ஆவலைத் தூண்டுகிறது.

(6) மிகச் சொற்பமான செலவில் செய்முறை காட்டுதலினால் விவசாயிகள் புதியமுறைகளைக் கையாளும்படி தூண்டமுடிகிறது.

"செய்முறை காட்டுதல்" முறையில் உள்ள சில குறைகள் :—

(1) எல்லாப் புதிய முறைகளையும் செயல்முறையில் காட்டுவது என்பது சாத்தியமாகாது. சில முறைகளைத் தான் செய்துகாட்டக்கூடும். சில பழக்கங்கள் இம் முறையில் அடங்காதனவாக இருக்கலாம்.

(2) செய்முறைக் காட்டுதலைக்கொண்டு மக்கள் பயன் பெறவேண்டுமென்றால் கிராம ஊழியர் புதிய முறையைச் செய்து காட்டும்போது அனைவரும் அதை நேரடியாகப் பார்த்துத் தீரவேண்டும். அப்பொருளைச் சார்ந்த விளக்கப் படங்களை கிராம ஊழியர் தயாரித்துக் காண்பிக்க வேண்டியது அவசியம். இல்லையெனில் இதன் முழுப்பொருளை கிராமத்தாரால் கிரகித்துக் கொள்ளமுடியாது.

(3) அறிவியல் முறைகளைப் பொதுமக்கள் முன்னிலையில் செய்து காட்டுவதற்கு, அதற்காக அதிகமான முன் ஏற்பாடுகள் செய்தால் தான் வெற்றிகரமாகச் செய்து காட்டமுடியும். இந்த, செய்து காட்டுதலுக்குத் தேவையான கருவிகளையும் இதரப் பொருள்களையும் முன்கூட்டி அங்கு இருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். சரிவர முன்னேற்பாடுகள் இல்லாத காலங்களில் பலர் பரிகாசம் செய்வதற்கு இடம் ஏற்படலாம்.

(4) நல்ல பயிற்சியும் அனுபவமும் இருந்தால்தான் தவறின்றி ஒழுங்காகச் செய்து காட்டமுடியும். செய்து காட்டுபவருக்கே எப்படிச் செய்வது என்று சந்தேகம் இருக்கக்கூடாது.

(5) பொதுக் கூட்டம் போன்ற சில வளர்ச்சிப் பணி முறையைவிட, இம்முறையைச் செய்து காண்பிக்கும் போது சற்று பொருட் செலவு ஏற்படலாம்.

புதிய முறைகளை நடை முறையில் செய்து காட்ட விரும்பும் கிராம ஊழியர் கீழ்வரும் சில குறிப்புக்களை கவனிக்க வேண்டும் :—

(1) கிராம மக்களுடைய தேவைக்கும், வசதிக்கும் பொருத்தமான புதிய முறைகளை மட்டும் செய்து காட்டினால் போதுமானது.

(2) புதிய முறைக்கு, ஒரு கிராமத்தில், இயற்கையாக தேவை ஏற்படும் பருவத்தில் செய்முறை காட்டுதல் முறையைக் கையாள வேண்டும். எந்த எந்த நவீன முறைகளைச் சிறப்பாக செய்து காட்டி நிரூபிக்க முடியுமோ அவைகளை மட்டுமே செய்து காண்பிக்க வேண்டும். கடினமான முறைகளை எடுத்துக் கொண்டு திண்டாடவேண்டியதில்லை. சுலபமாகச் செயல்படுத்தக் கூடியவைகளையே கவனிப்பது விரும்பத்தக்கது.

(3) இந்த சாதனைக்கும் நல்ல விளம்பரம் கொடுத்து, கிராமத்தில் அநேகரின் கவனத்தைக் கவர முயற்சிக்க

வேண்டும். மக்கள் இவ்விதக் கூட்டங்களில் பெருமளவில் வந்து கூடுவது நல்லதல்லவா !

(4) கிராம ஊழியர், தான் எடுத்துக்கொண்ட முறையை முன்னரே பல முறை செய்து பழக்க முடையவராக இருக்கவேண்டும். அவர் அதுசம்பந்தமான நுட்ப அறிவைக் கொண்டு மக்கள் மனதில் ஏற்படும் பல சந்தேகங்களைத் தெளிவுபடுத்தக் கூடியவராக இருக்கவேண்டும்.

(5) கிராம விவசாயிகளின் பொருள் வசதிக்கேற்ப அவர்களால் வாங்கிப் பயன்படுத்தக்கூடிய விவசாயக் கருவி களை உபயோகித்துக் காட்டவேண்டும். மக்களுடைய தரத்திற் கேற்ப இக்கருவிகளை ஊழியர் சிபாரிசு செய்யவேண்டும்.

(6) இது சம்பந்தமாக இருக்கின்ற படங்களையும், இதர குறிப்பு ஏடுகளையும் அங்கு கூடியுள்ளோருக்கு இலவச மாக விநியோகம் செய்யலாம்.

4. பயன் காட்டல் முறை :

எல்லாப் புதிய முறைகளையும் உடனடியாக உபயோகித்து, அவைகளின் பயனையோ, அல்லது முடிவையோ எடுத்துக் காட்ட முடியாது. சில முறைகளினால் ஏற்படுகின்ற பலா பலன்களை உடனடியாகக் கண் எதிரே காண முடிகிறது, ஆனால் வேறு பல முறைகளினால் விளையும் நன்மைகள் புலனாவதற்குச் சில நாட்களாவது, சில சமயங்களில் சில மாதங்களும் ஆகும். உதாரணமாக பச்சை உரம், அல்லது புதிய ரக கோதுமையைப் பண்ணையில் பயன் படுத்து வதால் விளைச்சலில் ஏற்படுகின்ற அதிகரிப்பு சில மாதங் களுக்குப் பின்னரே தெரிகிறது. இதே போன்று கொசு, முதலான கிருமிகளை ஒழித்து மலேரியா, காலரா போன்ற தொத்து நோய்கள் வராமல் இருக்க மருந்தைத் தெளிக் கிறார்கள். ஆனால் நீண்ட காலத்தில் தான் இதன் பயனை உணர முடியும். இவ் விதமாக நீண்ட காலத்தில் நல்ல பலனை அளிக்கக் கூடிய நவீன விஞ்ஞான முறை களைச் செய்து காட்டும்போது பயன் காட்டல் முறை என்று சொல்லுகிறோம்.

அபிவிருத்திப்பணி முறைகளிலே தலைசிறந்து விளங்கு வது இந்தப் பயன் காட்டல் முறை என்றால் மிகையாது. ஜப்பானிய முறையில் நெற் பயிர் சாகுபடி செய்வதால் உபரி விளைச்சல் ஏற்படுகிறது என்பதை நிரூபிக்கலாம். இரண்டு நிலப்பகுதிகளை இப்பரிசோதனைக்காக எடுத்துக் கொள்ளவேண்டும். ஒரு நிலப்பகுதியில் சாதாரணமாக, வழக்கமாகச் செய்து வரும் முறையில் சாகுபடியும், மற் றொரு பகுதியில் நவீன ஜப்பானிய முறைப்படி சாகுபடி யும் செய்ய வேண்டும். இருவித பயிர்களின் வளர்ச்சியை யும், இறுதியில் அறுவடையையும், கிராமப் பண்ணைக் காரர்கள் கவனித்தால் அவர்களுக்கு ஜப்பானிய முறையின் சிறப்பு தெரியும். இவ்விதமாக ஒரு கிராம ஊழியர் பரிசோதனை செய்யவிருக்கும்போது வேண்டிய விளம்பரம் கொடுக்க வேண்டும். கிராம மக்களால் நேசிக்கப்படுகிற ஒரு விவசாயியின் தோட்டத்தில் இந்தச் சோதனையை, அந்த விவசாயியைத் தலைவராக வைத்து, ஊழியர், வழி காட்டியாக இருந்து நடத்தி வைப்பார்.

பயன் காட்டல் முறையினால் ஏற்படக்கூடிய நன்மை கள் :—

(1) பயன் காட்டல் முறையினால் புதிய முறைகளின் நன்மைகளை நேரடியாக நிரூபிக்க முடிகிறது. ஊழியர் சிபாரிசு செய்கின்ற புதிய முறைகளை கிராமத்தார் இந்தப் பரிசோதனையின் வெற்றியினால் ஏற்றுக் கொள்கிறார்கள்.

(2) பயன் காட்டல் முறையை நல்ல விதமாகச் செய்தா அதற்கு நல்ல விளம்பரம் அளித்தால், மக்களுக்குச் சமு தாய அபிவிருத்தித் திட்டத்தில் ஆழமான நம்பிக்கை ஏற்படும்.

(3) பயன் காட்டல் முறையை மையமாக வைத்து, சில பொதுக்கூட்டங்களை கிராமத்தில் ஏற்பாடு செய்யலாம். சில சுவர் ஒட்டிகளையும் விளக்கப்படங்களையும் கொண்டு மக் களுக்குத் தேவையான செய்தியை எளிய முறையில் அளிக்கலாம்.

(4) பயன் காட்டல் முறையினால், விவசாயிகளிடையே ஒரு விழிப்புணர்ச்சி பொதுவாக ஏற்படுகிறது. மேலும் புதிய முறைகளைக் கையாள முன்வருகின்ற விவசாயிகள் பிறரால் மதிக்கப்படும் தலைவர்களாகவும் ஆகின்றனர்.

பயன் காட்டல் முறையிலுள்ள ஒரு சில குறை பாடுகள் :—

(1) கிராம ஊழியர் இந்த முறையைச் சிறப்பாக நடத்த, நல்ல ஆர்வமுள்ள, மக்கள் ஆதரவுள்ள, ஒரு பண்ணைக் காரரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இது மிகவும் கடின மான காரியம். ஏனென்றால் புதிய முறையில் ஆர்வம் காட்டுகின்றவர்கள், கிராமத்தில் செல்வாக்கு உடையவர் களாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. கிராம மக்களின் மதிப்பைப்பெற்ற தலைவர்கள் விரைவில் இந்த முறைகளில் அக்கறை காட்டுவதில்லை. ஆகவே இம் முறையைச் செய்து காட்டுவதற்காகஒரு பண்ணைக்காரரை தேடுவது மிகவும் கடினமான காரியமாகும்.

(2) சில சமயங்களில் இதனால் விவசாயிகளிடையே பொறாமை ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். பயன் காட்டல் முறை யாருடைய தோட்டத்தில் செய்கிறார் களோ அந்த விவசாயியிடம் அடிக்கடி கிராம ஊழியர் சென்று, கலந்து, திட்டமிட்டுச் செய்ய வேண்டி நேரிடுகிறது. ஆனால் இவ்விதம் இவர் அநேக தடவைகள் ஒரே விவசாயி யைச் சந்தித்து வருவது பிறரிடம் பொறாமையை உண்டாக் கலாம்.

(3) பயன் காட்டல் முறையின் வெற்றியும் தோல்வியும் தட்ப வெட்ப நிலையையும் பொறுத்திருக்கிறது.

(4) இம்முறையினால் நல்ல பயன் கிடைப்பதற்குக் காலம் அதிகம் தேவைப்படுகிறது. இதைச் செய்கின்றவர்களும், பின் பற்றுகின்றவர்களும் பொறுமையோடு இருந்து முடிவைக் கவனிக்க வேண்டி இருக்கிறது.

இவ்விதமான பயன் காட்டல் முறையைக் கையாளும் கிராம ஊழியர்கள் கவனிக்கத்தக்க சில குறிப்புக்கள் வருமாறு :—

(1) கிராம ஊழியர், தானாக, புதிய பரிசோதனைகளைச் செய்ய வேண்டியதில்லை. தனக்கு நன்றாக பயிற்சியும் பழக்கமுமுள்ள சில புதிய முறைகளை மட்டும் செய்தால் போதுமானது.

(2) எந்த ஒரு புதிய முறையின் சிறப்பையும் சரிவர எடுத் துக்காட்ட, அதன் அருகில் உள்ள நிலப் பகுதியிலேயே பழைய முறையையும் செய்வது அவசியமாகும்.

(3) அநேக, பயன் காட்டல் பரிசோதனைகளைச் சய்ய முயற்சி செய்வதை விட ஒரு கிராமத்தில் எடுத்துக்கு கொள்கின்ற ஒரு சில சோதனைகளை (அல்லது செயல் கொட்சி முறையை) உயர்ந்த தரத்தில் செய்வதே மேலம்

(4) இது சம்பந்தமாக அடிக்கடி கூட்டம் போட்டு சோதனையின் பல் வேறு நிலையைப்பற்றி மக்களுக்கு எடுத்துக் சொல்வது முக்கியமாகும். வெற்றியுடன் முடிக்

கும் போது, நல்ல விளம்பரம் கொடுக்க வேண்டும். ஒரு பரிசோதனை (செயல் காட்சி முறையின்) அந்த நவீன முறையை எத்தனைப் பண்ணைகளில் செயலில் கொண்டு வருகிறார்கள் என்பதைக் கொண்டே முடிவு செய்ய வேண்டும்.

5. கிராமக் குழுக்களின் மூலம் பணி செய்தல் :

கிராம அபிவிருத்திக்காகப் போடப்படும் திட்டங்கள் மகக்ள் திட்டங்களாகும். கிராமங்கள் முன்னேற ஒரு சிலர் மட்டும் வேலை செய்தால் போதாது. நாட்டிலுள்ள கிராமங்கள் அனைத்திலுமுள்ள மக்கள் தம் வாழ்க்கைத் தரம் முன்னேற, தாமே காரியம் செய்ய முற்பட வேண்டும். கிராமங்களின் குழுக்களைப் பயன்படுத்தினால் முன்னேற்றத் திட்டங்களை விரைவில் நிறைவேற்றக்கூடும். கிராமத்திலுள்ள பிரச்சினைகள் பெரும்பாலும் கிராமக்குழுக் களால் கவனிக்கப்பட வேண்டும். தனிப்பட்ட நபர்கள் கிராமப் பொதுப் பிரச்சினைகளைப்பற்றி முடிவு செய்து விட முடியாது. அதற்குப் பொது மக்கள் தான் சரியான நீதி பதிகள்.

இந்தியக் கிராமங்களில், பஞ்சாயத்து, கூட்டுறவு சங்கம், பள்ளிக்கூடம்—இம் மூன்றையும் தவிர மற்ற எவ்வித மான குழுக்களும் கூட்டப்படுவதாகத் தெரிய வில்லை. எப்படி நம் நாட்டில் ஒரு ஏக்கர் நிலத்தின் சராசரி விளைச்சல் மிகவும் குறைவு என்பதை ஒப்புக்கொண்டோமோ, எப்படி இந்திய மக்கள் தங்களுடைய சுற்றுப்புறத்துப்புரவைச் சரிவர கவனிப்பதில்லை என்பது நமக்கு தெரிந்ததோ, அவைகளைப் போன்றே நம்முடைய கிராமங்களில் குழு அமைப்புக்கள் (group formation) பெரும்பாலும் இல்லை என்பதை உணர்ந்து, இந்நிலையை நிவர்த்திக்க வேண்டியனவற்றைச் செய்யவேண்டும்.

எப்படி குழுக்களை தயாரிக்கலாம் என்பதை ஆராய்வோம். முக்கியமான பிரச்சினைகளைத் தீவிரமாக விவாதிக்கின்ற சிலர் ஒன்று கூடும் போது, அவர்கள் அதற்காகத் திட்டங்களைத் தீட்டி சமாளிக்க ஏற்பாடு செய்வார்கள். எந்தத் திட்டம் மக்களால் யோசித்து, தேவை என உணரப்பட்டு உரு வாகின்றதோ, அது இறுதியில் வெற்றி அடைவது உறுதியே. இப்படிச் சிலர் கூடும்போது அந்த பிரச்சினையைப் பற்றி மற்றும் வெளியுள்ள சிலரும் சிந்திக்கத் துவங்குவர். அப்படிப் புதிதாக சேர்கின்றவர்களுடன் கலந்து பேசு வதால், சில தலைவர்கள் அவர்களிடையே வெளிப்பட்டு, ஒரு இயக்கமாக மாறி, கிராமத்தின் கவனத்திற்கு கொண்டு வருவர். உதாரணமாக, ஒரு கிராமத்தில் கூட்டுறவுப்பண்ணை துவங்க வேண்டும் என்பதை நோக் காகக் கொண்டு ஒரு (Interest group) குழு உருவாகலாம். நாளடைவில் அது ஒரு இயக்கத்தை நடத்தக்கூடிய சக்தியை அடைகிறது.

கிராமப்புறங்களில், மக்கள், குழுக்களாகக் கூடிச் சமூக கலாச்சார நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்காக சமு தாய அபிவிருத்தித் திட்டத்தின் பாகமாக, சமூகக் கல்வி அமைப்பாளர்கள் இளைஞர் சங்கங்கள், பாலர் சங்கங்கள், மாதர் மன்றங்கள், மக்கள் மன மகிழ் மன்றங்கள் முதலானவைகளை நிறுவி வருகிறார்கள்.

6. கிராமத் தலைவர்களுடன் பணி செய்தல் :

வளர்ச்சிப் பணி முறைகளில் ஒவ்வொன்றையும் தனித் தனியாகப் பார்க்கும்போது, இம் முறையை மிக பிரதான முறையாகக் கையாளப்பட வேண்டிய அவசியம் புலப்படும். அரசாங்க உத்தியோகஸ்தர்கள், ஓரளவுதான் சமுதாய அபி விருத்தி நடவடிக்கைகளில் ஈடுபாடு கொள்ள முடியுமே ஒழிய, மேற்படி கிராமத் தலைவர்கள் தான் நாளடைவில் அதிகப்படியான பொறுப்புகள் ஏற்றுக்கொள்ளவேண்டும். எந்த சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் அதிலுள்ள சிந்தனையாளர்கள் (thinkers), முற்போக்குக் கொள்கையுடையவர்கள் போன்ற தலைவர்களே காரண மாக இருந்துள்ளனர்.

“அரசன் எவ்வழி, அவ்வழிகுடிகள்”.

“வான் நோக்கி வாழும் உலகெல்லாம் ; மன்னவன் கோல் நோக்கி வாழும் குடி”.

மக்கள் தம் தலைவர்கள் சொல்லைப் பெரிதும் மதித்து அவ்வழி செல்வர். ஆகவே நாடு முன்னேற, கிராமத் தலைவர்கள் முன்னேற வேண்டும்.

கிராமத் தலைவரிடம் தென்படும் பண்புகள் வரு மாறு :—

அவர் திட்டவட்டமான கொள்கைகளைத் தன் வாழ்க்கை யில் பின் பற்றுவார். மாற்றான் கூறுகின்ற வேறுபட்ட கருத்தைப் பொறுத்துக் கொள்வதோடு நின்றுவிடாமல், அதில் இருக்கும் சிறப்புகளைப் போற்றுவார். தாம் பழகும் மக்களிடம் அன்பும், அவர்கள் திறமையில் நம்பிக்கையும் உள்ளவராக இருப்பார். நியாயத்தை அனைவருக்கும் வழங்குவதால், அவரை, மக்கள் நம்பிக்கைக்குத் தகுதி யுடையவராகக் கருதுவர். “கற்றது கைமண்ணளவு கல் லாதது உலகளவு” என்பதற்கு ஏற்ப, மேலும் மேலும் புது விஷயங்களைத் தெரிந்துகொள்ள விழைவார். தான் எடுத்துக்கொண்ட எந்தப் பணியையும் விடாமுயற்சியுடன் செயலாற்றும் பண்புடையவர்.

தலைவர்கள் பிறக்கிறார்கள், (“Leaders are born”) என்று கூறுவதற்கு ஏற்ப உண்மையில் பெரும் தலைவர்க ளாகச் சிலர் ஆளப்பிறப்பதை நாம் பார்க்கிறோம். மற்றும் சிலர் தகுந்த சூழ் நிலை ஏற்படும் போது தலைவர்களாக வரக் காண்கிறோம். இப்போது இரண்டாவதாகக் கூறப்பட்ட தலை வர்களை உண்டாக்க வேண்டியது கிராமத் தொண்டரின் சாதுரியத்தைப் பொறுத்திருக்கிறது. சிலர் தன்னுடைய பெயரும் புகழும் ஓங்க வேண்டும்; செல்வாக்கும், மக்க ளிடையே தமக்குள்ள மதிப்பும் வளர வாய்ப்புகள் வர வேண்டும் என ஏங்கி இருப்பர். அன்னாரைத் தொண்டர் அறிந்து புரிந்துகொண்டு, சமுதாய அபிவிருத்தித் திட்ட நட வடிக்கைகளில் வாய்ப்பினை அளிப்பதால், விரைவில் திறம் பட செயலாற்றும் தலைவர்களாகப் பக்குவம் எய்துவர். நல்ல தலைவர்களுக்குத் தகுந்த முறையில் சிறிய பரிசுகளை விழாக்காலங்களில் கொடுக்கலாம். உதாரணமாக, ஒரு அமைச்சர், கிராமத்தின் பொதுக் கூட்டத்தில் பேச வந்திருந்தால், அவ்வமைச்சர், அக்கிராமத்தின் சிறந்த தலைவர்களுக்கு “மாதிரி விதைகள்” பொட்டலங்களைப் பரிசாக வழங்குவது விரும்பத்தக்கது. இவ்விதம் பொது விடங்களில் அமைச்சர் கையினால் அளிக்கப்படும் பரிசுகள் கிராமத் தலைவர்களை மேலும் உற்சாகத்துடன் சேவை செய்யத் தூண்டுகிறது. வட்டார கிராமத் தலைவர்கள் பயிற்சி முகாம்கள், விவசாயிகளின் உல்லாசப்பயணங்கள், இளைஞர்களின் கல்விப் பயணங்கள் ஆகியவைகளையும் கொண்டு தலைவர்களுக்குப் பயிற்சியளித்து வருகிறார்கள். பஞ்சாயத்து ஆட்சியானது விரைவில் நாட்டை யாளும் அதிகாரத்தைப் பரவல் முறையில் மக்கள் பிரதிநிதி களுக்கு அளித்து வருவதால், நம்முடைய பல சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் மக்கள் திட்டங்களாகி வரு கின்றன.

வழிகாட்டி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திரு எஸ். சீனுவாசன்

நாடகத்தில் வரும் பாத்திரங்கள்

ஆதிமூலம்	வீரம்மாள்
செல்வநாயகம்	செங்கமலம்
முத்துவேலன்	கண்ணம்மா.
பாண்டியன்	முனியன்
அழகப்பன்	சோலையப்பன்
நல்லப்பன்	மருதமுத்து
சங்கிலி	சாமிக்கண்ணு

மலையப்பன், மற்றும் பலர்

காட்சி 5.

இடம்.— மாதர் நல சங்கம்.

பாத்திரங்கள்.—செங்கமலம், கண்ணம்மா, மற்றும் சில பெண்கள்.

(மாதர் நல சங்கத்தின் உள்ளே கண்ணம்மாவும் இதர பெண்களும் ஏதோ வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்போது. . .)

செங்கமலம்.—(உள்ளே வந்தபடியே) கண்ணம்மா. . . என்ன ஏன் இங்கே வரச் சொன்னே ?

கண்ணம்மா.—(மலர்ந்த முகத்தோடு) வா. . . வா. . . செங்கமலம். . .வா . . .வா . . .

செங்கமலம்.—இது என்ன கண்ணம்மா, இங்க நீ என்ன செய்துகிட்டிருக்கே ?

கண்ணம்மா.—நம் கிராமத்திலே உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழில்லே சிறந்த கவனம் செலுத்தி உழைக்கிறார்கள். இதனாலே வெகு சீக்கரத்திலேயே நம் கிராமம் வளர்ச்சிபெற்று திகழும். அதற்கு அரசாங்கம் உதவியும் தேவை. மேலும், நம் கிராமத்தில் உள்ள மாதர்களின் சேம நலத்திற்காக நானே ஆரம்பித்திருக்கும் மாதர் நல சங்கம் இது !

செங்கமலம்.—(புரியாதவள் போல்) என்ன மாதர் நல சங்கமா ? அப்படீன்னு என்ன கண்ணம்மா.—

கண்ணம்மா.—நகரத்திலே உள்ள பணக்கார பெண்மணிகள் தங்களுடைய பொழுதைக் கழிக்க இத்தகைய சங்கங்களில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அங்கு அவர்கள் பந்தாட்டம், ரப்பர் வளையத்தை வைத்துக் கொண்டு ஆடுதல், இன்னும் பொழுதை இன்பமாக கழிக்க கூடிய நிகழ்ச்சிகளில் ஈடுபடுவார்கள். ஆனால், அதிலே அவர்களுக்கு ஒருவித பயனும் கிடையாது. மற்றவர்களுக்கும், நாட்டிற்கும் அவர்களால் நன்மையோ, உதவியோ கிடையாது. ஆனால், கிராமத்தில் ஏற்படுத்தப்படும் மாதர் நல சங்கங்களினால், கிராமத்திற்கும், கிராம மக்களுக்கும், மற்ற கிராமங்களுக்கும் பேருதவி கிடைக்கும்.

செங்கமலம்.—எப்படி ?. . .

கண்ணம்மா.—அறியாமையை அகற்றிவிடவும், அறிவுள்ளவர்களாக கிராம மக்கள் ஆக, குடும்பப் பெண்மணிகள் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களைப் போதிப்பது. குடும்பத்தில் கணவரோடு வருவாயை அதிகரிக்கச் செய்ய என்னென்ன வழி வகைகள் உண்டு. செலவுகளை எப்படிச் சரிக்கட்ட வேண்டும், பொருளாதார நிலையை எப்படிச் சமாளிக்க வேண்டும் குடும்பம் நடத்தத் திட்டம் தீட்டவும், இப்படி வாழ்க்கைக்குத் தேவையான பலவற்றை கிராம மாதர்களுக்கு சொல்லிக் கொடுப்பது இதைப் போன்றவை மாதர் நல சங்கங்களின் முக்கிய வேலையாகும். உன்னையும் இதிலே அங்கத்தினராக சேர்த்துக் கொள்ளத்தான் வரச் சொன்னேன்.

செங்கமலம்.—இதிலே அங்கத்தினராக சேர்ந்தா என்ன பயன் ? என்ன லாபம் ?

கண்ணம்மா :—என்ன செங்கமலம் அப்படிக் கேக்கறே? பெண்களாலும் நாட்டுக்கும், கிராமத்திற்கும், திட்டங்களுக்கும், வளர்ச்சிக்கும் உதவி செய்ய முடியும் என்பதை நிலைநிறுத்த வேண்டாமா ? ஊனமடைந்த குழந்தைகளின் வாழ்வை வளப்படுத்த, உயர்த்த, உயர்வுபடுத்தவும், அன்போடும், பண்போடும் பாதுகாத்து வளர்ப்பது. வயதான தாய்மார்களுக்கும், கர்ப்பிணிகளுக்கும் உதவும் கடமைகளில் ஈடுபடுவது. அம்பர் சர்க்காவை நூற்பதற்கு கற்றுக் கொள்வது. தையல் வேலைகளை கற்றுக் கொள்வது. இன்னும் பல பல சேவைகளில் பெரும் பங்கு கொண்டு உழைப்பது. பல விஷயங்களை அறிந்து கொள்வது. மற்றவர்களுக்கு வழிகாட்டியாக நாம் வாழ்வது.

செங்கமலம் : அப்படியா........?

கண்ணம்மா : மேலும் ஏழைப் பிள்ளைகளுக்கு பகலுணவு அளிக்க உதவிபுரிவது. படிக்க ஆர்வம் உள்ள பிள்ளைகளுக்கு படிப்பு சொல்லிக் கொடுப்பது. விளையாட்டுகள் சொல்லிக் கொடுப்பதால் ஆரோக்கியமுள்ளவர்களாகவும், சுறுசுறுப்புள்ளவர்களாக அவர்கள் திகழ்வார்கள். வருங்கால சமுதாயத்தை வாழ்விக்கும் வீரர்களாக விளங்குவார்கள்.

செங்கமலம் : போதும்......போதும்......இதெல்லாம் நீ எப்படி தெரிஞ்சுகிட்டே கண்ணம்மா.

கண்ணம்மா : எல்லாம் அரசாங்கம் வெளியிடற புத்தகத்திலே தெளிவா போட்டிருக்காங்களே. மேலும் "**சௌபாக்கியம்**" என்ற பத்திரிகையிலேகூட மாதர் நல சங்கங்களின் செயல்களைப்பற்றி வெளியிடுகிறார்களே.

செங்கமலம் : கண்ணம்மா உனக்கும் உங்க அப்பாவுக்கும் எவ்வளவு வித்தியாசம் தெரியுது.

கண்ணம்மா : செங்கமலம் அதப்பத்தியெல்லாம் பேச நேரம் கிடையாது. அவர் கூட ஒரு நாள் நம்மோடு உழைக்க வந்திடுவாரு பாரு....

(செங்கமலம் மாதர் நல சங்கத்தில் அங்கத்தினராகி விடுகிறாள்.)

காட்சி 6.

இடம்:—ஆதிமூலத்தின் வீடு.

பாத்திரங்கள்:—ஆதிமூலம், செங்கமலம், முத்துவேலன், அழகப்பன், பாண்டியன், வீரம்மாள்.

பாண்டியன் விவசாயத்தில் நல்ல பலன் காணத் தந்தையிடம் ஒரு உபாயம் சொல்லுதல். ஆனல்..)

பாண்டியன் : அப்பா. நான் சொல்லறதை கேளுங்க....

முத்துவேலன் : நீ என்னத்த சொல்லப்போறே ரசாயன உரம் போட்டு பயிர் செய்யச் சொல்வே, "கம்போஸ்ட்" உரத்தாலே வேளாண்மை நன்கு நடைபெறும் என்பே......

பாண்டியன் : (ஆச்சரியம் மேலிட) இதுயெல்லாம் எப்படி யண்ணு உங்களுக்குத் தெரியும்?

முத்துவேலன் : எல்லாந்தான் "**கிராம நலம்**" பத்திரிக்கையிலே தெட்டத் தெளிவாக போடராங்களே தம்பி.

பாண்டியன் : அது மட்டுமில்லே அண்ணு, மரக்கலப்பைக்கு பதில் இரும்பு கலப்பையை உபயோகித்தால் பயிர் நல்லா வளர்வதுடன் நல்ல பலனளிக்கும் தெரியுமா:

அழகப்பன் : ஆமாம் அது உண்மைதான். "அகல உழுவதினும் ஆழ உழு" என்று சொல்லுகிறார்களே! அதற்கு இரும்பு கலப்பையைக் கொண்டு உழுத நிலத்திலே கம்போஸ்ட் உரம் இட்டு நல்ல விதைகளை விதைத்தால் பயிர் செழிப்பதுடன், அதனுல் நம் வருமானமும் கொழித்திடும், நம் வாழ்வும் செழித்திடும்.

ஆதிமூலம் : (சாவகாசமாக) அழகப்பா நீங்க சொல்றது எனக்கு நல்ல புரியுது. ஆனு பணத்தை நெனச்சா தான் பயமாயிருக்கு. நம்முடைய நிலைக்கு அது வெல்லாம் வாங்க முடியுமா? இந்த நெனைப்பெல்லாம் "பண்டாரம் கண்ட பகல் கனவு" போலத் தான். உம்—கூழுக்கு ஆசை யிருந்தா மீசை மேலே ஆசையிருக்கக்கூடாது.

முத்துவேலன் : அப்பா, நான் குடிசைத் தொழில் செய்து திரட்டியிருக்கும் பணத்துடன், அழகப்பன் கையில் இருந்து கொஞ்சம் வாங்கி, அந்த பணத்தைக் கொண்டு வேண்டியதை வாங்கி இந்த வருச விளைச்சலை துவங்குவோம். பின் மகசூலிலே கிடைக்கிற பணத்திலே அழகப்பன் தொகையைக் கொடுத்து விடலாம்.

அழகப்பன் : முத்து என்கிட்டே நீ எதிர்பார்க்கிறுமாதிரி அவ்வளவு பணமில்லே. என்ன செய்யறது கோழிக்கு தீவனம் வாங்கினேன், தேனீ வளர்ப்புக்கு வேண்டிய சாதனங்களை வாங்கினேன், இன்னும் சில சில்லறை செலவுக்கு செலவழிச்சுட்டேன்.

செங்கமலம் : அப்பா லேவாதேவி செல்வநாயகத்தினிடம் கொஞ்ச பணம் கடன் வாங்கி காரியத்தை தொடங்குவோம்......என்னப்பா சொல்றீங்க?

பாண்டியன் : வேண்டாம்பா..அவர்கிட்டே கடன் வாங்கினு பின் நம் வாழ்வு என்றுமே தழைக்காது. பொதுவாகவே லேவாதேவியிடம் கடன் வாங்கினவர்கள் வாழ்ந்ததில்லையப்பா......நினைப்பது போல் நடப்பதுமில்லை, வேறு விதமாக ஆகிவிடும்.

முத்துவேலன் : (உணர்ச்சியோடு) ஆனு இரும்பு கலப்பை, ரசாயன எரு, பொறுக்கு விதைகள் முதலியவை மட்டும் வாங்கி நல்ல விளைச்சலை உண்டாக்கனும்.... அப்பா கோடி வீட்டு நல்லாச்சாமி கடன் வாங்கி எவ்வளவு காரியங்களை நடத்தி இப்போ கடனை வட்டியோடு திருப்பி கொடுத்துட்டு சுகமா வாழலே.

ஆதிமூலம் : சரி சரி உங்க போங்க....நான் எல்லாவற்றையும் யோசுச்சு செய்கிறேன்.

(எல்லோரும் போதல்).

காட்சி 7.

இடம்;—செல்வநாயகத்தின் வீடு.

பாத்திரங்கள்:—செல்வநாயகம், முனியன், ஆதிமூலம், கண்ணம்மா.

ஆதிமூலம் : என்னப்பா முனியா அய்யா இருக்காரா?

முனியன் : ஓ இருக்காருங்க......உள்ளே வரவு-செலவு திட்டத்திலே ஆழ்ந்திருக்காரு.

ஆதிமூலம் : நான் வந்திருக்கேன்னு சொல்லேன்.

(முனியன் உள்ளே போய்விட்டு வெளியே வந்து)....

முனியன் : ஐயா உங்களை உள்ளே வரச்சொன்னுருங்க ......போங்க......

(ஆதிமூலம் உள்ளே போதல், செல்வநாயகம் ஆதிமூலத்தைக்கண்டு)

செல்வநாயகம் : வாய்யா ஆதிமூலம் ஏதேது இந்தப் பக்கம்......

ஆதிமூலம் : ஒண்ணுமில்லே உங்களப்பாத்துட்டு போகலா முன்னுதான் வந்தேன்.

செல்வநாயகம் : ஓ அப்படியா....சரி விவசாய மெல்லாம் எப்படி நடக்குது......உன் புள்ளேங்க ளெல்லாம் சௌக்கியமா ?

ஆதிமூலம் : ஏதோ உங்க புண்ணியத்திலே சௌக்கியமா இருக்காங்க......

செல்வநாயகம் : ஆமாம் பொண்ணு கண்ணம்மாவுக்கு காலாகாலத்திலே ஒரு மூணு முடிச்ச போட்டுறது தானே......மாப்பிள்ளேதான் தயாரா இருக் கானேய்யா......அப்புறம் என்ன......

ஆதிமூலம் : அதெல்லாம் சரிதாங்க ஆனு......பணம் வேணுங்களா கல்லியாணத்த நடத்த......

செல்வநாயகம் : ஆமா......அது சரி உன் மகன் பாண் டியன் என்னமோ அரசாங்கத்துக்கு எழுதி போட் டிருக்கிறதா கேள்விப்பட்டேன்னே..........மானிய விஷயமா......அது என்னவாச்சு ! காயா பழமா !

ஆதிமூலம் : இன்னும் ஒண்ணும் பதில் வரலீங்க...... மேலும் இந்த வருச விளேச்சலே ரசாயன எரு இட்டு, பொறுக்கு விதைகளே விதைச்சு நல்ல வரு மானத்தை எதிர்பார்க்கணுன்னு பிள்ளேங்க சொல் ருங்க......அதுக்காக......

செல்வநாயகம் : எவ்வளவு தேவையா யிருக்கும்...... என்னுன்னு வாங்க போறே......கலியாணத்தை எப்ப நடத்தபோறே......ஒரேடியா எல்லாத்தையும் முடிச்சுடு......என்னு ?

ஆதிமூலம் : இரும்பு கலப்பை வாங்கணும், நல்ல எரு வாங்கணும், பொறுக்கு விதைகள் வாங்கணும்...... அதுக்காக கொஞ்சப் பணம் தேவையிருக்கும். எதுக் கும் முன்னதாகவே சொல்லி வைக்கலாமேன்னு வந்தேன்....வேண்டியபோது வரேன் நான். கடன் கொடுக்கணும்........

செல்வநாயகம் : அதுக்கென்ன நீ எப்ப தேவையின்னு கேக்கிறியோ அப்போ கொடுக்க தயார்......

(இது சமயத்தில் கண்ணம்மா வீட்டிற்குள் வருதல். விஷயத்தை மறைந்து இருந்து கேட்பது)

ஆதிமூலம் : சரி வரேன்னுங்க......சொன்னதை மறந் துடாதீங்க......

செல்வநாயகம் : சீக்கிரமா நான் குறிச்சிட்டு வாய்யா ஆதி.. ......போய் வா......

(ஆதிமூலம் போய்விடுதல். கண்ணம்மா ஒண்ணு புரி யாமல் திகைப்பது).

காட்சி 8.

இடம்:—ஆற்றங்கரை ஓரம்.

பாத்திரங்கள்:—செங்கமலம், கண்ணம்மா.

(ஆற்றங்கரையின் ஓரத்தில் இருவரும் சந்தித்து பேசுதல்).

கண்ணம்மா : செங்கமலம் உங்கப்பா இரெண்டு நாளேக்கு முன்னே எங்கப்பா கிட்ட வந்து பணம் கடனு தேவைப்படும் என்று சொல்லிவிட்டு போனூர்.

செங்கமலம் : உம்......அதுக்கில்லே கண்ணம்மா. பாண்டியன் அண்ணே ஏதோ இரும்பு கலப்பையை உபயோகித்து நல்ல எருவும், விதையும் கொண்டு பயிர் செய்தால் மண்ணெல்லாம் பொன்னுகுமுன்னு சொல்லிச்சு......

கண்ணம்மா : ஓ......அப்படியா......அவர் சொன்னது நல்ல யோசனேதான் செங்கமலம்......ஆனு அதுக் காக கடன் வாங்கநெனேக்கிறது நல்லாயில்லே......

செங்கமலம் : என்ன செய்யறது கண்ணம்மா எங்க நிலமை அப்படி ஆச்சே......

கண்ணம்மா.—உம், வாங்கின பணத்தை திருப்பிக் கொடுக்காட்டி உங்க நிலம் தனக்குத்தான் சொந்தமுன்னு எங்கப்பா எழுதி வாங்கிக்கொள்ளு வாரே செங்கமலம்..

செங்கமலம்.—ஏதோ அதிர்ஷ்டமும், ஆண்டவன் அரு ளுந்தான் வேண்டும்..எங்களப்போன்ற ஏழைக ளுக்கு..

கண்ணம்மா.—ஆமாம் உங்க சின்ன அண்ணு ஏதோ அரசாங்கத்துக்கு கடன் கோரி எழுதி போட்டதய சொன்னேயே அது என்னவாச்சு ?

செங்கமலம்.—இன்னும் ஒருவித பதிலும் வரலே கண் ணம்மா. கொஞ்ச நாளேக்கு முன்னே அதிகாரிகள் எல்லாம் வந்து பாத்துட்டு போனுங்க. அதனுலேதான் அப்பா கடன் வாங்க துணிஞ்சிருக்காரு. அப்படி கடன் வந்துட்டா கடனே அடைச்சுடலாம் பாரு..

கண்ணம்மா.—கட்டாயமா கூடிய சீக்கிரத்திலே வரும், பார்த்துக்கிட்டே இரு இன்னும் இரண்டு நாளேக்குள்ளே கடன் தொகை உங்க வீடு தேடி வரப்போவுது..

செங்கமலம்.—அதெப்படி அவ்வளவு நிச்சயமா சொல்றே.

(கண்ணம்மா பதில் சொல்லாமல் ஏதோ சிந்தனே யில் சிறிது நேரம் இருந்துவிட்டு பின்....)

கண்ணம்மா.—செங்கமலம் நான் ஒண்ணு சொல்றேன் கேட்கிறையா..எதுக்கு தெரியுமா ? கிராம மக்கள் எல்லோரும் நல் வாழ்வு பெற..

செங்கமலம்.—என்னது கண்ணம்மா..சொல்லேன்..

கண்ணம்மா.—கிட்டே வா காதோட சொல்றேன்..என்னு நான் சொல்லப் போறது பரம ரகசியம்..

(செங்கமலத்தின் காதில் ஏதோ சொல்லுகிறுள் கண்ணம்மா. பின்....)

என்னு ? நான் சொன்னது புரிஞ்சுதா ? இதை உங்க சின்ன அண்ணுகிடம் சொல்லு அவர் தக்க படி செய்வார்..

செங்கமலம்.—சரி அப்படியே ஆகட்டும் கண்ணம்மா.. அப்போ நான் வரட்டுமா ?

கண்ணம்மா.—போயிட்டு வா..நான் சொன்னதை மறந்திடாமே செய்....பலன் கிட்டும்..

(செங்கமலமும், கண்ணம்மாவும் ஆனந்தத்துடன் அங்கிருந்து பிரிந்து செல்லுதல்)

காட்சி 9.

இடம் : செல்வநாயகத்தின் வீடு. பாத்திரங்கள் : செல்வநாயகம், முனியன்.

(செல்வநாயகம் கணக்குப் புத்தகத்தை வைத்துக் கொண்டு பார்த்துக்கொண்டிருக்கிறுர். அப்போது ....)

முனியன்.—(ஓடிவந்து) எசமான்......எசமான்......

செல்வநாயகம்.—என்னடா முனியா......என்ன சமாசாரம் ?

முனியன்.—சங்கிதி தெரியுங்களா........ ?

செல்வநாயகம்.—சொன்னுதானே தெரியும்....சொல்லு ....

முனியன்.—கிணத்துத் தவளேயாக இருக்கக் கூடாது எசமான்.

செல்வநாயகம்.—அப்போ மீனு யிருப்போம்..இப்போது முதல்லே விஷயத்தை "வாங்கின கடனே உடனே தீத்தாப்போல" சொல்லி முடி....

முனியன்.—பத்து நாளேக்கு முன்னே ஆதிமூலம் உங்க கிட்டே வந்து பணம் கடனு தேவைப்படுமுன்னு சொல்லிவிட்டு போனுரோன்னே....

செல்வநாயகம்.—ஆமாம், அதுக்கு இப்ப என்னு வந்தது......?

முனியன்.—உங்களுக்கு நஷ்டம் வந்துது. அவரு மகன் பாண்டியன் அரசாங்கத்துக்கு கடன் உதவி வேண்டி எழுதி போட்டானே அவங்களுக்கு அரசாங்கத்தார் கடன் கொடுத்துட்டாங்களாம். அவங்க கூட்டுறவு சங்கத்திலே போய் வேண்டிய சாமான்களே வாங்கிட்டு வந்துட்டாங்களாம்..

செல்வநாயகம்.—ஆ ! அப்படியா....(மயக்கம் வருவது போல் நிலேமை ஏற்படுகிறது.)

முனியன்.—எசமான்....எச....மான்..

செல்வநாயகம்.—டேய் தண்ணியெடுத்தாடா....அட பாவி ஏமாத்திப்புட்டானே, ஏண்டா ஒரல்லே குத்தின ஒலக்கை மாதிரி நிக்கறே..போடா..ஓடுடா..தண்ணியெடுத்துக்கிட்டு வாடா..

(முனியன் உள்ளே ஓடிப்போய் தண்ணியெடுத்து வருதல். .அதை வாங்கிக் குடித்துவிட்டு பின்....)

ஏண்டா முனியா உண்மையாகவா....? அன்னிக்கு என்னடான்னு "ஏழவு வூட்லே கெழவி அழுவுற" மாதிரி ஒப்பாரி வெச்சான்....இன்னிக் கென்னுன் பானு....நீ சொல்றத நம்பவே முடியலேயே?

முனியன்.—ஆமாம் எசமான்....அந்த மனுசன் ஜாம் ஜாம்முன்னு உட்காந்துக்கிட்டிருக்கான். இந்தமாசம் போனவுடனே நெலத்திலே வேலேயை ஆரம்பிச்சுடுவான்....அப்புறம்......நீங்க வேண்டுமானுலும் போய் பாத்துட்டு வாங்க....

செல்வநாயகம்.—சரி தான் போடா...... அயோக்யப் பய......இருக்கட்டும் பாத்துக்கிறேன்....

(ஒண்ணுமே புரியாமல் குட்டி போட்ட பூனே போல் அங்கு மிங்கு உலவுதல்)

காட்சி 10.

இடம் : ஆதிமூலத்தின் வீடு. பாத்திரங்கள் : ஆதிமூலம் முத்துவேல், பாண்டியன் செங்கமலம்.

(செல்வநாயகம் ஆத்திரத்தோடு வருதல். அது கண்டு......)

ஆதிமூலம்.—வாங்க வாங்க வட்டிக்கார அய்யா....

செல்வநாயகம்.—சரிதாய்யா மதிப்பெல்லாம் போதும்.. ......உங்கன நம்பினு மண் குதிரையை நம்பினு மாதிரி தான் !

ஆதிமூலம்.—இப்போ என்ன நடந்துட்டுது......என் வீணு ஆத்திரப்படறீங்க....

செல்வநாயகம்.—நீ செஞ்ச வேலேக்கு ஆத்திரப்படாமே ஆனந்தப்படுவாங்கய்யா ?

வீரம்மாள்.—என்ன பண்றதுங்க தேவையாயிருக்குன்னு முதல்லே நெனச்சோம்...... ஆனுல் அதுக்குள்ளே கடன் உதவிப் பணமே வந்துட்டுது......இதுக்கு போய் கோவிச்சுக்கிட்டா......உங்களுக்கு எத்தனேயோ இடத்திலே......

செல்வநாயகம்.—அது சரிதான். உங்களுக்காக நம்பி வந்த இரண்டு பேரையும் இல்லேன்னு சொல்லி அனுப்ப வேண்டியதாக ஆயிடுத்து...... என் பொழைப்பே கெட்டுப் போச்சு....

பாண்டியன்.—சரிதாய்யா....சும்மாபேச ாதே....பெரிய இடத்த பாக்கறவரு முதல்லேயே கொடுக்கமாட்டேன்னு கண்டிப்பா சொல்றதானேய்யா........ "ஆடு மழையிலே நனேயுதேன்னு ஒநாய் ஒலமிட்டு அழுதுச்சாம்" அது போல எப்போடா ஏழைங்க நம்பள நம்பி மாட்டுவாங்கன்னு கழுகாட்டம் காத்துகிட்டு இருக்கீங்க......அவங்க குடியை கெடுக்க ஓட்டாண்டியாக ஆக்கி நடுத்தெருவிலே குழந்தை குட்டிகளோடு அலேயச் செய்ய ! ஆனு உங்களுக்கு போட்டியா அரசாங்கமும், திட்டங்களும் உதவ ஆரம்பிச்சவுடனே உங்க வயறு எரியுது........

செல்வநாயகம்.—எய்........உன் நாடகப் பேச்சு நடிப்பெல்லாம் கூத்து மேடையிலேயே இருக்கட்டும் இங்கே வேண்டாம் தெரியுமா ?

ஆதிமூலம்.—பாண்டியா நீ சும்மா இரு......நாங்க பேசறபோது நீ ஒன்னும் குறுக்கிடாதே......

முத்துவேலன்.—அய்யா அப்போ ஏதோ அவசரத்துக்காக் ஒரு பேச்சு சொல்லிவைக்க வேண்டியதா இருந்துச்சு. அதுக்காக இப்படி அபாண்டமா எங்களாலே உங்க பொழைப்பே கெட்டுப்போச்சுன்னு சொல்றது நல்லா யில்லே. நீங்க பெரியவங்க உங்களுக்கு நான் சொல்ல தேவையில்லே....ஏதோ நடந்து போச்சு.. சமாதானமா போறது தான் எல்லோருக்கும் நல்லது....

பாண்டியன்.—அண்ணு வேங்கை குணம் படைத்தவர் களிடத்தில் போய் வேதாந்தம் பேசறையே...... வியர்வை வடிய பாடுபட்டு பழக்கமில்லாதவர்கள் ! அவர்களுக்கு ஊர் நலத்தைப் பற்றியோ, பொதுப் பணிகளைப் பற்றியோ என்ன தெரியப்போகிறது. உம், பஞ்சாயத்து நிர்வாகம் வந்தவுடன் தான் தெரியப் போகிறது, இவர்கள் கதி என்ன ஆகிறது என்பது......

செல்வநாயகம்.—இவரு பெரிய கிராம சீர்திருத்த வாதி ....நீ நேத்திக்கி பொறந்த பய....எங்கிட்டே உன் ஒரடி வால நீட்டறே, சும்மா ஆட்டறே.... தம்பி அதெல்லாம் இவருகிட்டே நடக்காது....தெரியுமா?

ஆதிமூலம்.—அவன் பேச்சையெல்லாம் ஒரு பொருட்டா நெனைச்சு காதிலே போட்டுக்காதீங்க அய்யா...... நான் சொல்றத கேளுங்க ஏதோ தவறு நடந்து போச்சு.... தயவு பண்ணி, பெரிய மனசு வெச்சு மன்னிச்சுடுங்க.

(செல்வநாயகம் விரைப்பாக போதல். செங்கமலம் இவைகளை வீட்டிற்குள் இருந்து பார்த்துக்கொண்டிருப்பது)

காட்சி 11.

இடம் : தனிமையான இடம்.

பாத்திரங்கள் : கண்ணம்மா, செங்கமலம்.

கண்ணம்மா.—என்ன செங்கமலம் வருத்தமா உட்கார்ந் திருக்கே. என்ன விஷயம் ?

செங்கமலம்.—இல்லே கண்ணம்மா உங்கப்பாரு வந்து பணத்தை கடனு வாங்கறேன்னு சொல்லி எங்கப் பாரு ஏமாத்திட்டதா கூச்சல் போட்டாரு........ பாண்டியன் அண்ணனும் பட்டணத்துக்கு போயி டுச்சு !

கண்ணம்மா.—எதுக்கு ?

செங்கமலம்.—ஏதோ பரிசு போட்டி நாடகம் எழுதி அனுப்பியிருந்தாராம்......பாண்டியன் அண்ணே நாடகத்தை அரசாங்கத்தார் சிறந்த நாடகமா தேர்ந்தெடுத்திருக்காங்களாம். அது சினிமா படம் புடிச்சு ஒவ்வொரு கிராமத்துலேயே காட்டப்போருங்க ளாம். அதுக்கா அண்ணனை வரச்சொல்லி கடுதாசி வந்துச்சு.......

கண்ணம்மா.—அப்படியா......? நீ இத என் கிட்டே முன்னேயே சொல்லவேயில்லேயே? அவர் பாடுபட்ட தற்கு பலன் கிடைச்சுடுச்சு. அதுசரி நான் அன்னிக்கு காதோட சொன்ன ரகசியத்தை சொன்னயா, அது விஷயம் என்ன ஆச்சு?

செங்கமலம் .—அத பாண்டியன் அண்ணன்கிட்டே நான் சொன்னேன். அதக் கேட்டுட்டு எனக்கு இது முன்ன மேயே தெரியுமே. எல்லாம் எழுதி போட்டிருக் கேன் என்று சொன்னுரு........

கண்ணம்மா.—அப்புறம்..........

செங்கமலம்.—இத யாரு உனக்கு சொன்னுங்கன்னு கேட்டாரு......

கண்ணம்மா.—(துடிதுடிப்போடு) அதுக்கு நீயென்னு சொன்னே செங்கமலம்......

செங்கமலம்.—கண்ணம்மா சொல்லிச்சுன்னு சொன் னேன். ஓ....அப்படியான்னு சொன்னுரு. அண்ண னும் அரசாங்கத்துக்கு யெழுதி போட்டிருக்காராம்....

கண்ண்ம்மா.—ஏதாவது பதில் வந்துதா?....அல்லது..

செங்கமலம்.—அண்ணன் ஊர்லே இருக்கிற போதே கலெக்டர், அபிவிருத்தி அதிகாரி, கிராம அபிவிருத்தி அதிகாரி எல்லாம் வந்து பாத்துட்டு போனுங்க.... அதுக்கப்புறம் ஒன்னேயும் காணோம்......

கண்ணம்மா.—ஓ...... அப்படியா......சீக்கிரம் பதில் வரும்......கவலேப்படாதே நம்ம கிராமம் கூடிய சீக்கிரத்திலே "பஞ்சாயத்து பட்டணமாக" மாறப் போகிறது பார். அப்புறம் எல்லோரும் சந்தோஷ மாயிருப்பாங்க.... சௌக்யமாக வசிப்பாங்க ......சண்டை சச்சரவு இருக்காது......சாதி பேத மெல்லாம் மறைஞ்சு போகும்......நம்ம வளத் தோட நம் கிராமம் செழித்து சோலே போல ஆகும்.

செங்கமலம்.—அப்போ நான் வரட்டுமா கண்ணம்மா....

(செங்கமலம் அங்கிருந்து போதல். கண்ணம்மா ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவளாய் அமர்ந்திருந்து விட்டு பின் போதல்).

காட்சி 12

இடம் : செல்வநாயகத்தின் வீடு

பாத்திரங்கள் : செல்வநாயகம், முனியன், கண்ணம்மா.

(செல்வநாயகம் மன வேதனையுடனும், மனக் குமுற லுடனும் உலாவிக் கொண்டிருக்கிருர்).

செல்வநாயகம்.—ம்.......ஓல குடிசையிலே வாழறவன் என்ன ஏமாத்திப்புட்டான்...... ..

முனியன்.—எசமான் இப்ப அதுங்களுக்கெல்லாம் வாழ்வு வந்துடுச்சுங்க. அதுங்கள நம்பி பணம் கொடுக்கறது கூட ஆபத்து. கொடுத்தப் பணத்தை திருப்பிக் கேட்டா கூட கொடுக்க மனசே வராதே அதுங்களுக்கு ....

செல்வநாயகம்.—அந்த படுபாவி கடன் வாங்க வரு வான்னு தான் இருந்தேன். இப்படி கல்லேத் தூக்கி தொப்புன்னு போடுவான் என்று நெனச் சேன். சே....சே....சே....

முனியன்.—இப்போத்தான் கவர்மெண்டு அதுங்களுக்கு உதவ ஆரம்பிச்சுட்டாங்களே எசமான்......உதவ ஆரம்பிச்சுட்டாங்களே....

செல்வநாயகம்.—என்ன கவர்மேண்டு? என்னப்போல இருக்கிறவங்களுடைய பொழைப்பை கெடுக்கிறதா

முனியன்.—வேலே செய்யாமே வூட்லே குந்திக்கிட்டு வேளா வேளைக்கு முழுங்கறவன் சோம்பேறி....

செல்வநாயகம்.—டேய் நீயும் அந்தக் கட்சியிலே சேந்..துட்டையா......

முனியன்.—நல்ல உழைச்சு, நாட்டுக்கும், மக்களுக்கும் தனக்காகவும் பாடுபடுகிறவன் தான் உண்மை உழைப்பாளி. அவங்க வாழ்வு உயர்த்தத் தான் அரசாங்கம் தீர்மானிச்சு திட்டம் போட்டிருக்காங்க எசமான்........

செல்வநாயகம்.—மயிலே மயிலேன்னு இறகுபோடுமா.'...

முனியன்.—அது எப்படிங்க போடும்......

செல்வநாயகம்.—அது போல திட்டம் திட்டமுன்னு சொன்னு பலன் வந்திடுமா? பட்டினி, பசி ஒழிஞ்சிடுமா?

முனியன்.—அதுக்காகத் தானே வளர்ச்சி அடைஞ்சு கிராமங்களை அரசாங்கத்தின் கீழ் பணியாற்றும் பஞ்சாயத்து நிர்வாகத்தின் பொறுப்பிலே விட்டு, அங்கு வாழும் மக்களுடைய தொழில் வளர்ச்சிக்காகவும் விவசாய வளர்ச்சிக்காகவும், இதர வேலைகளுக்காகவும் பாடுபட்டு கிட்டு வராங்களே........

செல்வநாயகம்.—ம் தானு கனியுமுன்னு நெனச்சேன்.. ....இல்லெ அதனுலே தடி கொண்டு அடிச்சு நம்ப பக்கம் கனிய வைக்கணும்........

முனியன்.—சரிதான் செஞ்சு பாருங்க......எது கனியுதோ?

செல்வநாயகம்.—முனியா கிட்டே வா......இன்னிக்கி ராத்திரி அந்த ஆதிமூலத்தின் வூட்லே புகுந்து நெல் மூட்டைகளேயும், கையிலே கிடைச்சதையெல்லாம் சுருட்டிக்கிட்டு வந்துடு......என்னு......

முனியன்.—எசமான்......வேண்டாங்க எசமான்.... .

செல்வநாயகம்.—டேய்......என்னு......நான் இருக்கேண்டா, என் பணமிருக்கு பயப்படாதே. நானும் துணேக்கு வர்ரேன்......

முனியன்.—எசமான்...... பயமாயிருக்குதுங்களே...... இந்த மாதிரி செஞ்சு பழக்கமில்லீங்களே....

செல்வநாயகம்.—அதுக்குத் தாண்டா "களவும் கற்று மற" என்று பெரியவங்க சொல்லியிருக்காங்க...... பயப்படாதே. செல்வநாயகத்தை நம்பினேர் சஞ்சலப் படார்......சல்தியா காரியத்தை சட்டு புட்டுன்னு முடி....இன்னிக்கி ராத்திரியே...... இந்தாப் பணம் (பணம் கொடுப்பது)

முனியன்.—எசமான் ......(பயந்தபடியே வெளியே போதல்).

(இவைகளை கண்ணம்மா மறைவில் நின்று ஒட்டு கேட்டுக் கொண்டிருப்பது. அவள் தந்தையின் செயலைக் கண்டு அதிர்ச்சி அடைதல்).

காட்சி 13

இடம் : சாலே. பாத்திரங்கள் : அழகப்பன், சாமிக்கண்ணு, சோலேயப்பன், மருத முத்து.

சோலேயப்பன்.—என்னப்பா மருதமுத்து. செல்வநாயகம் செஞ்ச வேலேயை பாத்தையா?

மருதமுத்து.—அயோக்யப் பய அவன்......நம்ப ஆதி மூலம் அவன் கிட்டே கடனுக்கு பணம் வாங்கலே லேன்னு அவனுக்கு வயித்தெரிச்சல் அதனுலே....

சாமிக்கண்ணு.—இப்படியா மோசமா நடக்கனும்......

அழகப்பன்.—(வந்தபடியே) என்ன பேசிக்கிட்டிருக்கீங்க..

மருதமுத்து—விஷயம் செரியுங்களா........ செல்வ நாயகம் இரண்டு மூனு ஆளுங்களோடு ராத்திரி ஆதி மூலத்தின் வூட்லே வாங்கி வெச்சியிருக்கிற நெல் மூட்டைகளை களவாடப் பாத்தான்......ஆனு.... நாங்களெல்லாம் ராத்திரி முழிச்சுக்கிட்டிருந்தோம் ......அதனுலே அந்த ஆளு தலையைக் கூட காட்டலே...... – –

அழகப்பன்.—அப்படியா சங்கதி. அவரு என்னிக்குத் தான் திருந்தப்போருரோ......

சோலேயப்பன்.—விட்டுத் தள்ளுங்க. அது சரிங்க "பஞ்சாயத்து நிர்வாகம்" வந்திருக்குதே அதனுலே என்ன நன்மை இப்போ? அத சொல்லுங்க......

அழகப்பன்.—முன்பெல்லாம் கிராமப் பஞ்சாயத்திலே சண்டை சச்சரவுகளை தீர்ப்பது மட்டுமே பிரதானமாக இருந்தது. ஆனல், இப்பொழுது தொழில் வளர்ச்சி பெற்று கிராமங்களே மேலும் வளர்ச்சி அடைய செய்யவேண்டிய பொறுப்பு கிராமப் பஞ்சாயத்து நிர்வாகத்தை சார்ந்திருக்கிறது. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் எடுத்துக் கொண்டு செய்கின்ற வேலைகளுக்காக மூன்ருவது திட்டக் காலத்துக்கு மாநிலம் பூராவுக்குமாக உப தலைப்பின் கீழ் 750 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த உப தலைப்பின் கீழ் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 2 லட்சம் ரூபாய் மானியத் தொகை என்றும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சாமிக்கண்ணு.—இந்த இரண்டு லட்ச ரூபாயை எப்படி எப்படி பயன்படுத்துவாங்க......

அழகப்பன்.—விறகு, தீவனம், எரு, பசுந்தழை உரம் ஆகியவைகளே உற்பத்தி செய்ய மரம், செடி, கொடி நடுதல், கலவை எரு தயாரித்தல், பூச்சி மருந்துகளே குறைந்த விலேயில் விநியோ ம் செ ய்தல் இவை களைப் போன்ற காரியங்களுக்காக ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மருதமுத்து.—மிச்சமிருக்கிற ஒரு லட்சத்தை என்ன செய்வாங்க....?

அழகப்பன்.—கிராம சஹாயப் பணிகளேப் பராமரித்தல், பொறுக்கு விதைகளின் பேரில் அவருக்கு மானியம்

அளித்தல், பயிர் பாதுகாப்பு சாதனங்களை கூட்டுறவுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் அளித்தல், இதற்காக ஒரு லட்சம் ரூபாயை மானியமாக பஞ்சாயத்து யூனியன்களுக்கு கிடைக்கும்.

சோலையப்பன்.—இன்னும் என்ன என்ன நன்மைகள் கிடைக்கும்?

அழகப்பன்.—கிராம சாலைகளை அமைத்தல், வடிகால்கள் கட்டுவது, வடிகால் தண்ணீரை அப்புறப்படுத்துவது, சாலைகளை மராமத்து செய்து குப்பை கூளங்களை அகற்றி சுத்தம் செய்தல், பொது கக்கூஸ்களை அமைத்தல், சுடுகாடுகளை பராமரிப்பது, கிணறுகளை வெட்டி பராமரிப்பது, பொது மார்க்கெட்டுகளை எற்படுத்துதல், முதலிய பல காரியங்களில் ஈடுபடும் கிராம விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் கடன் தொகை அளிக்க எற்பாடும் செய்யும்.

சாமிக்கண்ணு.—இதனாலே சொந்தத்திலேயே இரும்பு கலப்பை, விதைகள், மாடுகள் வைத்துக்கொள்ள சௌகர்யமாக இருக்கும் இல்லையா ?

அழகப்பன்.—ஆமாம். கிராமப் பஞ்சாயத்து நிர்வாகம் கிராம மறுமலர்ச்சிக்கு உதவும் நல்லதொரு திட்டம். அதைத் தான் நம் கிராமத்திலேயும் எற்படுத்த பாடுபட்டோம்.

மருதமுத்து.—நீங்களெல்லாம் வழிகாட்டி அழைச்சுகிட்டு போகிற பாதையிலே நாங்களெல்லாம் வரத் தயாருங்க......நாங்க போய் வரோமுங்க......

(எல்லோரும் பிரிந்து செல்லல்)

காட்சி 14.

இடம்: செல்வநாயகத்தின் வீடு.

பாத்திரங்கள் : செல்வநாயகம், முனியன், கண்ணம்மா.

செலவநாயகம்.—என்ன ஆச்சரியம் . . . . நாம திட்டம்போட்டு வேல செஞ்சது கூட, எப்படியோ அவங்களுக்கு தெரிஞ்சுடுச்சே. . . . . .

முனியன்.—எசமான் யாரோ ஒட்டு கேட்டு உளவறிஞ்சு சொல்லியிருக்காங்க. . . . . அந்த ஐந்தாம்படை யாருன்னு முதல்லே கண்டுபிடிக்கணும். . . . . .

செல்வநாயகம் —ஒண்ணு நீ சொல்லியிருக்கணும், இல்லே.

முனியன்.—எசமான் " உப்பிட்டவரை உள்ளவும் நினை " என்ற பழமொழியை கடைப்பிடிக்கிற பேர்வழி ஒலகத்திலே யாருடான்னு, நான் ஒத்தந்தான் அது...

(பணப்பெட்டியில் உள்ள பணத்தை எடுத்து எண்ணி கணக்குப் பார்க்கிறார். அதிலே பணம் குறைவாகக் கண்டு. . . . .)

செல்வநாயகம் —என்னது கணக்கு குறையுதே. . . . யார் எடுத்திருப்பாங்க. . . . ம் எல்லாம் அதிசயமாயிருக்கே. . . . திட்டம் போட்டு செய்ய நினைத்த வேலையிலேயும் தோல்வி, இப்ப என்னடான்னு பெட்டியிலே எண்ணி வைவசிருந்தது குறையுதே. . . . . ஒருவேளை . . . . கண்ணம்மா. . . . கண்ணம்மா.

கண்ணம்மா —என்னப்பா என்ன விஷயம். . . . .

செல்வநாயகம் —ஆமாம் இதிலேயிருந்து எதாச்சியும் பணம் எடுத்தையா ? பணம் குறையுதே. . . முனியன் எடுக்கறதுக்கு வழியில்லே. . . . உம்.

கண்ணம்மா —குறைகிற பணம் குறையுள்ள வாழ்க்கையோடு வாழும் எழைக்குடும்பத்திற்கு செலவழிக்க எடுத்தேன் . . . . .

செல்வநாயகம் —ஆங் . . . அப்படின்னு . . .

கண்ணம்மா —பொதுச் சேவையிலே ஈடுபட்ட மகளை பெற்ற ஒரு தந்தை தான தருமம் செய்யாமல் பணத்தை கட்டிக்காத்தார் என்ற பழி உங்களை வந்து சேராமல் இருக்க, மாதர் நலத்திற்காக, அந்த சங்கம் செய்யும் சேவைக்காக உங்கள் பெயரில் கொடுக்கப்பட்டது. . . . . குறைகிற பணத்தை நான் தான் எடுத்தேன். . . . நல்லவங்களை வாழவிடாமல் கெடுத்துவிடவும், கறைப்பட்ட வாழ்விலே அடைப்பட்டு அல்லலுறும் எழைக்குடும்பத்தை அரசாங்கம் கடன் தந்து உதவியதைக் கேள்விப்பட்டு இழிவான செயல் செய்ய எண்ணி பழி சுமக்க இருந்தீர்களே ! அதையும் தடுத்ததும் உங்கள் மகள் தான் . . . . . தெரியுமா ?

முனியன் —எசமான். . . . . . ஐந்தாம் படை வூட்டுக்குள்ளேயே இருக்குது !

செல்வநாயகம்.—(மிக கோபத்தோடு) கண்ணம்மா. . . . . . ம், நீ இவ்வளவு தூரத்துக்கு போயிட்டியா ? வெள்ளம் தலைக்குமேலே எவ்வளவு போனாலும் பரவாயில்லே, உன் மனசுலே என்னதான் நெனச்சுக்கிட்டிருக்கே ?

கண்ணம்மா.—அப்பா ஆத்திரப்படாதீர்கள். என்னை கோடாலிக் காம்பு என்றும் கோபிக்காதீர்கள். பணம் நம்மிடமிருந்தும் பண்பு இல்லை. குணம் எழைகளிடமிருந்து கூழுக்கு வக்கில்லை.

செல்வநாயகம்.—கண்ணம்மா. . . . . கழுதே வேதாந்தமா பேசறே. . . . அந்த பண்டார பஞ்சைகளிடமே பாசங்காட்டி போ. . . படியளக்காரங்களான்னு பாத்துடறேன். . . . . . நீ என் முகத்திலேயே முழிக்காதே போ. . .

கண்ணம்மா.—அப்பா பட்ட கடனை தீர்க்க முடியாதவர்களின் வீட்டு சட்டிப் பானைகளை உடைப்பதிலேயும், வட்டிக்கு மேல் வட்டி வாங்குவதிலேயும், பட்டமரமாக மாறும் கெட்ட குடிகளை காலிலே போட்டு மிதிப்பதும் உங்களுக்கு சந்தோஷமாக யிருக்காலம். . . . . ஆனால்

ஏழைகள் வயறெறிய செய்யரவங்க வாழ மாட்டாங்க. . . . மேலும் வட்டிக்கு பணம் கொடுப்பவரின் மேல் வரி விதிப்பதற்கு பஞ்சா யத்திற்கு அதிகார முண்டு தெரியுமா ?

செல்வநாயகம்.—அப்போ நீயே போய் சொல்லிக் கொடுத் துடுவே போலிருக்கே ?

கண்ணம்மா.—சொல்வதென்ன. . . . சொல்லியாகி விட்டது. . . . . . .

செல்வநாயகம்.—கண்ணம்மா. . . . (கன்னத்தில் அறைதல்) இப்படி கெட்டலேவேன்னு நான் கனவுலேயும் நெனேக்கலே. . . . சீ. . . சீ. . . நீ என்தான் எனக்கு மகளாக பிறந்தையோ ? நீ அந்த செங்கமலத்தோட சேர்க்கை வைத்துக்கொண்ட போதே எனக்கு தெரியும். . . .

கண்ணம்மா.—ஆம் நான் அவர்களே மிகவும் நேசிக் கிறேன். . . . . இன்னும் சொல்லப்போனல் அவள் சின்ன அண்ணனே மணந்து கொள்ள வேண்டுமென்று ஆசையும் இருக்கிறது.

(மீண்டும் கன்னத்தில் அறைதல்) ஒ. . . ஒ. . . . அவ்வளவு தூரத்துக்கு வந்துட்டையா . . . கழுதே அந்த பஞைப்பயலேயா நீ கட் டிக்க போறே. . க'லப்பு கல்லியாணத்தை ஆத ரிக்க போறையா ? போவே. . போவே. . . . . . அதெல்லாம் இங்கே நடக்காது பாக்கலாம் (இழுத்துக்கொண்டு போய் அறையில் தள்ளிப் பூட்டிவிட்டு) நாளே சின்னப்பட்டியிலே யிருந்து பொண்ணுப் பாக்க வரப் போறுங்க. . . . அவங்க முன்ன அவமானப்பட இந்த செல்வநாயகம் தயாரில்லே. . . . . இந்த செல்வநாயகம் இருக்கிற வரையில் சாதி விட்டு சாதி கல்லியாணம் நடக்காது, நடக்க முடியாது, நடக்கவும் கூடாது.

(நாற்காலியில் கோபத்தோடு அமருதல். கண் ணம்மா அறைக்குள் மௌனமாக அமருதல்.)

காட்சி 15.

இடம்: ஆற்றங்கரை **பாத்திரங்கள் பாண்டியன், கண்ணம்மா.**

(ஒரு உருவம் ஆற்றில் விழ கரையில் நின்றுகொண் டிருக்கிறது. அது சமயம் தூரத்தில் விரைந்து வரும் உருவம். . . .)

பாண்டியன்.—நில். . . நில். . . விழாதே (உருவத்தின் அருகில் வந்து) கோழையே தற்கொலேயை தேடாதே. . . ஏழையாக ஆனு லும் அந்த ஈனச் செயலே கனவிலும் நாடாதே. நீ யார்!

கண்ணம்மா.—நீங்களா. . . . வந்துவிட்டீர்களா ? . . . . !

பாண்டியன்.—ஆ. . . . . . கண்ணம்மா நீயா ? நீயா இதுபோல செய்யத் துணிந்தாய் . . . . எதனுல் இந்த முடிவை நாடினுய் ?

கண்ணம்மா.—வாருங்கள் அந்த அம்மன் கோயிலில் உட்காந்துகொண்டு பேசுவோம் (கண்ணம்மா முழு விவரத்தையும் சொல்லுதல்) அதுசரி தாங் கள் போன காரியம் என்னவாயிற்று ?

பாண்டியன்.—வெற்றிக்கு மேல் வெற்றி கண்ணம்மா. . . . . .மேலும் நான் நம் கிராம பஞ்சாயத்தில் கிராம சஹாயக்காக பணியாற்ற உத்தரவும் தரப்பட்டது. கிராம சேவக்வேறே. . . கிராமசஹாயக்வேறே. . . . கிராம சேவக் முழுநேர அரசாங்க ஊழியர் . . . ஆனல் கிராம சஹாயக்கோ கிராமத்திற் காகப் பணியுரியவரும் பொது மக்களில் ஒருவர் . . . தெரிஞ்சுக்கோ. . . . . ”

கண்ணம்மா.—அப்படியா. . . . . . ? ரொம்ப சந்தே. . ாஷம். . . .

பாண்டியன்.—வா. . . . வா . . . உங்கப்பா உன்னேக் காணுமல் தேடுவார் . . . . வீட்டுக்கு போகலாம். . .

கண்ணம்மா.—வேண்டாம். . . நான் அங்கே வரமாட்டேன். . . அவர் என் தந்தையே இல்லே. . .

பாண்டியன்.—அப்படி சொல்லக் கூடாது. ஆயிரம் இரு ந்தாலும் நீ செய்வது தவறு. உன் அப்பாவை திருத்த முடியாத உன்னுல் கிராமம் எப்படி சீர் பெறும் ? நீயே முன்வந்து நடத்தும் மாதர் நல சங்கம் எப்படி வளம் பெறும் ? அதையெல்லாம் யோசித்து பார்த்தாயா ?. . .
உம். . . . வா. . .

(இருவரும் அங்கிருந்து விரைந்து போதல்).

காட்சி 16.

இடம் : செல்வநாயகம் விடு.
பாத்திரங்கள் : செல்வநாயகம், முனியன், கண்ணம்மா, பாண்டியன்,

(செல்வநாயகம் கண்ணம்மாவை காணுமல் தவியாய்த் தவிப்பது. முனியன் அக்கம் பக்கத்தில் போய் கேட்டுவிட்டு வருதல்).

முனியன்.—எசமான் அக்கம் பக்கத்திலே எல்லாம் கேட் டேன், தெரியாதுன்னு சொல்லிட்டாங்க. என்ன இருந்தாலும் உங்களுக்கு இவ்வளவு கோபம் வரக்கூடாது. . . .

செல்வநாயகம்.—சரிதான் வாயை மூடு. . . . . மகளை காணும தவிக்கிறேன். . . மனைவியாட்டம் வந்து பிரசங்கம் பண்றே. . . பிரசங்கம். . . இந்த இராத்திரநேரத்திலே எங்கேன்னு போய் தேடுவேன். . . ஒருவேளை. . . .

முனியன்.—எசமான் அப்படியெல்லாம் கண்ணம்மா நடக்காதுங்க. . . . தற்கொலை செஞ்சுக்கத்துணியாதுங்க. . . எதுக்கும் மாதர் நல சங்கத்திலே போய் பாத்துட்டுவரேன். . . . .

(முனியன் விளக்கை எடுத்துக்கொண்டு கிளம்ப அடியெடுத்து வைத்தல் அப்போது).

கண்ணம்மா.—அப்பா. . . . அப்பா. . . .

செல்வநாயகம்.—அம்மா. . . கண்ணம்மா . . . . வந்துட்டையாம்மா. . . என் வயித்திலே பால வார்த்த. . . . .

கண்ணம்மா.—இவர்தான்ப்பா என்னைக் காப்பாத்தினர். . . . . .

செல்வநாயகம்.—யாரு பாண்டியனு ? . . . . எங்கே. . . . ? எப்போ. . . . ?

பாண்டியன்.—உங்க மக ஆத்திலே விழுந்து தற்கொலை பண்ணிக்கொள்ள இருந்தப்போ ஊர்லேயிருந்து வந்துகிட்டே இருந்த நான் பார்த்தேன். . . . . காப்பாத்தினேன். .

செல்வநாயகம்.—அப்படியா. . . ரொம்ப நன்றியப்பா. . . கண்ணம்மா இனிமே உன் இஷ்டத்துக்கு விரோதமாக எதுவும் செய்யமாட்டேன். . என்ன மண்ணிச்சுடும்மா. . .

கண்ணம்மா.—அப்பா நீங்கதான் என்ன மன்னிக்கணும். . . .

பாண்டியன்.—நான் வர்ரேன்னுங்க. . . (அங்கிருந்து வேகமாக போதல்)

(பாண்டியனையே செல்வநாயகம், கண்ணம்மா, முனியன் மூவரும் பார்த்துக் கொண்டு நிற்பது).

காட்சி 17.

இடம் : அம்மன் திருவிழா.

பாத்திரங்கள் : ஆதிமூலம், வீரம்மாள், முத்துவேலன், அழகப்பன், பாண்டியன், செல்வநாயகம், கண்ணம்மா, செங்கமலம், மற்றும் பலர்.

ஆதிமூலம்.—அம்மன் தயவாலே. . . எல்லாம் நலமும் நம் கிராமத்துக்கு வந்துட்டுச்சு. . . . . இனி ஒரு குறைவுமில்லே. . . .

அழகப்பன்.—பஞ்சாயத்து ஆட்சியிலேயே செழிப்படைஞ்சு கிராமங்களிலே நம் கிராமமும் ஒன்ருக விளங்க போவதற்கு நாமே ஆதாரமாக, வழிகாட்டியாக இருக்கணும்.

முத்துவேலன்.—ஒவ்வொரு கிராமமும் இதுபோலவே சீரும் சிறப்பு பெற்ருல் வறுமையோ, பசியோ பட்டினியோ எதுவும் இருக்காது . . . என்? கனவிலும் வராது . . . காந்தி கனவு கண்ட ராமராஜ்யம் உண்டாகும்,. . . கிராம ராஜ்யத்திலே வளம் பொங்கும். . . . .

பாண்டியன்.—கூடிய சீக்கரத்திலேயே மின்சார விளக்குகள், இன்னும் பிறவசதிகளும் ஏற்படப் போகிறது. விண்ணிலே சொர்க்கலோகம், தேவலோகம் இருப்பதாக சொல்ல கேள்விப்பட்டிருக்கிரும். ஆனல் கிராம மண்ணிலே பஞ்சாயத்து நிர்வாகத்தால், மக்கள் சேவையே தன் உயர்வு என்று எண்ணி ஆட்சி புரியும் அரசாங்கத்தாரால் ஒவ்வொரு கிராமமும் பூலோக சொர்க்கமாக, தேவலோகமாக விளங்கும், விளங்கப்போகிறது ! விளங்கி வருகிறது.

செல்வநாயகம்.—(வந்தபடியே) நீங்களெல்லாம் என்னை மன்னிக்கவேண்டும். . . சுய நலத்தாலே உங்களையெல்லாம் கேவலமாக மதித்தேன். . என் வாழ்வையே பெரிதாக எண்ணினேன் . . . . . எனக்கு புத்தி வந்துவிட்டது. . .

பாண்டியன்.—" பஞ்சாயத்து ஆட்சி முறை என்ற கனவு நனவாகும் பொழுது, உண்மையான ஜனநாயகம் மலரக் காண்கிரும். அந்த நிலையில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதம் அடிப்பட்டுப் போய்விட்டது. எல்லோரும் தூய உள்ளம் படைத்தவர்களாக இருப்பதைக் காணமுடியும். மனத்தூய்மை, மனிதனின் அறிவுத்திறனுடன் இரண்டறக்கலந்துவிடவேண்டும். அந்த நிலை வரும் பொழுது, மனித சமுதாயத்திலே நிலவி நிற்கும் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வு, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற உளுத்துப்போன மனப்பாங்கு இருக்கவே இருக்காது. தன் கையால் பாடுபட்டு, பிறரை ஏமாற்ருமல், நேர்மையான முறையில் உழைத்து, தூய வாழ்வு நடத்த ஒவ்வொருவனும் விழைவான் " என்ற காந்தி மகாத்மாவின் மணிமொழி உண்மையாகிவிட்டது இன்று !

வீரம்மாள்.—எல்லாம் அம்மன் அருளாலேதான். . . அந்த அம்மன் திருவிழாவை எல்லோரும் சேர்ந்து கொண்டாடுவோம்.

(எல்லோரும் அம்மன் திருவிழாவை ஒற்றுமையுடன் கொண்டாடுகிருர்கள்.)

> **"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்**
> **ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;**
> **நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த**
> **ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"**

(என்ற பாரதியார் பாட்டு மெல்ல காற்றில் இசைந்து வருகிறது. அதை பாண்டியன், கண்ணம்மா, செங்கமலம், அழகப்பன் ஆகிய நால்வரும் கூடி நின்று பாட மற்றவர்கள் மெய்மறந்து நின்று ரசிக்கிருர்கள். திருவிழா வாணவேடிக்கையோடும், தாரை தப்பட்டைகளோடும் அமக்களமாக கொண்டாடப்படுகிறது.)

[திரை]

(முற்றும்)

கிராம நலம்-
பகுதி-௨. பஞ்சாயத்து-அரசினர் இதழ்

GRAMA NALAM
PART II PANCHAYAT GAZETTE

கிராம வேலைகள் திட்டம் 1961—62 ஆண்டுக் காலத்திலும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் செயல்படுத்தி நடத்துதல்

[Village Works Programme—Implementation during 1961—1962 and Third Five Years Plan Period—Instructions Issued.]

பூர்வாங்கம்

1961-62 ஆண்டுக் காலத்தில் கிராம வேலைகள் திட்டத்தை நிறைவேற்றும் முறைபற்றி, 1961 மார்ச் மாதத்தில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. கிராம அபிவிருத்தித் துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 664-ல் விளக்கப்பட்டு, மேற்கொண்டும் 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 211-ல் விவரிக்கப்பட்டுள்ளதுமான பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம், 1961-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 838-ல் பிறப்பிக்கப்பட்ட ஒப்படைப்பு உத்தரம் முன் வைத்து, இவை சம்பந்தமாக மாவட்டக் கலெக்டர்கள் பல விஷயங்களில் விளக்கம் கோரியுள்ளார்கள். மே இரண்டாவது வாரத்தில் உதகமண்டலத்தில் நடைபெற்ற கலெக்டர்கள் மகாநாட்டில் இந்த விஷயங்கள் மேலும் விவாதிக்கப்பட்டன. அப்படி நடைபெற்ற விவாதங்களின் பேரில், கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

2. (i) பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ள ரூபாய் 15 கோடிக்கான விவரங்கள் :

மூன்றாவது திட்டக் காலத்திற்கு என்று கிராம வேலைகள் திட்டத்திற்காக 15 கோடி ரூபாய் பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. மூன்றாவது திட்டக் காலத்தில் பிரதேச அபிவிருத்தி வேலைகள் திட்டத்திலிருந்து கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கின்ற தொகை ; மாநிலத்திற்கான திட்டத்தில் சமுதாய அபிவிருத்தி வட்டாரத் திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து கிடைக்கக்கூடிய தொகை ; கிராமக் குடித் தண்ணீர் (ஒருங்கிணைந்த) திட்டம் உட்பட குடிதண்ணீர் வழங்கும் திட்டங்களுக்காக மாநில அரசாங்கத்தினிடமிருந்து கிடைக்கின்ற நன்கொடைகள் ; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டச் சாலைகள் திட்டங்களிலிருந்து முடியாமல் எஞ்சிப் போன தேவைகலிலிருந்தும் கிராமச் சாலைகள் அபிவிருத்திக்கான கூட்டிறவு வேலைத் திட்டங்களிலிருந்தும் கிடைக்கும் தொகை ஆகிய இந்த அம்சங்களை யெல்லாம் ஒன்று திரட்டுவதன் மூலம், இந்த 15 கோடி ரூபாய்க்கு வழி வகை செய்யப்பட்டுவிடுகிறது.

(ii) வகை செய்யப்பட்டுள்ள 15 கோடி ரூபாயை உபயோகித்தல் :

மேற் குறிப்பிட்ட வகையில் திரட்டப்பட்ட நிதியானது, கிராமக் குடிதண்ணீர் வழங்குதல், கிராமச் சாலைகள் ஆகிய இரு வேலைத் திட்டங்களுக்காக மட்டிலுமே உபயோகப்படுத்தப்பட வேண்டும். இந்த 15 கோடி ரூபாய்க்கு வகை செய்யப்பட்டது கணக்கிடப்படும்பொழுது, சமுதாய அபிவிருத்தி வட்டார வரவு செலவுத் திட்டத்தின் பல்வேறு தலைப்புகளின்கீழும் கிடைக்கக்கூடிய பூராத் தொகையும் கணக்கில் எடுத்துக்கொண்டபடியால், வடிகால் வேலைகளுக்காக பண வசதி ஒன்றும் கிடைக்காது. பெருவழித் துறை சம்பந்தப்பட்ட வேலைத் திட்டங்களும், வெள்ள நிவாரண வேலைகள் என்று செய்யப்படுகின்ற சாலை வேலைகளும் தவிர, மற்ற எல்லா சாலை வேலைகளும், கிராம வேலைகள் மானியத் தொகை என்று அளிக்கப்படுகின்ற வசதிகளிலிருந்துதான் கவனிக்கப்பட வேண்டியிருக்கிறது.

(iii) பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் தேசியக் குடி தண்ணீர் வழங்கும் திட்டம் சேராது :

தேசியக் குடித்தண்ணீர் வழங்கும் திட்டத்திற்கும், துப்புரவுத் திட்டத்திற்கும் மூன்றாவது திட்டத்தில் ஒருவித திட்டமான வசதிகள் ஒன்றும் கிடையாது. ஆகவே, இரண்டாவது திட்டத்தின் தொடங்கப்பட்ட பணிகளை முடிக்க

பண வசதி, மாநிலத் திட்டத்தில் இருக்கும் வசதிகளுக் குள்ளாகவே செய்யப்பட வேண்டியிருக்கிறது. இந்தத் திட்டம், பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்டிருக்கிறது. இலாகா வேலையாக இது எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப் படும்.

(iv) உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பயன்படுத்தாமல், கிராமப் பள்ளிக் கட்டிடங்களுக்கு வழிவகை செய்தல் :

சமுதாய அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவுச் செலவுத் திட்டத்தில், கல்விக்கான தலைப்பில் ஒதுக்கப் பட்டுள்ள தொகையிலிருந்தும், கல்வித் துறையின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படுகின்ற தொகையிலிருந் தும், பிரதேச அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கான நிதிகளிலிருந்து எதிர்பார்க்கக்கூடிய தொகையிலிருந்தும் கிடைக்கக்கூடிய நிதி வசதிகளைத் திரட்டி, கிராமப் பள்ளிக் கட்டிடங்களுக்கென தனியாக இரண்டு கோடி ரூபாய்க்கு வகை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, கிராமப் பள்ளிகள் வேலைகள் திட்டத்திற்காக வேறு எந்த நிதித் தொகையும் கிடைப்பதற்கில்லை. சமுதாய அபிவிருத்தி வரவு செலவுத் திட்டத்தின்கீழ் பூராத் தொகையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டதாலும், உயர்நிலைக் கல்வி பஞ்சாயத்து யூனியனின் பொறுப்பில்லாததாலும், பள்ளிக் கட்டிடங் களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை உயர்நிலைப் பள்ளி களுக்குக் கிடைக்காது.

(v) சமுதாய நிலையங்களுக்கு (Community Centres) இல்லை :

பஞ்சாயத்து யூனியன்களில் சமூகக் கல்விக்காக, தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும் செலவுகளுக் காக உதவி மானியமாக இருக்கும் வகையில், சமுதாய அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத் தில், சமூகக் கல்விக்கென்று நிதி வசதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே, சமுதாய நிலையங்கள் ஏற்படுத்துவதற்கோ, சமு தாய அபிவிருத்திக்கான வரவு செலவுத் திட்டத்தின்கீழ் இது வரையில் செய்து வந்ததுபோல் மற்ற நிதித் தலைப்பு களுக்கு மாற்றி விடவோ, ஒரு விதமான நிதி வசதியும் கிடைக்காது.

(vi) மூன்று வகையான வேலைகள் தவிர, புதிதாக ஒன்றும் கிராம வேலைகள் கூடாது :

1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் எல்லா வட்டாரங்களிலும் பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் அமுலுக்கு வந்து விட்டது. ஆகவே 1961-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதிக்குப் பிறகு, மேலே சொன்ன மூன்று வகையான வேலைகள் தவிர, புதிதாக வேறு ஒரு கிராம வேலைக்காக அனுமதி அளிக்கப்படமாட்டாது.

3. (i) அரசாங்க மானியங்களுக்கும் முதலீடுகளுக்கும் உள்ள தொடர்பு :

கிராம வேலைகளுக்காக, மூன்றாவது திட்டக் காலத்தில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் நிதி ஒதுக்குதல் என்பது, 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதியிட்ட அர சாங்க ஆணை எண் 211-ன் இணைப்பில் பாராக்கள் 24-லி லும் 39-திலும் வகுத்துக் காட்டியுள்ள விதி முறை களின்படி நிர்ணயிக்கப்படவேண்டும். குடித்தண்ணீர் வழங் குதலுக்கும், கிராம ரோடுகளுக்கும் என்று ஐந்தாண்டு திட்டக் காலத்திற்கு முறையே குறைந்த பட்சமாக ரூபாய் இரண்டு லட்சமும், உயர்ந்த பட்சமாக ரூபாய் நான்கு லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமப் பள்ளி வேலை களுக்காக, மூன்றாவது திட்டக் காலத்தில் ஏற்படுத்தப் படுகிற ஒவ்வொரு புதுப் பள்ளிக்கூட இடம் ஒவ்வொன்றுக் கும் 15 ரூபாய்க்கு சமமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி வசதிகள் வட்டாரத்திற்குக் கிடைக்கக் கூடிய அரசாங்க மானியத் தொகைகளே ஆகும். வேலைகளுக் கான முதலீடு (outlay) பிரதேச நன்கொடைகளையும் சேர்த்துத்தான் இருக்கும். ஆகவே எல்லா வட்டாரங் களிலும் குடிதண்ணீர் வழங்கு வேலை சம்பந்தப்பட்ட வரை முதலீடு ஒதுக்கிடு நூற்றில் எழுபத்தைந்து பங்காக இருக்கும். ரோடுகளைப் பொறுத்த வரையில், இந்த முதலீடு, ஒரு வட்டாரம் ஏ, பி, சி, டி என்ற முறையில் எந்த வகையில் வகைப்படுத்தப்படுகிறதோ அதைப் பொறுத்து, ரோடுகளுக்கு என்று ஒதுக்கப்படுகின்ற அரசாங்க மானியத்தில் முறையே நூற்றில் ஐம்பது மடங் காகவும், நூற்றில் அறுபது மடங்காகவும், நூற்றில் எழுபது மடங்காகவும், நூற்றில் எண்பது மடங்காகவும் இருக்கும். பள்ளி வேலைகளைப் பொறுத்த வரையில், இந்த முதலீடு அனுமதிக்கப்படுகின்ற அரசாங்க மானியத் தொகைக்கு இரு மடங்காக இருக்கும்.

(ii) அதிகப்படியான பிரதேசவசதிகளைத் திரட்டுவதிலும் அதிகப்படியான வேலைத் திட்டங்களுக்கு நிதிவசதி செய்வதிலும் பஞ்சாயத்து யூனியன்களுக்குள்ள உரிமை :

பஞ்சாயத்து யூனியன்கள் பெரிய அளவில் கிராம வேலைகள் திட்டத்தையோ, கிராமப் பள்ளி வேலைத் திட்டத்தையோ, தங்களுடைய சொந்த ஆதாரங்களிலிருந்து நிதி, வசதிகள் செய்துகொள்வதன் மூலம், தாராளமாக மேற்கொண்டு செய்யலாம். வேண்டிய பணத்தை பிரதேச செஸ் சர்சார்ஜ் மூலம் அவைகள் திரட்டலாம். அதற்காக, அரசாங்கத்திலிருந்து ஈட்டு மானியம் கிடைக்கும். பெரிய அளவில் செய்யப்படுகிற பள்ளிக் கட்டிட வேலைத் திட்டத் திற்கு இந்த தொகை பயன்படுத்தப்படலாம்.

(iii) கிராமப்பள்ளிக் கட்டிடங்களுக்கு நிதிகளைத் திருப்பி விடுதல் சில சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்படுகிறது :

கிராம வேலைகள் திட்டத்திற்காக (குடிதண்ணீர் வழங்கு தல், சாலைகள்) செய்யப்பட்டுள்ள நிதி வசதிகள் இந்த இரண்டில் தனித்தனியாக ஒவ்வொன்றிற்கும் என்று

மேலும் பிரித்து ஒதுக்கப்படவில்லை. ஆனால், கிராமப்பள்ளி வேலைகளுக்கென்று நிதி வசதி தனியாகவே செய்யப்பட்டுள்ளது. பள்ளி வேலைகளுக்காக அளிக்கப்பட்டுள்ள நிதி வசதிகள் கொஞ்சங்கூட போதாமல் உள்ளது என்று முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆகவே, எந்த வட்டாரத்திலாவது, குடிதண்ணீர் வழங்குதல், ரோடுகளை இணைத்தல் ஆகிய வேலைகளுக்கான கிராம வேலைகள் மானியத் தொகை முழு அளவுக்கு உபயோகப்படுத்தப் படாமல் உள்ளூர் நிலை அதற்கு சாதகமாக இல்லை யென்ற நிலை தென்பட்டால், அந்த நிலையில் அந்த வட்டாரத்தில் கிராம வேலைகள் மானிய ஒதுக்கீட்டில் மிச்சம் இருக்கிற தொகை கிராமப் பள்ளிக் கட்டிடங்களுக்கென மாற்றி உபயோகப்படுத்தப்படலாம்.

(iv) இரண்டாவது திட்டத்தில் முடியாமல், இன்னும் எஞ்சி இருக்கும் வேலைகளைத் தொடர்ந்து செய்தல் :

இரண்டாவது திட்டக் காலத்தில் முடிக்க முடியாமல் எஞ்சிய கிராம வேலைகளும் (கிராமக் குடிதண்ணீர் வழங்குதல்—கிராம ரோடுகள்) கிராமப் பள்ளி வேலைகளும் பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கிராம வேலைகள், கிராமப் பள்ளி வேலைகள் ஆகியவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி வசதிகளை முதலாகப் பெறும். இந்த வேலைகளை முடிப்பதற்காக அளிக்கப்படும் அரசாங்க மானியத்தை பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள நிதி வசதிகளுக்கு எதிராக கணக்கு வைக்கப்படும். ஆனால், கிராம வேலைகள், கிராமப் பள்ளி வேலைகள் தவிர மற்ற வேலைகளை முடிக்கத் தேவையான அரசாங்க மானியத் தொகை பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் அதற்கெதிராக கணக்கு வைக்கப்பட மாட்டாது. முன்பே வலியுறுத்திக் கூறியுள்ளமாதிரி, இந்த மூன்று வேலைத் திட்டங்கள் தவிர, மற்ற புது வேலைகள், பிரதேச அபிவிருத்தி வேலைகள் அல்லது சமுதாய அபிவிருத்திக்கான வட்டார வரவு செலவுத் திட்டம் அல்லது கிராமக் குடிதண்ணீர் வழங்கும் ஒருங்கிணைந்த திட்டம் ஆகிய இவைகளின்கீழ் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்குப் பிறகு அனுமதிக்கப்படக்கூடாது. கிராம வேலைகள் தவிர, இரண்டாவது திட்டத்திலிருந்து எஞ்சிய மற்ற வேலைகளுக்கு அரசாங்க மானிய வசதி கிடைக்கத் தனியாக வசதி செய்து தரப்படும்.

(v) நன்கொடை விகிதாச்சாரம் :

1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்குப் பிறகு அனுமதிக்கப்பட்ட கிராம வேலைகளுக்கும், கிராமப் பள்ளி வேலைகளுக்கும், 1960-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 16-ம் தேதியிட்ட கிராம அபிவிருத்தித் துறை அரசாங்க ஆணை எண் 664-லிலும், 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதியிட்ட கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறை அரசாங்க ஆணை எண் 211-லும் வரையறுக்கப்பட்டுள்ள நன்கொடை விகிதாச்சாரம் பொருந்தும். அந்த தேதிக்கு முன்னால் அனுமதிக்கப்பட்ட வேலைகளுக்கு அனுமதிக்கப் பட்ட காலத்தில் பொருந்தக்கூடிய பொது நன்கொடை விகிதாச்சார அடிப்படையில் இவை முடிக்கப் பெறும். இந்தப் புதிய பொது நன்கொடை விகிதாசாரத்தை கணக்கிட, 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 613-ன் படி மாவட்ட அபிவிருத்தி மன்றங்களால் முடிவு செய்யப்பட்ட ஏ, பி, சி, டி என்ற பிரிவு முறை அடிப்படையாகக் கையாளப்படலாம். செய்யப்பட்ட மண்ணெடுப்பு வேலைகளுக்கான செலவுத் தொகை 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்குப் பிறகு அனுமதிக்கப்பட்ட ரோடு வேலைகளுக்கான மொத்த முதலீட்டில் சேர்த்துக்கொள்ளப்பட தகுதியுடையவையாகும். அந்தச் செலவுத் தொகை 1960-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 664-லும், 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 211-லும் கண்டுள்ள புது விதி முறைகளின்படி பங்கிட்டுக் கொள்ளப்படலாம்.

4. (i) குறிப்பிட்ட ஆண்டில் பெறப்படுகிற மானியத்தை விட அனுமதிக்கப்பட்ட தொகைகள் அதிகமாக இருக்கவேண்டும். 1961–66 ஆண்டுகளுக்காக திட்டமிடப்பட்டுள்ள மொத்த முதலீட்டுத் தொகையில் 1961-62 ஆண்டுக்கான தொகை அரைப்பங்களவுகூட இருக்கலாம்.

புதிய பஞ்சாயத்துச் சட்டத்தை அமுல்படுத்தி செயல்படுத்தும் பணியில் பஞ்சாயத்துக்கள், பொதுமக்கள் ஆகியோரிடையே உற்சாகத்தையும், உத்வேகத்தையும் தூண்டபடவேண்டி, நடைமுறை ஆண்டான 1961–62ம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவில் பிரதேச வேலைகள் திட்டத்தை செயல்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகிறது. புதிய மாறுதலின் முக்கியத்துவத்தையும் விசேஷத்தையும் குறிப்பிட்டுக் காட்டுகின்ற பெரிய அளவில் திட்டமிட்ட வேலையை இப்படிப்பட்ட முறையில் செயல் படுத்தும் பொழுது, ஆரம்ப நிலையில் ஏதாவது சோர்வு ஏற்பட்டு விடுமேயானால், பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகள் செம்மையாக நடைபெறுவதற்கு அது ஊறு செய்யும். பள்ளிகள் தவிர மற்ற கிராம வேலைகளுக்குப் பதினைந்து கோடி ரூபாய்க்கும், கிராமப் பள்ளிகளுக்கு என்று இரண்டு கோடி ரூபாய்க்கும் வசதி செய்து தரப்பட்டு இருப்பதால், நடைமுறை ஆண்டில் இந்த முதலீட்டில் ஐந்தில் ஒரு பாகம் செலவிடப்பட வேண்டுமென்று மாநில அரசாங்கம் விரும்புகிறது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் வேலைகள் மானியம் மூலமாகக் கிடைக்கும் உச்ச வரம்பு எவ்வளவு என்பது, 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 211-ன் இணைப்பில் உள்ள

பாராக்கள் 24-லினும், 39-லும் காட்டப்பட்டுள்ள விதி முறைகளின்படி கணக்கிடப்பட்டு அந்தத் தொகை இப்பொழுது தெரிந்திருக்கும். நடைமுறை ஆண்டில் அரசாங்கம் அளிக்கும் இந்த மானியத் தொகையில் 20 சத விகித அளவை இணைத்துக்கொள்ள ஒவ்வொரு வட்டாரமும் முனையவேண்டும். கிராம வேலைகள் மானியம் சம்பந்தப்பட்ட வகையில் இந்த தொகையானது ரூபாய் நாற்பது ஆயிரத்திலிருந்து ரூபாய் எண்பது ஆயிரம் வரை மாறி மாறி இருக்கும். பல வட்டாரங்களில் இந்தத் தொகை கடைசியாகச் சொல்லப்பட்டத் தொகைக்கு நெருக்கமாக இருக்குமே தவிர, முதலில் சொல்லப்பட்ட தொகைக்கு நெருக்கமாக இராது. ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அனுமதிக்கப்பட்ட வேலைகள் அந்த ஆண்டிற்குள் முடிக்கப்படாமல், அடுத்த ஆண்டிலும் தொடர்ந்து செய்யப்பட வேண்டி வருவது என்பது பொதுவாக அனுபவத்தின்பேரில் தெரியவருகிறது. பொதுவாக அனுமதிக்கப்பட்ட எல்லா வேலைகளுக்குமான தொகையில் சுமார் 40 சத விகிதத் தொகைதான் உண்மையாக அந்த ஆண்டில் செலவிடப்படுகிறது என்பது அனுபவத்திலிருந்து தெரிகிறது. ஆகவே, ரூபாய் நாற்பது ஆயிரத்திலிருந்து ரூ. 80,000 வரையிலுள்ள, அரசாங்க மானியத் தொகையை இணைத்துக்கொள்ள, ரூபாய் ஒரு லட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு லட்சம் வரை மானியத் தொகையைத் தரக்கூடிய ஒரு வேலைகள் திட்டமானது, செயல்படுத்துவதற்கென்று அனுமதிக்கப்பட வேண்டும். முதலீட்டில் அரசாங்க மானியமென்பது ஒருசத விகித அளவில்தான் உள்ளது என்பதனுலும், பிரதேச நன்கொடைகளின் பங்கும் முதலீட்டிலேயே சேர்க்கப்பட்டிருப்பதினுலும், மூன்றுவது திட்டக் காலத்தின் முதல் ஆண்டில் ஒரு வட்டாரம் எவ்வளவு அரசாங்க மானியத்தைப் பெறத் தகுதியுடையதோ, அந்த அளவுக்கு இரண்டரை மடங்கு அதிக அளவில், வேலைகளின் பேரில் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையானது இருக்க வேண்டும். அதாவது, மூன்றுவது திட்டக் காலத்தில் திட்டமிடப்பட்ட எல்லா வேலைகளின் சுமார் சத 50 விகித அளவு வேலைகள் முதல் ஆண்டிலேயே அனுமதிக்கப்பட்ட வேண்டும். மூன்றுவது திட்டக் காலத்தில் திட்டமிடப்பட்ட முதலீட்டுத் தொகையில் 50 சத விகித அளவை மொத்த அனுமதிக்கப்பட்ட தொகையானது அடைய, இந்த 50 சத விகித அளவில், தொடர்ந்து செய்யப்பட வேண்டிய வேலைகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அவைகளுக்காக, புதிய அனுமதிகளும் பிறப்பிக்கப்பட வேண்டும்.

(ii) மேற்சொன்னவை கீழே விளக்கிக் கூறப்பட்டுள்ளன. மூன்றுவது திட்டக் காலத்தில் கிராம வேலைகளுக்கென்று அளிக்கப்படும் மானியமாக ரூ. 4 லட்சம் அதாவது ஓர் ஆண்டுக்கு ரூ. 80,000 ஒரு வட்டாரம் பெற லாயக்குடையது. அந்த வட்டாரம் 'ஏ' வகுப்பு யூனியனுக பிரிக்கப்பட்டுள்ளது என்று வைத்துக் கொள்வோம். ரூபாய் 20,000 ரோடுகளை இணைப்பதற்காகவும், ரூபாய் 60,000 கிராமக் குடிதண்ணீர் திட்டத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் வைத்துக் கொள்வோம். அப்படி என்றுல், ரோடுகளை இணைப்புக்கான முழு மானியத் தொகையையும் கிராமக் குடித்தண்ணீர் திட்டத்தின்கீழ் ரூ. 80,000-யும் பெற வேண்டுமென்றுல், 40,000 ரூபாய்க்குச் மதிப்புடைய வேலைகள் செய்யப்பட வேண்டும். இப்பொழுது வேலையின் மொத்த மதிப்பு ரூ. 1,20,000 ஆகிறது. இந்த வேலையின் மதிப்புத் தொகையைப் பெற வேண்டுமென்றுல், அதற் கிரண்டரை மடங்கு அளவாகிற [$2\frac{1}{2} \times 1{\cdot}2 =$ ரூ. 3 லட்சம்] மதிப்பீட்டானது அதே ஆண்டில் அனுமதிக்கப்பட வேண்டும். அதே போல, கிராமப் பள்ளி வேலைகள் சம்பந்தமாக, தோற்றுவிக்கப்படுகிற ஒவ்வொரு பள்ளி இடத்திற்கும் ரூ. 7·5-க்குச் சமமான அரசாங்க மானியத் தொகையைப் பெற, (தொடர்ந்து செய்யப்படுகிற வேலைகளின்பேரில் உள்ள முதலீட்டையும் சேர்த்து) அனுமதிக்கப்பட்ட வேலைகளின், மொத்தச் செலவுத் தொகையை அடைய 1961-62-ல் புதிய அனுமதிகள் பிறப்பிக்கப்படலாம்.

5. இப்பொழுது மாநிலத்தில் 204 வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டு செயல் புரிந்து வருகின்றன. அத்துடன், 28 முதல் நிலை வட்டாரங்கள், 5 இரண்டாம் நிலை வட்டாரங்கள், ஒரு சமுதாய அபிவிருத்தி வட்டாரம், 48 மாதிரி வளர்ச்சிப் பணி வட்டாரங்கள், (Pre-Extension) 88 வரப்போகும் வட்டாரங்கள் (Shadow Blocks) உள்ளன. இந்த 170 வட்டாரங்களில், 159 வட்டாரங்களில் 2-10-61-ல் பஞ்சாயத்து யூனியன்கள் துவக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் இரண்டு தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள் 204-ன்வசம், தமிழ்நாடு சாயத்துக்கள் சட்டத்தின் 66-வது பிரிவின் கீழ், சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தை ஒப்படைக்கின்ற வேலை முடிவடைந்து விட்டது மூன்றுவது தொகுதி யூனியன்களைப் பொறுத்த வரையில், இந்த ஒப்படைக்கும் வேலை 1-1-62-ல் முடிவடைந்து விடும். அப்படி ஒப்படைக்கும் தேதி வரையில் கிராம வேலைத் திட்டங்களை வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் மேற்கொண்டு செயல்படுத்துவார்கள். உப கஜானுவில் பில்களில் கையெழுத்திட்டு பணம் பெற்று சம்பளங்களைப் பட்டுவாடா செய்வார்கள். ஒப்படைக்கப்பட்ட தேதிக்குப் பின்னுல், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களாகவும் உள்ள வட்டாரஅபிவிருத்தி அதிகாரிகள், வேலைகள் திட்டத்தைப் பொறுத்த வரையில், உப கஜானுவின் பில்க்ளில் கையெழுத்திட்டு பணம் பெறுகிற அதிகாரிகளாக இயங்க முடியாது. ஆகவே, கிராம வேலைகள் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அனுசரிக்க வேண்டிய வேலை முறையானது, ஒப்படைக்கப்படாத வட்டாரங்களிலிருந்து ஒப்படைக்கப்பட்ட வட்டாரங்களில் உள்ள முறைக்கு மாறுபடும்.

6. (i) ஒப்படைக்கப்படாத வட்டாரங்களில் கையாள வேண்டிய முறை :—முழு உருவம் பெற்ற வட்டாரங்களாக இருந்தாலும், வரப்போகும் வட்டாரங்களாக இருந்தாலும், ஒப்படைக்கப்படாத வட்டாரங்களில் கையாளப்பட வேண்டிய வேலை முறைகள் பற்றி அடியிற் கண்ட பாராக்களில் விவரிக்கப்படுகின்றன. அவைகள் பஞ்சாயத்து யூனியனாக மாறினல் கூட, இந்த 159 யூனியன்களில் ஒப்படைக்கின்ற வேலை நடக்கின்ற 1-1-62 தேதி வரையில், இந்த விதி முறை தான் அனுஷ்டிக்கப்பட வேண்டும். 11 வட்டாரங்களில் (கன்யாகுமாரி மாவட்டத்தில் உள்ள 9 வட்டாரங்களையும் சேர்த்து) இந்த உத்தரவுகள், மறு உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் வரை, செல்லுபடியாகும்.

(ii) இந்த வட்டாரங்களில் செய்யப்படப்போகும் வேலைத் திட்டத்தை இரு வகையாகப் பிரிக்கலாம்: இரண்டாவது திட்டக் காலத்தில் முடிவு பெறமல் எஞ்சிய வேலைகள், 1-4-61-க்குப் பிறகு அனுமதிக்கப்பட்ட புதிய வேலைகள் என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். எல்லா எஞ்சிய வேலைகளும் வேலைத் திட்ட முறையில் ஒரு மாறுதலும் இல்லாமல், முடிவு பெறப்பெறும். அதற்கான செலவும் செய்யப்படும். வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், உப கஜானக்களில் பில்களைக் கொடுத்து பணம் பெற்று, இது வரையில் எந்தத் தலைப்புக்களில் பற்று வைத்து வந்தனரோ, அந்த தலைப்புகளின்மீதே செலவையும் பற்று வைத்துக்கொண்டு வருவார். 1-4-61-ல் பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் அமுலுக்கு வந்துள்ளதினல், கிராம வேலைகளு (கிராமக் குடித் தண்ணீர் திட்டம், ரோடுகள்) க்காக ஆகும் செலவுகளும், கிராமப் பள்ளி வேலைகளுக்காகும் செலவுகளும் மட்டும்தான் வட்டாரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள ஒதுக்கீட்டுக்கு எதிராக கணக்கில் கொள்ளப்படும். இரண்டாவது திட்டக் காலத்தில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து செய்யப்பட்டுவரும் மற்ற வேலைகளுக்கான செலவை சமாளிக்கத் தேவையான நிதியை, அததற்கான மாநில தலைப்புகளுக்கு எதிராக தொடர்ந்து பற்று வைக்கப்பட்டு வந்தாலும், அவை திருத்த மதிப்பீடுகள் உருவாக்கப்படும் பொழுது, தனித்தனியாகக் காட்டப்பட வேண்டும்.

(iii) 1-4-61-க்குப் பிறகு அனுமதிக்கப்படுகின்ற வேலைகள் என்று கிராமக் குடித் தண்ணீர், கிராமச் சாலைகள், கிராமப் பள்ளிக்கூட வேலைகள் மட்டும் தான் இருக்க வேண்டும். ஒரு தனிப்பட்ட வேலைக்கென முதலீடு ரூபாய் நாற்பதாயிரத்துக்கு மேல் போகக்கூடாது. பல்வேறுபட்ட நிர்வாக, தொழில் நுணுக்க அதிகாரிகளால் இது வரையில் அனுபவிக்கப்பட்டு வந்த அதிகாரங்களும், தொழில் நுணுக்க சம்பந்தமான அனுமதிகளும் தொடர்ந்து மாறுபடாமல் அப்படியே இருக்கும். புதிய வேலைகள், வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள், கலெக்டர்களால் இந்த வட்டாரங்களில் அமைக்கப்பட்டுள்ள வட்டார ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்து, அனுமதிக்கப்படும். மேலே 4 (i), 4 (ii) பாராக்களில் குறிப்பிட்டுள்ளபடி, அனுமதிக்கப்பட்ட முதலீட்டின் மொத்தத் தொகை, மூன்றாவது திட்டக் காலத்தில் இந்த வட்டாரத்தில் இந்த வேலைகளுக்காக மொத்த முதலீட்டில் 50 சதவிகித அளவுக்கு வருகின்ற வகையில், வேலைகளுக்கான புது அனுமதிகள் பிறப்பிக்கப்பட வேண்டும். இப்படி அவை பிறப்பிக்கப்படும் பொழுது, (கிராமக் குடி தண்ணீர்த் திட்டம், கிராம வேலைகள், கிராமப் பள்ளிகள்) ஆகிய மூன்று வேலைகளில், முன்பே அனுமதிக்கப்பட்டு இரண்டாவது திட்டக் காலத்திருந்ப் பிறகு எஞ்சியுள்ள வேலைகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இந்த அனுமதிகள் விரைவில் காலதாமதம் இல்லாமல் பிறப்பிக்கப்படவேண்டும். ஒப்படைக்கும் தேதி வரையில், வட்டார அபிவிருத்தி அதிகாரிகளும், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளும் பில்களைத் தயாரித்து, பணத்தைப் பெற்று, இந்த வேலைகளுக்காக முழுதாகவோ, பகுதியாகவோ பணம் கொடுக்கலாம்.

(iv) சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வட்டார அபிவிருத்தி அதிகாரிகளைப் போலவே, மாதிரி வளர்ச்சிப்பணி வட்டாரங்களில் வட்டார அபிவிருத்தி அதிகாரிகளும், வரப் போகிற வட்டாரங்களில் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் என்று நியமனம் செய்யப்பட்டுள்ள வட்டார அபிவிருத்தி அதிகாரிகளும், பிரதேச அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக அதே அளவுள்ள நிர்வாக அனுமதிக்கான அதிகாரங்களைச் செலுத்தத் தகுதியுடையவர் ஆவார்கள்.

(v) முதல் நிலை, இரண்டாம் நிலை வட்டாரங்களில் 1-4-61-க்குப் பிறகு அனுமதிக்கப்படுகிற புதிய வேலைகளைப் பொறுத்த வரையில், கிராமக் குடித் தண்ணீர் வேலைகளுக்காகும் செலவானது "47-ஏ-பி. அபிவிருத்தி திட்டங்கள்—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலைத் திட்டங்கள்- IV சுகாதாரம்-கிராமத்துப்புரவு-1. வேலைகள்" என்ற தலைப்பிலும், கிராம ரோடுகளுக்காகும் செலவானது "VII போக்கு வரத்து-1 வேலைகள்" என்றஅதேதலைப்பிலும்,கிராமப் பள்ளி வேலைகள் "V கல்வி 1-வேலைகள்" என்ற அதேதலைப்பிலும் பற்று வைக்கப்பட வேண்டும். ஹரி ஜனங்கள், மற்றும் வரையறுக்கப்பட்டுள்ள பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக செய்யப்படுகின்ற வேலைகள், ஹரிஜன நல மானியத்திலிருந்து நன்கொடையைத் தொடர்ந்து பெறத் தகுதியுடையவையாகும் என்பதை இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும்.

(vi) மாதிரி வளர்ச்சிப் பணி வட்டாரங்களிலும், வர போகும் வட்டாரங்களிலும் 1-4-61-க்குப் பிறகு அ

மதிக்கப்படுகிற புதிய வேலைகள் சம்பந்தமாக ஏற்படும் செலவுத் தொகையானது அதற்குப் பொருத்தமான விவரத் தலைப்புகளாக, கிராமக் குடி தண்ணீர், சாலை வேலைகள், பள்ளிக்கூட அபிவிருத்தி பிரிவில் "47-ஏ (எ) சாதாரணமானவை-(iii) பிரதேச அபிவிருத்தி வேலைகள்" என்ற தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(vii) இந்த வேலையை நடை முறையில் உண்மையாகச் செயல் படுத்தும் பொழுது, கூடுமான வரையில் இந்த வேலைகள், ஒப்பந்தப் புள்ளிகள் கேட்டு வரவழைத்துப் பார்க்காமலேயே, பஞ்சாயத்துக்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதாச்சாரத்தில் (Rates) அவைகளிடமே இந்த வேலைகளை செயல் படுத்துகின்ற பொறுப்பானது, எவ்வளவு முடியுமோ அந்த அளவு வரையில், ஒப்படைக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது. குறிப்பிடப்பட்டுள்ள செலவு விகிதத்தில் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து இந்த வேலையை ஏற்று நடத்த சம்மதம் என்று அந்தப் பஞ்சாயத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற வேண்டும். அப்படி பஞ்சாயத்தினுல் இந்த வேலையை ஏற்று நடத்த இயலவில்லையென்றுல், பஞ்சாயத்தில் நியமிக்கப்பட்ட ஒரு தனி ஆளிடம் (Benficiary), ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்படாமலேயே இந்த வேலைகள் ஒப்படைக்கப்படலாம். இந்த வேலையை எடுத்துக் கொண்டு தானே செய்ய இயலாதென்றே, இன்னெரு ஆளை பஞ்சாயதே இதற்காக நியமிக்கவோ இயலாது என்று பஞ்சாயத்து சொல்லி விட்டால் மட்டுமே, அதன் பிறகு, ஏற்படுத்தப்பட்டுள்ள விதி முறைகளின் படி, ஒப்பந்தப் புள்ளிகளை வரவழைத்து, காண்டிராக்டர்களில் இந்த வேலை ஒப்படைக்கப்படலாம். அல்லது ஒப்பந்தப் புள்ளிகளை தள்ளி விட்டு, விதிகளில் சொல்லியுள்ள முறைப்படி யாரையாவது நியமனம் செய்யவும் செய்யலாம். இந்த வேலையை பஞ்சாயத்து ஸ்தாபனம் முழுவதற்குமாகத் தான் அளிக்க வேண்டுமே தவிர, பஞ்சாயத்துத் தலைவருக்கு அவருடைய தனிப்பட்ட ஹோதாவில் அளிக்கக்கூடாது. 22-4-1955 தேதியிட்ட அரசாங்கத்தின் பொது (கிராம அபிவிருத்தித் திட்டங்கள்) அரசாங்க ஆணை 1347-ல் கண்டுள்ள உத்தரவுகளின்படி, பஞ்சாயத்துக்கள் சமுதாய அபிவிருத்தித் திட்ட வேலைகள், பிரதேச அபிவிருத்தி வேலைகள் ஆகிய வேலைகளைத் தொடர்ந்து செய்து முடிக்க அவைகளுக்கு வசதிகள் அளிக்க வேண்டி, அரசாங்க நன்கொடையின் பங்கின் அளவுக்கு மேல் போகாமல், முன் பணத் தொகையை அவைகள் பெறலாம் என்ற நிதி வசதி உள்ளது. இந்த நிதி வசதி தாராளமாகப் பயன் படுத்திக் கொள்ள வழி முறை செய்ய வேண்டும். ஆனுல் இப்படி முன் பணம் அளிப்பதென்பது, பஞ்சாயத்தே வேலையை ஏற்று நடத்தும்பொழுது தானே தவிர, அந்த வேலை பஞ்சாயத்து பார்த்துக் கொடுக்கின்ற ஒருவரோ, அல்லது காண்டிராக்டரோ ஏற்று நடத்தும் பொழுது இடையாது.

(viii) தொழில் நுணுக்க அநுமதிகள் அளிக்கும் அதிகாரங்கள்:

தொழில் நுணுக்க அனுமதிகள் அளிக்கும் அதிகாரங்கள் கீழ்க்கண்ட முறையில் இருக்கும் :—

ரூ. 3,000 வரையில் செலவாகும் வேலைகள்—ஜூனியர் எஞ்சினியர்கள், சூபர்வைசர்கள்.

ரூ. 3,000 லிருந்து ரூ. 10,000 வரை செலவாகும் வேலைகள்—அசிஸ்டெண்ட் எஞ்சினியர்கள்.

ரூ. 10,000-க்கு மேல் செலவாகும் வேலைகள்—டிவிஷனல் எஞ்சினியர்/சூபரிண்டெண்டிங் எஞ்சினியர்.

இந்த உத்தரவு முன்பு பிறப்பிக்கப்பட்டுள்ள எல்லா உத்தரவுகளையும் செல்லாததாக்கி விடுகிறது.

(ix) சிறிய நீர்ப்பாசனத் திட்ட சிப்பந்திகள், பிரதேச அபிவிருத்தி அசிஸ்டெண்ட் எஞ்சினியர்கள் ஆகியோர்களை பெருவழித்துறை—கிராம வேலைகள் துறையின் அதிகாரத்தின் கீழ் மாற்றினதால், வேலைகளுக்கு அனுமதி அளித்தல், நிறைவேற்றல், அதற்கான செலவுக்குப் பணம் அளித்தல் என்ற வேலை முறைகளில் ஒரு வித்தியாசத்தையும் உண்டாக்காது.

7. (i) வேலைத்திட்டம் ஒப்படைக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களுக்கு மேலும் அரசாங்க அனுமதிகள் தேவையில்லை :

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் தேசீய வளர்ச்சிப் பணித் திட்டத்தை நிறைவேற்றி வைக்கின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன்கள் உள்ள வட்டாரங்களில், கிராம வேலைகளுக்கான அனுமதிகள் நிர்வாக முறையில் பஞ்சாயத்து யூனியன்களினுல் அளிக்கப்படும். வரவு செலவுத் திட்டக் குறிப்புகளில், பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் வசதி செய்யப்பட்டுள்ள கிராம வேலைகள் மானியத்தின் மொத்த தொகையில் ஐந்தில் ஒரு பாகத்தைப் பஞ்சாயத்து யூனியன்கள் கடனுகப் பெற்றுக்கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வேலைகளை ஏற்று நடத்த, மேலும் பொதுவான அரசாங்க அனுமதிகள் தேவையில்லை.

(ii) இங்குகூட, யூனியன்களில் நடைபெறும் வேலைகளை தொடர்ந்து செய்யப்படுகின்ற எஞ்சிய வேலைகள், புது வேலைகள் என்று இருவகையாகப் பிரிக்கலாம். முதலில் சொல்லப்பட்டது இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட வேண்டும். (1) கிராமக் குடித் தண்ணீர் வழங்கும் திட்டம், கிராமச் சாலைகள் வேலைகள், கிராமப் பள்ளிகள் வேலைகள் என்ற இந்த மூன்று அனுமதிக்கப்பட்ட அதிகாரம் வழங்கப்பெற்ற மூன்று வகைகளில் சேராத மற்ற வேலைகள். (2) இந்த மூன்று வகைகளோடு சேர்ந்த வேலைகள்.

(iii) ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து, பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கப்பட்ட கிராம வேலைகள் சம்பந்தப் பட்ட வரையில், யூனியன் கமிஷனர் பில்களில் கையெழுத்திட்டு பணம் பெற்று வழங்கும் ஒரு அரசாங்க அதிகாரி என்ற அதிகாரத்தை இழந்து விடுகிறார். அபிவிருத்தி மானியங்கள் சம்பந்தப்பட்ட வரையில், வேலைகள் முடிந்த பிறகு கணக்கு தணிக்கை பார்க்கப்படும் வகையில் யூனியன்களின் கணக்குகள் பிறகு தணிக்கை செய்யப்பட்டு சேர்க்கப்படும் என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஆகவே, ஆரம்பச் செலவுகள் யூனியன் நிதிகளிலிருந்தே சமாளிக்கப்பட வேண்டும். பின்பு, செலவில் அரசாங்கத்தின் பங்கை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன்கள் இதைச் செய்வதற்காக வேண்டி, ஒரு யூனியனுக்கு எவ்வளவு தொகையைப் பெற உரிமையுடையதோ, அந்த பிரதேச செஸ் சர்சார்ஜ், பிரதேச செஸ் சார்ஜ் ஈட்டு மானியத்திற்கு எதிராக முன் பணம் வழங்க அனுமதிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியால் உதவி மானியத் தொகையாக பஞ்சாயத்து யூனியனுக்கு திருப்பிக்கொடுக்க அனுமதி அளிக்கப்படும்.

(iv) ஒப்படைக்கப்பட்ட பிரதேசங்களில் தொடர்ந்து செய்யப்படும் வேலைகளுக்காக பணம் கொடுப்பது பற்றிய முறை :

எல்லா தொடர்ந்து செய்யப்பட வேண்டிய வேலைகளும், அனுமதிக்கப்பட்ட கிராம வேலைகளாக இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி, அவை முடிக்கப்பட்டு விடவேண்டும். அனுமதிக்கப்பட்ட இந்த மூன்று கிராம வேலைகள் தவிர, மற்ற வேலைகளை முடிக்க நிதி வசதிகள் கிடைக்க தனியாக வழி செய்யப்படும். 1961-62 ஆண்டுக்கு திருத்தப்பட்ட மதிப்பீடுகளை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தும் பொழுது, கலெக்டர்கள், அனுமதியளிக்கப் பட்ட இந்த மூன்று கிராம வேலைகளில் சேராமல் உள்ள மற்றபடி தொடர்ந்து செய்ய வேண்டிய வேலைக்காக செய்து முடிக்க வேண்டிய நிதி வசதிகளைப் பற்றி, குறிப்பிட வேண்டும். முடிக்காமல் உள்ள வேலைகள் முடிக்கப் பட வேண்டும். அதற்கான நிதிகளை இது வரையில் இதைச் செயல்படுத்துவதற்கும் பொறுப்பாளியாக இருந்த ஒரு அதிகாரியே, கொடுப்பார். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அல்லாமல், மற்ற ஓர் அதிகாரியால் இந்த வேலை செய்யப்பட்டிருந்தால், அதற்கான பணம் அளிப்பது நேரே மாநிலக் கணக்குத் தலைப்புகளில்பற்று வைக்கப்பட்டு உப கஜானாவில் பில்களின் மீது போதிய பணம் பெற்றுக்கொள்ளலாம். இங்குகூட பிரதேச அபிவிருத்தி வேலைகளின் உதவி இஞ்சினியர், சிறிய நீர்ப் பாசனச் சிப்பந்திகள் ஆகியோரை பெருவழி கிராம வேலைகள் துறையின் அதிகாரத்தின் கீழ் மாற்றப்பட்டிருப்பது, இது வரையில் நடைமுறையில் செயலாற்று வந்த வேலை முறையை பாதிக்கக்கூடாது. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் தவிர மற்ற அதிகாரிகளால் முடிவு பெறாமல் முடிக்க வேண்டிய வேலைகளில் மூன்று அனுமதிக்கப்பட்ட வேலைகளும் சேர்ந்திருந்தால், அப்படி நேருகின்ற செலவைப்பற்றி பஞ்சாயத்து யூனியனுக்குத் தெரியப்படுத்த வேண்டும். யூனியன் கிராம வேலைகள் மானிய ஒதுக்கீட்டுக்கு எதிராக இந்தத் தொகை கணக்கிடப்படும்.

(V) பல சந்தர்ப்பங்களில், அனுமதிக்கப்பட்ட மூன்று கிராம வேலைகளில் சேராமல் தொடர்ந்து இருக்கின்ற வேலைகள் பல பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களிடம் இருக்கும். இந்த வேலைகளும் பஞ்சாயத்து யூனியன் மிகஷனர்களால் முடிக்கப்பெற வேண்டும். பஞ்சாயத்து யூனியன் நிதிகளிலிருந்து முதலில் இதற்குப் பணம் கொடுக்கப் பட வேண்டும். அதன் பின் உதவிமானியத் தொகையை அரசாங்கத்தினிடமிருந்து பெறலாம். அனுமதி சமயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு தொடர்ந்து இருக்கிற எல்லா வேலைகளும் முடிக்கபெற வேண்டும்.

(vi) பஞ்சாயத்து யூனியன் கணக்குகள்—விவரமான குறிப்புகள் .

மூன்று அனுமதிக்கப்பட்ட வேலைகளுக்காகும் செலவுத் தொகை பஞ்சாயத்து யூனியன் கணக்குகளில் பின்வருமாறு பதிவு செய்யப்படும் :—

(i) கிராம ரோடுகள்—செலவு-முதல்-ஏ. பொதுக் கணக்கு—ii—போக்குவரத்து.

(ii) கிராமக் குடித் தண்ணீர் வழங்குதல்—செலவு—முதல்-ஏ—பொதுக் கணக்கு —சுகாதாரமும் நலனும்.

(iii) கிராமப் பள்ளிக் கட்டிடங்கள்—பி. கல்வி நிதிக் கணக்குகள்—செலவு—முதல்—கட்டிடங்கள்.

இந்த மூன்று வகைகளில் சேராமல், தொடர்ந்து செய்யப் படவேண்டிய வேலைகளுக்காகும் செலவுத் தொகையானது யூனியன் கணக்குகளில் பின்வரும் முறையில் பதிவு செய்யப்படும் —

(i) சமுதாய அபிவிருத்திக்கான வரவு செலவுத் திட்டத்தின் பொதுச் சுகாதாரம், கிராமத்துப்புரவுத் திட்டத்தின் கீழ் செய்யப்படுகின்ற வடிகால் வேலைகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வேலைகள்—செலவு—முதல் ஏ. பொதுக்கணக்கு—111—சுகாதாரம், மற்ற நலப் பணிகள்.

(ii) சமூகக் கல்வித் திட்டத்தின் கீழ் செய்யப்படுகின்ற வேலைகள்—சமுதாய நிலையங்கள்—செலவு—முதல் பி. கல்வி நிதிக் கணக்கு—மற்ற அம்சங்கள்

(iii) பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் தவிர மற்ற பள்ளிகள்—செலவு—முதல், பி.—கல்வி நிதிக் கணக்கு—மற்ற அம்சங்கள்

VII ஒப்படைக்கப்பட்ட வட்டாரங்களில் புதிய வேலைகள் சம்பந்தமாக, நிர்வாக அனுமதிகள் சம்பந்தப்பட்ட முழு அதிகாரங்களும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிடம் உள்ளன. யூனியன்களுக்கு பிப்பிக்கப்பட்ட வரவு

செலவுத் திட்ட குறிப்புகளில், அவைகள் நடை முறை ஆண்டில், மூன்ருவது திட்டக் காலத்திற்கு வட்டாரத்திற்கு கிராம வேலைகளுக்காக அரசாங்க மானிய ஒதுக்கீட்டின் மொத்த அளவில் ஐந்தில் ஒரு பங்கை எதிர்பார்க்கலாம் என்று முன்பே குறிப்பு காட்டப்பட்டுள்ளது இந்த அரசாங்க மானிய ஒதுக்கீடானது, 16–8–60 தேதியிட்ட ஆணை 664-லும், 25–1–61 தேதியிட்ட ஆணை 211-லும் சொல்லியுள்ள வழிமுறைபடி பெறப்படும். யூனியன்கள் இந்த வேலைகளை ஏற்றுக்கொண்டு செய்வதற்காக வேண்டி, யூனியன்களின் மானியங்களைத் தெரிவித்து, தனியாக அனுமதி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டிய தேவையில்லை.

(viii) இந்த புதிய வேலைகள் எல்லாவற்றிற்கும் அவை சம்மந்தப்பட்ட வரையில், பஞ்சாயத்து யூனியன் கணக்குகளில் செலவைக் கணக்கில் காட்டும் செலவு தலைப்புகள் மேலே 7-வது பாராவில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன. அரசாங்க மானியத் தொகைகளை மறுபடியும் திருப்பி பெருகின்ற முறை என்ன என்பதுபற்றியும் மேலே பாரா 7 (ii)-ல் குறிப்பிடப்பட்டுள்ளது

(ix) தொழில் நுணுக்க அதிகாரிகள் அனுமதிகள் அளிக்கின்ற தொழில் சம்பந்தமான அதிகாரங்கள், அந்த வேலைகளைச் செயல்படுத்தி வைக்கின்ற முறைகளைப் பற்றிய வரையில் பாரா 6 (vii), 6 (viii)-ல் செய்யப்பட்டுள்ள நிதி வசதிகள், ஒப்படைத்தல் எங்கெங்கு நடைபெற்றுள்ளதோ அந்த யூனியன்களுக்குப் பொருந்தும். இந்த வேலைகள் பஞ்சாயத்து யூனியன் வேலைகள் என்று கருதப்படும். அவைகளைச் செயல்படுத்துதல், திருப்பி அளந்து பார்த்தல், அவைகளுக்கு பணம் வழங்குதல் பற்றிய முறைகள் எல்லாம் பஞ்சாயத்து யூனியன் கணக்குகள் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள மாதிரி இருக்கும்.

(x) பஞ்சாயத்துக்களுக்கு பஞ்சாயத்து யூனியன்கள் கொடுக்கின்ற முன் பணங்கள் (துணைக் கணக்குகள்—ஈ—சேமிப்புக்கள்—முன் பணங்கள் கணக்கு—2. முன் பணங்கள் (i) பஞ்சாயத்து யூனியன் கணக்குகளிலிருந்து திருப்பி பெறுகின்ற முன் பணங்கள்) என்ற தலைப்பின் கீழ் கணக்கில் வைத்துக்கொள்ளப்படும் முழு பில் அளித்தோ அல்லது பகுதியாக அளித்தோ திருப்பிப் பெருகின்ற முறையில் முன் பணமானது சரிக்கட்டப்படும் பொழுது, அப்படிச் சரிக்கட்டின தொகை பாரா 7 (v)-ல் குறிப்பிட்டுள்ள பொருத்தமான செலவினத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும் மீதியுள்ள தொகை (வரவுகள்—ஈ சேமிப்புக்கள்—முன்பணங்கள் கணக்கு—2. முன் பணங்கள்—(i) திருப்பி பெறப்பட்ட முன் பணங்கள்) என்ற தலைப்பில் பற்று வைக்கப்படும்.

(xi) ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டிய மாதாந்தர செலவறிக்கை :

ஒவ்வொரு மாத முடிவிலும், ஒவ்வொரு யூனியனும் ரெவினியூ டிவிஷனல் அதிகாரிக்கு, வேலை வாரியாக ஏற்பட்ட செலவினங்கள் அடங்கிய மாதாந்தர அறிக்கையொன்றை அனுப்பி வைக்கவேண்டும். இந்த அறிக்கைகள் சரியாக உள்ளனவா என்று பார்த்த பிறகு ரெவினியூ டிவிஷனல் அதிகாரி, பஞ்சாயத்து யூனியன்களுக்குச் ஆன செலவின் அடிப்படையில் மானிய நிதி உதவிகளை அனுமதிப்பார். இந்த மானிய நிதி உதவிகளைப் பற்றியும், மானிய நிதி உதவிகளுக்காக மாநிலக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன. பற்றுத் தலைப்புகளை குறிப்பிடுகின்ற அறிக்கைகளை சமர்ப்பிப்பதுபற்றியும் விவரமான உத்தரவுகள் தனியே பிறப்பிக்கப்படுகின்றன.

(vii) உபகஜானவில் முன்னரே வரவு வைக்கப்பட்ட பொது நன்கொடைகள் :

முன்பே அனுமதிக்கப்பட்டுள்ள வேலைகளைப் பொறுத்த வரையில் பொது நன்கொடைத் தொகைகள் உபகஜானவில் முன்னமே வரவு வைக்கப்பட்டிருக்கும். ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள்—வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், பணம் பெற்று—வழங்குகின்ற அதிகாரிகளாக இருக்கின்ற நிலையில் வேலைகள் முடிந்து அதற்காகப் பணம் கொடுக்கப்பட்டால், இத்தகைய அம்சங்களினால் ஒரு தொந்தரவும் ஏற்படுவதற்கில்லை. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களால் வேலை முடிக்கப்பட்டு பணம் வழங்க வேண்டியிருந்தால், அப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சேரவேண்டிய அரசாங்க மானியத் தொகைகளை மாதா மாதம் திருப்பிப் பெற நடவடிக்கை எடுக்கும் பொழுது, கஜானவில் வரவு வைக்கப்பட்ட நன்கொடைகளையும் பெற நடவடிக்கை எடுக்கலாம்.

(viii) ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி–வட்டார அபிவிருத்தி அதிகாரிகளால் செயல்படுத்தப்படும் வேலைகள் :

இப்பொழுது ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகளால் செயல்படுத்தப்பட்டுவரும் எல்லா வேலைகளும் அவர்களாலேயே முடிக்கப்பட்டு பின்பு அவை பஞ்சாயத்துக்கள் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும், வேலைகளைச் செயல்படுத்தும் பொறுப்பு வட்டார அபிவிருத்தி அதிகாரியிடம் இருக்கின்ற நிலையிலுள்ள வேலைகள் சம்மந்தப்பட்ட வரையில், அவை ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து பஞ்சாயத்து யூனியன்களிடம் மாற்றப்பட்டு, 7 (iv), 7 (v)-ல் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளின்படி கமிஷனர்களால் அந்த வேலைகள் முடிக்கப்படும்.

8. 1961-62-ம் ஆண்டில் ஒரு வட்டாரத்திலிருந்து மற்ருெரு வட்டாரத்துக்கு நிதிகளை மாற்றுதல் :

கிராம வேலைகளின் மானியங்கள் சம்பந்தமாக ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளைச் சேர்த்துக்கொள்வதில் பல்வேறு வட்டாரங்களின் தகுதியைப் பொறுத்து, நிதிகளை ஒரு வட்டாரத்திலிருந்து இன்னெரு வட்டாரத்துக்கு மாற்றுகின்ற உரிமையைக் கலெக்டர்களுக்கு அளிக்கவேண்டுமென்று கலெக்டர்கள் மாநாட்டில் யோசனை சொல்லப்பட்டது. அரசாங்கம் இந்த யோசனையை ஆலோசனை செய்தது. அதன் பேரில் எங்கெங்கு தேவைகள் ஏற்படுகின்றனவோ, அந்த சந்தர்ப்பங்களில் 1961–62 ஆண்டுக் காலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளை ஒரு வட்டாரத்திலிருந்து இன்னெரு வட்டாரத்திற்குக் கலெக்டர்கள் மாற்றலாம் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கிறது. இப்படி செய்யும்பொழுது, எதலிருந்து இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனடதையும் கின்ற இந்த மாற்றமானது 3-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குக் கிராம வேலைகள் மானியமாக யூனியனுக்குக் கிடைக்கின்ற மொத்தத் தொகையை இது எந்த அளவுக்கும் குறைக்காது என்பதும் பஞ்சாயத்து யூனியனுக்கு விளக்கப்படவேண்டும்.

(கிராம அபிவிருத்தி தல நிர்வாகத்துறை 25-7-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2103.)

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.





4. 5—8—61 அன்று இந்திய உப் ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் செங்கற்பட்டு மாவட்ட மத்திய நூல் நிலையத்தின் பெண்கள் பகுதிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

5. உதவி ஜனாதிபதி நூல் நிலையத்தைப் பார்வையிடுகிறார்.

6. 7—8—61 அன்று அமைச்சர் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் காந்திநகர் சேவா சமாஜம் பெண்கள் பயிற்சி நிலையம், விடுதி ஆகியவற்றின் தொடக்க விழாவைக் குத்து விளக்கை ஏற்றிவைத்துத் தொடங்கி வைத்தார்.

1. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 1008-வது நூல் வெளியீட்டு விழா :

கவர்னர். ஸ்ரீ விஷ்ணுராம் மேதி அவர்கள் தலைமை வகித்தார். படத்தில் கவர்னர் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த திருக்குறள் பதிப்பு ஒன்றைப் பார்வையிடுகிறார்.

2. விழாவில் திருவள்ளுவர் திரு உருவப் படத்தை டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் திறந்து வைத்தார்.

3. இரண்டாவது நாள் விழாவுக்குத் தலைமை வகித்த டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் அவர்களிடம் அமைச்சர் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் விழாச் சிறப்பு மலரை அளிக்கிறார்.

Regd.
No. M. 7277

©
தமிழ்நாடு
அரசாங்கம்
1961.



1. திருவல்லிக்கேணி கஸ்தூரிபா கா[illegible] மீனத் தொ[illegible] லாளர் விடுதிக்கு அமைச்சர் ஸ்ரீ, எம். ஏ, [illegible] லு [illegible] டினர், விழாவில் அமைச்சர் ஸ்ரீ, கே, கக்க[illegible]ம் க[illegible] ந்து [illegible]

2. செங்கற்பட்டு மாவட்டக் கழக நூல் நிலையத்தில் 5-8—1961. அ[illegible] உபஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ படத்தைத் திறந்து வைத்தார்.

3, 4, 5, 6:—கோயமுத்தூர் செஞ்சிலுவைச் சங்கத்தின் வெள்ள நிவாரண வேலைகள்.—

சிறுமுகைபுதூர், பவானி ஆகிய இடங்களில் பாதிக்கபபட்டவர்களுக்கு அரிசி, உணவு, உடை, பணம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

7, தஞ்சை மாவட்டம் பசுபதி கோவில் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஸ்ரீமதி சாரதாம்பாள் சந்திரசேகரன் ஆடைகளை வழங்கு